...d. No. M. 2569

1227

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

மலர் 7

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 1, 2

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1354 ஷவ்வால், துல்கஃதா மீ 1936 ஹூ
ஜனவரி, பிப்ரவரி மீ

1. அல்குர்ஆன், 2. அல்ஹதீது ... 1, 4
3. ஏழாம் வயது ... 6
4. நமது ஜீவியம் வெளிப்பகட்டேயாகும் ... 8
5. அரேபியாவைக் கைப்பற்ற ஐரோப்பியரின் சூழ்ச்சி ... 11
6. பழங்காலச் செய்திகள் ... 15
7. விக்கிரகஞ் செய்வோனின் தௌபா ... 22
8. இஷாஅத்துல் இஸ்லாமும் ஹிபாஜத்துல் இஸ்லாமும் ... 26
9. ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) ... 31
10. பாபிலில் தாராவின் வெற்றி ... 35
11. ஹிபாஜத்தின் சேவை, 12. தப்ஸீர் பீர்ராய் ... 41, 43
13. ஜெர்மனியில் காதியானிகளின் குட்டு வெளிப்பட்டுவிட்டது. ... 49
14. காதியானிகளுக்கு பெரும் தோல்வி ... 53
15. சிதம்பரத்தில் சங்க ஸ்தாபனம் ... 56

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

காலண்டர்கள் வரவு

K. M. முகம்மது கவ்ஸ் அண்டு கம்பெனி:— சென்னை, நாகை, பினங், சிங்கப் ரங்கூன், இவ்விடங்களில் பிரபல வியாபாரம் நடத்தி வருபவர்களும் கமிஷன் ஏஜண் மெஸ்ஸர்ஸ். K. M. முகம்மது கவஸ் கம்பெனியாரிடமிருந்து அழகிய காலண்டர் ஒன்று பெற்றோம். அது தினம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாகவும் அதன் மத்தியில் மதீனா ராவின் அழகிய தோற்றம் அமைக்கப்பெற்றதாகவும், பிராஞ்சு ஆபீஸ்களின் நாமங்கள் வன பட்டதாகவும் தேதிகாட்டும் ஷீட்டுகளுக்குப் பக்கத்தில் இருபுறமும் ரங்கோன், மத பிராஞ்சுகளின் பெயர்களாகிய மெஸ்ஸர்ஸ். M. முகம்மது ஹுஸைன் K. M. முகம்மது செ அண்டு கம்பெனி என்று வரையப்பட்டதாகவுமிருக்கிறது.

A. M. அப்துல்லா சாஹிப் அண்டு கம்பெனி:— சிங்கப்பூர் பிரபல வர்த்தகரும் கமி ஏஜண்டுமான மெஸ்ஸர்ஸ் A. M. அப்துல்லா சாஹிப் அண்டு கம்பெனியாரிடமிருந்து அழ காலண்டர் ஒன்று சென்னையிலுள்ள அவர்களது பிராஞ்சு ஆபீஸாகிய மெஸ்ஸர்ஸ். A. M. துல்லாசாஹிப் ஸன்ஸ்மூலம் வரப்பெற்றோம். அது 12 ஷீட்களுடையதும் அரபி தமிழ் இங்கி ஆகிய மூன்று தேதிகளையும் ஒருங்கே காட்டக்கூடியதாகவும் அதன்கீழ் பார்முலா ருஷி புரோபசருடைய முறையைக்கொண்டு இவர்களால் தயாரிக்கப்படும் பாடல்பாமின் பிளா பொறிக்கப்பட்டு அதன் குணங்களும் விளக்கப்பட்டு மிக அழகாகவுமிருக்கிறது.

ஹாஜீ. முகம்மது சயீத்:— பாண்டிச்சேரி வாசியும், ஹன்னேய், ஹைப்பாங், நம்டி முதலிய இடங்களில் பிரபல வியாபாரம் செய்பவரும் பாஸன்ஜர் புரோக்கருமாகிய ஹாஜீ. த கு. முகம்மது சயீத் அவர்களிடமிருந்து 3 தேதிகளையும் அறிவிக்கக்கூடியவும், மாதம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியவுமான காலண்டர் வரப்பெற்றோம். அதில் மூன்று தேதிகளும் மூன்று கலா களிலும் பல முக்கிய தினங்களைக் குறிக்கக்கூடிய பிரத்தியேக அடையாளமும் அழகான முறை யில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

அஞ்சுமன் நுஸ்ரத்துல் இஸ்லாம்:— கோட்டைகுப்பம் அஞ்சுமன் நுஸ்ரத்துல் இஸ்லாம் சங்கத்தாரிடமிருந்து அழகிய காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அது 3 தேதிகளும் மூன்று கலர்களில் அச்சிடப்பட்டு மாதம் ஒருஷீட் கிழிக்கக்கூடியதாகவும் ஒவ்வொரு மாதத்திலுமுள்ள விசேஷ தினங்களை பிரத்தியேகமாகக் காட்டக்கூடியதாயும் அதன் தலையில் ஒவ்வொருவரும் உபதேசம் பெறும்படியான மொழிகள் தீட்டப்பட்டதாகவும் கல்வியின் மேன்மை விசேஷம் இவைகளைச் சிலாக்கித்துக் கூறப்பட்டதாகவுமிருக்கிறது.

கமால் நைனர்:— கண்டி பிரபல்ய இரும்பு வியாபாரியாகிய மெஸ்ஸர்ஸ், கமால் நைனர் கம்பெனியாரிடமிருந்து காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அது தினம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாகவும், ஒவ்வொரு ஷீட்டிலும் அரும்மொழிகளையுடைய வாக்கியங்கள் அமைந்தனவாகவும், அதன் அட்டையில் அக்கம்பெனியில் கிடைக்கும் பலவாறான சாமான்களில் முக்கியமானவைகளை விவரிக்கப்பட்டதாகவு மிருக்கிறது.

பெ. த. நைனா முகம்மது கம்பெனி:— ரெங்கூன் பிரபல மருந்து வியாபாரியாகிய மெஸ்ஸர்ஸ். பெ. த. நைனாமுகம்மது கம்பெனியாரிடமிருந்து மிக்க அழகான காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அது தினம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாயும் இங்கிலீஷ், பர்மா, அறபி, தமிழ் முதலிய தேதிகளை ஒருங்கே காட்டக்கூடியதாகவும் அத்தேதிகளின் இருபுறங்களிலும் அவர்களது வியாபாரத்தை விளக்கி இங்கிலீஷ் பர்மா பாஷைகளில் விளக்கப்பட்டதாயும் பார்ப்பதற்கு அழகானதாயுமிருக்கிறது.

A. M. S. நைனாம் சாஹிப் அண்டு கம்பெனி:— பினாங் காலக்கடை பிரபலவியாபாரியாகிய மெஸ்ஸர்ஸ். அ. மு. சு. நெய்னாம் சாயபு கம்பெனியாரிடமிருந்து அழகிய காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அது மிக்க நேர்த்தியானதாகவும் கண்கவர்ச்சியை அளிக்கக்கூடியதா வும் இங்கிலீஷ், அரபி, தமிழ் இம்மூன்று தேதிகளும் ஒருங்கே அமையப்பெற்றனவாகவும் தினம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாயும், ஒவ்வொரு ஷீட்டிலும் முதியோர் வாக்கியங்கள் மொழி யப்பட்டனவாகவும் தேதி அறிவிக்கும் ஷீட்டுக்கு இருபுறங்களிலும் ஹிந்து முஸ்லிம் பண்டிகைகளின் விபறமும் கவர்ன்மெண்டு பாங்கி விடுமுறைகளும் பொறிக்கப்பட்டிருப்பதுடன், அந்த அட்டையின் மத்தியில் அக்கம்பெனியாரின் வியாபாரக் குறிகள் மிளிர்ந்தனவாகவுமிருக்கிறது.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
20834.
சென்னை-600

حفاظة الإسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 7	ஹிஜ்ரி 1354 ஷவ்வால், துல்கஃதா மீ 1935 ஆம் ஜனவரி, பிப்ரவரி மீ	இதழ் 1, 2

அல் குர்ஆன்

நிச்சயமாக ஜனங்களுக்கு (அவர்கள் வணங்குவதற்காக) முதன்மையாக வைக்கப்பட்ட (தெய்வ) ஆலயமானது பக்கா (மக்கா)வில் இருப்பதுதான். அது பாக்கியமுள்ளதாகவும் உலகத்தாருக்கு நேர்வழி காட்டியாகவும் (இருக்கிறது). அதில் தெளிவான அத்தாட்சிகளிருக்கின்றன. இப்ராஹீம் (அலை.) நின்ற ஸ்தலம் (அவைகளில் ஒன்றாகும்). இன்னும் எவன் அதில் பிரவேசிக்கின்றானோ அவன் அச்சந் தீர்ந்தவனாகி விடுகின்றான். மேலும், அவ்வீட்டை அல்லாஹ்வுக்காக ஹஜ்ஜுச் செய்வது மனிதர்கள்மீது—அங்கு செல்லச் சக்தியுள்ளவர்மீது—கடமையாகும். இன்னும் எவன் இதை நிராகரிக்கின்றானோ (அதனால் அல்லாஹ்வுக்கு எவ்வித நஷ்டமுமில்லை) நிச்சயமாக அல்லாஹ் உலகத்தா(ர் அனைவ)ரை விட்டுத் தேவையற்றவன். (திருகுர்ஆன்)

சோதரீர்! மேலே எடுத்தெழுதப்பட்ட திருவேத வசனங்களில் கஅபத்துல்லாஹ் ஷரீபின் மகத்துவமும், அதன் பெருமைகளும் கூறப்பட்டிருப்பதுடன் ஹஜ்ஜுக்குச் செல்வது இயல்புள்ள ஒவ்வொருவருடைய கடமை என்பதையும் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. தவிரவும், கஅபத்துல்லா ஷரீபுக்குச் சென்று ஹஜ்ஜுச் செய்யவேண்டும் என்று இறைவன் கடமையாக்கியதற்குக் காரணமென்ன வென்பதும் இதில் கூறப்பட்டிருக்கிறது. ஹஜ்ஜுச் செய்வதற்காக இறைவன் கஅபத்துல்லா ஷரீபைத் தெரிந்தெடுத்ததற்குக் காரணம் மூன்று விஷயங்களாகும் என்பதை இந்த வேதவசனங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்: 1. ஆண்டவனை வணங்குவதற்காக வென்று கட்டப்பட்ட முதலாவது தேவாலயம் கஅபத்துல்லாதான்.

இவ்விஷயம் 95-வது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. முதல் முதலாக இறைவனை வணங்குவதற்காக ஏற்பட்ட இடம் பாக்கியமுள்ளதாகத்தான் இருக்கவேண்டும் என்பதும், அங்கு செல்வோருக்கு தெய்வ பக்தியும் தெய்வ வணக்கத்தில் ஆர்வமுமுண்டாகி தெய்வத்திற்கு மாறாக நடக்கவேண்டுமென்ற உணர்ச்சிமாறிவிடும் என்பதும் தெரிந்த விஷயம். இதனைத் தான் இறைவன் அதே 95-வது

வசனத்தில் "அது பாக்கியமுள்ளதாகவும் உலகத்தாருக்கு நேர்வழி காட்டியாகவும் இருக்கிறது" என்று கூறி இருக்கிறுன்.

2. "அதில் தெளிவான அத்தாட்சிகள் இருக்கின்றன" என்பது இரண்டாவது காரணம். ஹஜ்றத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் நின்று வணங்கிய இடம் அங்கிருப்பதும் இந்த இரண்டாவது காரணத்தைச் சேர்ந்ததென்றே கூறலாம். அங்கு பிரவேசிப்பவர்கள் அச்சந்தீர்ந்தவர்களாகி விடுகிறுர்கள் என்பது மூன்றுவது காரணம்.

இது எந்த விதத்தில் உலகத்தில் இறைவனை வணங்குவதற்காக முதல் முதலாகக் கட்டப்பட்ட ஆலயம் என்பதை கவனிப்போம்: மனிதவர்க்கத்திற்கு மூல பிதாவான ஹஜ்றத் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் அல்லாஹு தஆலாவின் கட்டளையை மறந்து, விலக்கப்பட்ட மரத்திலிருந்து புசித்ததால் சுவர்க்க லோகத்தை விட்டு இப்புவிக்கு அனுப்பப்பட்டார்கள். இப்புவியில் ஹஜ்றத் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் வெகுகாலம்வரை பாபமன்னிப்புக் கேட்டுக்கொண்டிருந்து இறுதியாக அவர்களுடைய தௌபா ஒப்புக்கொள்ளப்பட்ட பின் தங்களது மனைவியும் மனிதவர்க்கத்தின் தாயுமான ஹஜ்றத் ஹவ்வா அலைஹிஸ்ஸலாமை முதல் முதலாகச் சந்தித்தது அரபாத் என்ற மைதானத்தில்தான். பிறகு இருவருமாகக் குடும்ப வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தபோது இறைவனை வணங்குவதற்காக ஒரு ஆலயத்தை உண்டு பண்ணினுர்கள். அந்த ஆலயம் இப்பொழுது கஅபா இருக்குமிடத்தில் இருந்தது. ஹஜ்றத் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் அந்த ஆலயத்தில் இருந்துகொண்டு இறைவனை வணங்கியதுடன் அங்கிருந்துகொண்டுதான் தங்களது நபித்துவத்திற்குரிய பொறுப்புகளையும் நிறைவேற்றி வந்ததுடன் தங்கள் மக்களிடம் இஸ்லாமியப் பிரசாரமும் செய்து வந்தார்கள்.

ஹஜ்றத் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களுக்குப் பிறகு ஏற்பட்ட பெரும் பிரளயத்தில் அவ்வாலயம் இடிந்து சேதமடைந்து விழுந்துவிட்டது. ஆனால், அது இருந்த இடம் மாத்திரம் சிறு மேடையைப் போல் அடித்தளத்துடன் இருந்தது. பிறகு, தோன்றிய ஹஜ்றத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் தங்களது அருமைப் புதல்வராகிய ஹஜ்றத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமவர்களை இவ்வாலயம் இருந்த வனத்தில்தான் இறைவன் கட்டளைப்படி கொண்டுவந்து விட்டார்கள். இறைவன், பாலகராகவுள்ள இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமவர்களையும் அவர்களது அருமை மாதா பீபி ஹாஜராவையும் மனித சஞ்சாரமும் விவசாயத்திற்கு வசதியில்லாததுமான இவ்வனத்தில் அற்புதமாகக் காப்பாற்றியதுடன் "ஜம், ஜம்" என்ற கிணற்றையும் அங்கு உற்பத்தி செய்தான்.

பிறகு ஹஜ்றத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவன் கட்டளைப்படி தங்களது மைந்தர் ஹஜ்றத் இஸ்மாயீல் (அலைஹி) அவர்களைத் துணையாகக் கொண்டு இவ்வாலயத்தின் அடித்தளத்திலிருந்து இவ்வாலயத்தை மறுபடியும் உயர்த்திக் கட்டினுர்கள். அத்துடன் இவ்வாலயத்திலேயே இருந்து இறைவனை வணங்கிக்கொண்டிருக்க வேண்டும் என்றும், இவ்வாலயத்திற்கு ஊழியம் செய்து அதனைப் பரிபாலித்து வரவேண்டும் என்றும் திட்டம் செய்தார்கள். அப்பால் இவ்வாலயத்தைக் கட்டிய பணியை ஏற்றுக்கொள்ளவும், இங்கு குடியேற்றிய தங்களது சந்ததியினருக்குக் கனிவர்க்கங்கள் கொடுத்து அவர்களைக் காப்பாற்றவும், இங்கு குடியேற்றப்பட்ட தங்களது சந்ததியில் ஒரு நபியை அனுப்பி வேதத்தையும் விவேகத்தையும் கற்பித்து ஜனங்களை பாவம் என்ற அழுக்கை விட்டுச் சுத்தப்படுத்த வேண்டும் என்றும் பிரார்த்தனை செய்தார்கள். இப்பிரார்த்தனையை இறைவனும் அங்கீகரித்துக் கொண்டான்.

மனித சஞ்சாரமில்லாமல் வனமாக இருந்த இந்தப் பிரதேசம் கஅபா என்ற இவ்வாலயம் இருந்ததன் காரணமாக ஜனங்கள் போக்குவரத்துச் செய்யக் கூடிய இடமாக மாறி ஊராகவும் பட்டணமாகவும் ஆயிற்று. விவசாயம் செய்யத் தகுதியற்றதாக இருக்கிற இந்த ஸ்தலத்தில் இன்றைக்கும் சகலவிதமான காய்கறிகளும், பழங்களும், கனிவர்க்கங்களும் எந்நாளும் புத்தப் புதிதாகக் கிடைக்கும்படி இறைவன் செய்திருக்கிறுன். அங்கு செல்லும் ஒவ்வொருவரும் இதனை ஒரு அற்புதமாகவும், இறைவன் நினைத்தால் சகல காரியங்களையும் செய்வித்துவிட முடியும் என்ற நம்பிக்கையை உண்டாக்கக்கூடிய பெரிய அத்தாட்சியாகவும் இருந்து வருகிறது. ஹஜ்றத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் இவ்வாலயத் திருப்பணியைக் கட்டிமுடித்து இறைவனை வணங்கி அவனிடம் பிரார்த்தனை செய்த இடம் இன்றைக்கும்

எல்லோருக்கும் தெரியும்படிப் பிரத்தியேகமான அடையாளமிடப்பட்டிருப்பதை இன்றைக்குச் செல்லும் ஒவ்வொரு ஹாஜியும் கண்ணால் கண்டானந்திக்கலாம். இந்தவிடத்திற்கு இப்பொழுதும் ''மகாமே இப்ராஹீம்'' (இப்ராஹீம் நின்ற இடம்) என்றபெயரே வழங்கிவருகிறது. இந்த இடத்தில்தான் அவர்கள் கேட்ட பிரார்த்தனைகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. மேலும், தங்களது வயோதிகப் பருவத்தில் வெகுகாலம் சந்ததியில்லாமலிருந்து பெற்றெடுத்த முதல் குமாரரை இறைவனுடைய திருப்திக்காக, அவனது கட்டளைக்காக குடியேற்றிவிட்டு, அவர்களது ஜீவனத்திற்கான எவ்வித ஏற்பாடும் செய்யாமல் அவ்வல்லோனின் கிருபா கடாக்ஷத்தை மட்டிலும் நம்பிவிட்டுச் சென்றார்கள். இது உலகத்தில் எவராலும் செய்யமுடியாத அவ்வளவு மகத்தான தியாகமாகும். இந்தத் தியாகத்தை அங்கு செல்லும் எவருக்கும் இந்த இடம் ஞாபகம் மூட்டி இறைவன் திருப்தி ஒன்றுதான் இன்றியமையாததென்றும், அவனது திருப்திக்காக எதையும் தியாகம் செய்யக் கொஞ்சமும் பின்வாங்கக்கூடாது என்பதையும் நமக்கு அறிவுறுத்திக்கொண்டே இருக்கிறது. மேலும், உள்ளன்புடன் திரிகரணசுத்தியாக அவ்வல்லோனுக்குச் செய்யும் எந்தத்தியாகமும் வீணாகாதென்பதும், அது அபிவிருத்தியடைந்து பெருகும் என்பதும், இந்த இடத்தில் பெரிய நகரம் ஏற்பட்டு சகலவிதமான சௌகரியத்துடன் மக்கள் வாழ்வதும், ஹஜ்ரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமவர்களது சந்ததியினர் கோடிக்கணக்காகப் பலுகி பெருகிவாழ்வதும் நமக்கு பிரத்தியக்ஷமாகத் தெரியவருகின்றன. ஆகவே, இந்த இடம் பாக்கியமுள்ள இடம் என்பதிலும், இந்த இடம் மக்களுக்கு நேர்வழியைக் காட்டக்கூடிய இடமாக இருக்கிறதென்பதிலும் யாதேனும் சந்தேகமுளதோ? தவிரவும், இந்த ஆலயத்தைக் கட்டி முடித்தவுடன் ஹஜ்றத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் எல்லா ஜனங்களுக்கும் பொது அறிக்கை ஒன்று விடுத்தார்கள். இப்பொது அறிக்கையும் இறைவனது கட்டளைப்படியே விடுக்கப்பட்டது. இக்கட்டளைக்கேற்ப அந்நாளிலிருந்து ஜனங்கள் ஹஜ்ஜுக்கு வந்துகொண்டிருந்தனர். இவ்வாறு ஹஜ்ஜுக்கு வருபவர்கள் ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டக்கூடாது என்பதை வரையறை செய்து இத்தேவாலயமிருக்கும் எல்லைக்குள் பிரவேசித்த எவரையும் யாரும் கொலை செய்யவோ, கலகஞ்செய்யவோ கூடாதென்றும், அவ்வெல்லைக்குள் வேட்டையாடவோ இதர ஜீவப் பிராணிகளை இம்சிக்கவோ கூடாதென்றும், அங்குள்ள மரங்களை வெட்டக்கூடாதென்றும் ஏற்பாடு செய்யப்பட்டு அன்றுமுதல் இன்றுவரை அவ்வண்ணமே இருந்து வருகிறது. இதனைக் குறித்துத்தான் ''இதில் எவர் பிரவேசிக்கிறாரோ அவர் அச்சந்தீர்ந்தவராகி விடுகிறார்'' என்று இறைவன்கூறி அதனை ஊர்ஜிதப்படுத்தி இருக்கிறான்.

எனவே, புநித ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்காக உலகத்திலேயே முதல் முதலாக ஏற்படுத்தப்பட்ட தேவாலயத்தை நிர்ணயம் செய்துவிட்டால் அதில் வேறு எவரும் எவ்வித ஆக்ஷேபனையோ கேள்வியோ கேட்பதற்கில்லை. இதன் பிரகாரம்தான் இந்தத் தேவாலயம் ஹஜ்ஜுக்குரிய இடமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தெய்வக் கட்டளைக்குக் காரணங் கூறவேண்டியதே இல்லை; இறைவனின் கட்டளை என்ற ஒரு அம்சமே போதுமானதாகும். என்றாலும், தெய்வக் கட்டளைகள் கண்மூடித்தனமாகப் பிறப்பிக்கப்படுவனவன்று என்பதையும், இறைவன் கட்டளை ஒவ்வொன்றிற்கும் தக்க காரணங்கள் இல்லாமற் போகவில்லை என்பதையும் எண்பிப்பதற்காகவே நாம் இதனை இந்த இடத்தில் எடுத்துக் காண்பிக்க நேர்ந்தது.

இனி ஹஜ்ஜைப்பற்றிச் சிறிது கவனிப்போம்: ஹஜ்ஜுக் கடமையானது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. இஸ்லாம் மதம்தோன்றிய அந்தக் காலம் முதல் இந்தக்காலம் வரை இருந்தே வருகிறது. அன்று ஹஜ்றத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் அவனியோருக்கு அறிவித்த அறிக்கையே நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மூலமாக மறுமுறை அவனியோருக்கு விடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இடைக்காலத்தில் அதில் ஏற்பட்ட சில தகாத செய்கைகளை எல்லாம் அகற்றி சீர்திருத்தம் செய்து, அதன் அசல் ஒழுங்குப்படி அமைக்கப்பட்டிருக்கிறது. இப்புநித ஹஜ்ஜை நிறைவேற்றாமல் இறைவன் கட்டளைக்கு மீறுபவர்களைப்பற்றி இறைவன் கூறி இருக்கிற கடுமொழிகளை நம்மவர் கவனிக்க வேண்டும். இந்த ஹஜ்ஜை நிறைவேற்றுவதாலோ அல்லது நிறைவேற்றாமல் இருப்பதாலோ இறைவனுக்கு எவ்வித லாபநஷ்டமு முண்டாகிவிடப் போவதில்லை. இறைவன் தன்னை மனிதவர்க்கத்தார் வணங்கவேண்

டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கவுமில்லை. நமது பிற்காலத்தைய வாழ்க்கையைக் கருதியும், இறைவன் கட்டளைக்கு அடிபணிவது தான் நமது கடமை என்பதையும் நினைத்து நம்மவர் தங்கள் மீதிலுள்ள இப்புனித கடமையை நிறைவேற்றுவார்களாக. நமது நாட்டிலுள்ள பல இயல்புள்ள கனவான்கள் தங்களது அலுவல்களைப் பெரிதென மதித்து இப்புனித கடமையை நிறைவேற்றுவதைத் தள்ளிவைத்துக்கொண்டிருப்பதும், இப்படித் தள்ளிவைத்துக் கொண்டிருப்பதற்குப் பலவாறு புகல்கூறிக் கொண்டிருப்பதும் தெரிந்த விஷயம். இவ்வுலக மக்களிடம் எத்தனையோவிதமான காரணங்களைக் கூறலாம்; அவைகளை மற்றவர்கள் ஒப்புக் கொள்ளவும் செய்யலாம். ஆனால், இறைவனிடம் இந்தப் போலிக் காரணங்களெதுவும் செல்லாது. ஆகவே நீதியாகவும் நேர்மையாகவும் ஒவ்வொருவரும் தத்தம் கடமையை நிறைவேற்றுவதே முறையாகும். இன்றேல் அதற்குரிய பலனை அவசியம் அனுபவிக்க வேண்டியதேற்படும். இறைவன் நமக்கும் மற்றவர்களுக்கும் இப்புனித ஹஜ்ஜை நிறைவேற்றும் பாக்கியம் தந்தருளுவதுடன் "எவன் அதில் பிரவேசிக்கிறானோ அவன் அச்சந்தீர்ந்தவனாகி விட்டான்" என்ற வேதவாக்குக்கு இலக்காகும்படி நம்மனைவருக்கும் அருள் சுரப்பானாக. ஆமீன்.

அல்ஹதீது

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நாளன்று உலகிலுள்ள காருண்யங்களில் சிரேஷ்டமானவைகளைக் குறிப்பிடுவதற்கிடையே "இவ்வுலகம் ஒரு கைமுதலாகும்; அதன் பிரதானப்பொருள் பேணுதலுடைய பெண்டீர்களாகும்" எனக்கூறியதாக ஹஸ்ரத் அனஸ்பின்மாலிக் (ரலி.) அவர்களால் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத்ஷேக் அப்துஹூ மிஸ்ரீ அவர்கள் இந்த ஹதீதுக்கு விரித்துரை கூறுங்கால், உலகிலுள்ள வஸ்துக்களிலெல்லாம் பேணுதலுடைய பெண்மணி மகா சிரேஷ்டமானவளென்பதில் யாரும் சந்தேகங்கொள்ள முடியாதென்றும், அம்மாதைப்பெறும் மனிதன் சிதேவித்தனத்தையுடைய பாக்கியசாலியாகவும் பாவத்தைவிட்டு கார்மானமாக்கப்பட்டவனாகவும் அநீதி அதிக்கிரமம் ஏமாற்றுதல் முதலிய தீய காரியங்களைவிட்டு தூரமானவனாகவுமாய்விடுகிறான் என்றும், இதற்குக் காரணம் சற்குணசாலியான அம்மாது சதாவும் உண்மையைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும், உள்ளதைக்கொண்டு போதுமாக்கிக்கொள்ளவேண்டும் எனக் கூறி அவன்தனது மனவிருப்பமென்னும் சமுத்திரத்தில் மூழ்குவதை விட்டுத் தடுத்துக்கொள்கிறாள் என்றும், இதற்காகத்தான் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் "உலகிலுள்ள வஸ்துக்களிலெல்லாம் சிரேஷ்டமானவை பேணுதலுடைய மங்கையர்களாகும்" என்று கூறியிருக்கிறார்கள் எனவும் தெரிவித்திருக்கிறார்கள்.

ஒருநாளன்று நபிகள் பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள், சதாவும் அழியாதிருக்கக்கூடிய அமல்களைப்பற்றித் கூறிவருங்காலை, "மனிதன் மரணமாய் விட்டதுடன் அவன் புரியும் காரியங்களின் தொடர்பும் தடைபட்டுப்போகிறது. ஆனால், மூன்று காரியங்கள் செய்வதால் இவனது அமல்கள் தடைபட்டுப் போகாமல் சதாவும்-கியாமத் நாள்வரை-அதன் நன்மை இவனுக்குக் கிடைத்துக்கொண்டிருக்கிறது. (1) சதாவும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சதகா. (2) பிரயோசனமளிக்கும்படியான கல்வி. (3) பேணுதலுடைய சந்ததிகள்.

ஹஸ்ரத்ஷேக் அப்துல் அஜீஜ் சாவீஷ் (ரஹ்.) அவர்கள் இந்த ஹதீதுக்கு விரித்துரை கூறுங்கால், இந்த ஹதீதில் சதாவும் நடைபெற்றுக்கொண்டிக்கும் சதகா வென்பது அழகான நற்காரியங்களாகும். அதன் பலாபலன்கள் சதாகாலமும் நடைபெற்றுக்கொண்டே இருக்கும். உதாஹரணமாக பள்ளிவாசல் கட்டுவது, குளம் கிணறு வெட்டுவது, மத்ரஸா சத்திரங்கள் கட்டுவது முதலியவைகளாகும். இவ்வாறான புண்ணிய காரியங்களில் ஈடுபடுபவர்கள் மிக மிக பாக்கியசாலிகளேயாகும். (2) பிரயோசனமளிக்கும் கல்வி என்பது, அல்லாஹ்தஆலாவின் அடியார்கட்கு அக்கல்வியி

ஞல் பிரயோசன மேற்படவேண்டுமென்பதாகும். இதில் கல்வி கற்பித்துக் கொடுப்பதும் கிரந்தங்கள் இயற்றுவதும் பிரசங்கமாற்றுவதும் சம்பந்தப்பட்டிருக்கின்றன. (3) பேணுதலுடைய சந்ததிகள் என்பது அவர்களின் கல்விக்காக பெற்றோர் தக்க முயற்சிசெய்து அச்சந்ததிகளினுல் மக்களுக்கு பிரயோசனமேற்படுமாறும் எவ்விதக் கெடுதியும் நேரிடாதவாறும் செய்வதாகும் என்றும் கூறியிருக்கிறார்கள்.

சத்திய சன்மார்க்கத் தூதர் (ஸல்.) அவர்கள் ஒருநாளன்று பெண்களுக்குள்ள பாத்யதை விஷயமாய்ச் சொற்பெருக்காற்றி வருங்காலே, "எம்மனிதனுக்கு இரண்டு மனைவியர்களிருந்து அவ்விருவர்களையும் ஒழுங்கான நீதியோடு நடத்தவில்லையோ அவன் கியாமத்—மறுமை நாளையில் தலைகுனிந்தவனுக வருவான்" என தெரிவித்ததாக ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி.) அவர்களால் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் அல்லாமா அஹ்மத் சாலிஹ் ஐஸாயிரி (ரஹ்.) அவர்கள் இந்தஹதீதை விரித்துரைக்குங்கால், இஸ்லாம் மார்க்கமானது மனித சுபாவத்தைக் கவனித்து மானிடர் ஒன்றுக்கு அதிகமான மங்கையரை மணந்து கொள்ளலாமென்று அனுமதி யளித்திருந்தபோதிலும் ஒழுங்கு நீதி சமத்துவம் முதலியவைகளைத் தக்க முறையில் கைகொள்ள வேண்டுமென்னும் கண்டிஷனைக் குறிப்பிட்டு மானிடன் ஒரே பெண்ணைத்தான் விவாகஞ்செய்துகொள்ள வேண்டுமென்பதை வற்புறுத்தல் செய்திருக்கிறது. இது வன்றி தவிர்க்க முடியாத ஏதாகிலும் சந்தர்ப்பங்களைக் கொண்டு இன்னொருமாதை விவாகஞ் செய்துகொள்ள விரும்புவானுகில் அவ்விருவர்களுடன் நிதமான முறையில் சமத்துவமாக நடந்து கொள்வது அவனது பிரதான கடமையாகும். ஒவ்வொரு விஷயத்திலும் அவ்விருவர்களுக்கிடையே வித்தியாசம் பாராட்டாதிருப்பது ஆவசியத்திலும் அவசியமாகும். ஆனல், துர்அதிர்ஷ்ட வசத்தால் அவன் ஒரு மனைவியின்மீதுள்ள அதிக உகப்பினுல் மற்றொருத்தியை இவளுக்கு பணிவிடைக் காரியைப் போலாக்கிவிடுகின்றுன். அவன் வன்னஞ்சனை நப்வஞ்சகனுகும். இன்னேன் கியாமத் மறுமை நாளில் அபரிமிதமான தாழ்மைத்தனமடைவான் எனக் கூறியிருக்கிறார்கள்.

அகப்பெருமை பெரும்பாவம்

ஒருநாளன்று நபிகள் பெருமானுர் சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள் அகப்பெருமை கொள்வதின் கெடுதியை எடுத்துக் கூறுங்கால் "எவனுடைய ஹிருதயத்தில் கடுகுப் பிரமாணம் அகப்பெருமை இருக்கிறதோ அவன் ஒருக்காலும் சுவனபதியடையமாட்டான்" எனக் கூறியதாக ஹஸ்ரத் ஸல்மான் பார்ஸி (ரலி.) அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஹஸ்ரத் இமாம்சாலிஹ் ஐஸாயிரி (ரஹ்.) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால் அகப்பெருமை கொள்வதில் "தான் என்ற தன்மை"யும் ஏமாற்றுதலும் சேர்ந்ததெனை அறிவித்திருக்கிறார்கள். அல்லாஹ்தஆலா மானிடனுக்குச் செய்த உபகாரத்துக்கு நன்றி செலுத்தாமல் வெளிரங்கமான கோலத்தையும் இடைகூறுன பிரயோசனங்களையும் கண்டு தங்களை மானிடத் தன்மையை விட்டு மேலானவர்களென கருதிக்கொண்டிருப்போர் எவ்வளவு கொடியவர்களாகவிருக்குமென்பது சாமான்யர்களுக்கும் தெரியாத விஷயமன்று. எவர்கள் அல்லாஹ்தஆலாவால் கொடுக்கப்பட்டுள்ள ஐசுவரியங்களைக் கொண்டு பெருமைபாராட்டுகின்றுர்களோ அவர்கள், தங்களுக்குமுன் எத்தனையோ பெரும் ஸ்ரீமான்கள்-தனவந்தர்கள் இவ்பூவுலகில் தோன்றி அவர்களது ஐசுவரியங்கள் அப்படியே அழியாதிருப்பதுடன் அழிவுடைய ஒரு உசுப்புதலானது அவர்களது உயிர் வாழ்க்கை என்னும் விளக்கை நூற்றுவிட்டதால் அவர்கள் இதுகாலே கப்ரில் தூங்கிக் கொண்டிருக்கிறார்களென்பதையும் ஞாபகத்தில் வைக்கவேண்டும். எவர்கள் தாங்கள் தாம் நல்ல அமல்கள் செய்துவிட்டதாக பெருமை பாராட்டுகின்றுர்களோ அன்னோரும் தங்களுக்குமுன் இதைவிட மேலான அமல் செய்தவர்கள் இவ்வுலகத்தைவிட்டுச் சென்றுவிட்டார்களென்பதையும் இந்த அமல் செய்த தன் பயனுக அவர்கள் மரணத்தைவிட்டு தப்பித்துக்கொள்ள முடியாது போய்விட்டதென்பதையும் இந்நிலைமையில் இவ்வாறு அழிந்துபோகக்கூடிய வஸ்துக்கள்மீது நம்பிக்கை கொண்டு பெருமை பாராட்டுவது எவ்வளவுதூரம் புத்திசாலித்தனமாகுமெனவும் அன்னோருக்குத் தெரிவித்துக் கொள்கிறேம்.



ஏழாம் வயது

சுத்த சத்திய சன்மார்க்கச் சோதரார்களாகிய உங்களுக்கு மங்களம் உண்டாகுக. உங்களது அரும் மாசிகையாகிய "ஹிபாஜத்துல் இஸ்லாத்தினது" ஏழாம் வயதின் ஆரம்பத்தில் எங்களது மனமார்ந்த நன்றியறிதலையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறோம். உங்களது இவ்வரும் சஞ்சிகை நம்மவரில் உதித்த கரையான்களைப் போன்ற காதியானிகள், முல்ஹிதுகள், நாஸ்தீகர்கள், கண்மூடித்தனமாக மேனாட்டைப் பின்பற்றுவோர்களாகிய நூதன அனுஷ்டானக்காரர்கள் ஆகியவர்களைச் சீர்திருத்தி அவர்களுக்கு சத்திய சன்மார்க்கத்தினை போதித்து உண்மையை உணர்த்துவதற்காகவும், நம்மவரிலுள்ள அஞ்ஞானத்தை அகற்றி மெஞ்ஞானத்தைப் புகட்டுவதற்காகவும் சென்னை நகரில் நம்மவரால் ஸ்தாபிக்கப்பட்ட "ஹிபாஜத்துல் இஸ்லாம்" என்னும் இஸ்லாம் பாதுகாப்புச் சங்கத்தாரால் ஆரம்பிக்கப்பட்டு இற்றைக்கு ஆறுண்டுகள் பூர்த்தியாகி ஏழாம் ஆண்டு பிறந்து விட்டது. இச்சந்தர்ப்பத்தில் "மன்லம் யஷ்குரின்னாஸ லம் யஷ்குருல்லாஹ்" அதாவது எவர் மனிதருக்கு நன்றி செலுத்தவில்லையோ அவர் அல்லாஹ்வுக்கும் நன்றி செலுத்தவில்லை" என்ற நாயக வாக்கியத்திற்கேற்ப, முதலாவதாக அச்சங்கத்தாருக்கும், அச்சங்கத்திற்குதவிபுரிந்து பக்கபலமாக இருக்கும் மற்றவர்களுக்கும் நம் சஞ்சிகையின் வாசகர்களுக்கும் நமது பிரசாரர்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். நம் சங்கத்தார் இஸ்லாம் பாதுகாப்பு விஷயத்தில் இத்துணை அக்கரையும் சிரத்தையும் எடுத்துக்கொள்ளவில்லையாயின் இந்நாட்டில் காதியானி, அஹ்மதி இயக்கத்தார் தங்களது வஞ்சகப் பிரசாரத்தில் அபார வெற்றியடைந்து மார்க்க பக்தியிற் சிறந்தவர்களென கீர்த்திபெற்றிருக்கும் நம்மவரை வழிகெடுத்துப் படுகுழியில் தள்ளி இருப்பர். பொய்யான இவ்வாழ்வை நம்மவரிலநேகர் மெய்யென்று நம்பி சத்திய சன்மார்க்கக் கொள்கையை விட்டு விலகி, புதிய இயக்கத்தாருடன் சேர்ந்து மெய்யான வாழ்வாகிய மறு உலக வாழ்க்கையெனும் மோக்ஷசாதனத்தை அடைவதற்கில்லாமல் தவறிவிட்டிருப்பார்கள். நம் சங்கத்தார் இத்துணை தொண்டு புரிவதற்குப் பக்க பலமாக அபிமானிகளும் மற்றவர்களும் உதவிபுரியாதிருந்திருப்பின் இப்புனித காரியத்தில் நம் சங்கத்தார் வெற்றிபெற்றிருக்க முடியாது. நமது வாசக நேயர்கள் நமது அரும் மாசிகையை வாங்கிப் படித்து மற்றவர்களும் உணரும் வண்ணம் மற்றவர்களுக்குப் படிக்கக் கொடுத்தும், படித்துக் காட்டியும் இராவிடில் நம் சங்கத்தாரின் நோக்கம் நிறைவேறுவதற்கு ஹேதுவேற்பட்டிருக்கமாட்டாது. ஆதலின், இந்நான்கு வகையினருக்கும் நமது மனமார்ந்த நன்றியறிதல் உரித்தாவதாக. இரண்டாவதாக இக்காரண உலகில் நடைபெறும் சகல காரியங்களுக்கெல்லாம் வல்ல இறைவனே கர்த்தனாக இருப்பினும், அவைகளைச் செய்விப்பதற்கான காரணங்களை ஏற்படுத்தி மற்றவர்

களைக்கொண்டு நிறைவேற்றி வைப்பது அவனது சுன்னத்தெனும் வழிமுறையாக இருந்து வருகிறது. இவ்வழி முறைக்கேற்ப இப்புனித காரியத்தைச் செய்ய உங்களது இவ்வருமைக் குழவியாம் ஹிபாஜத்துல் இஸ்லாம் பத்திரிகைக்கும், அதனை நடாத்திவரும் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" பாதுகாப்புச் சங்கத்தாருக்கும் சந்தர்ப்பம் அளித்தமைக்கு இறைவனுக்கும் நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உங்களது இம்மாசிகை அன்று எந்நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டதோ அந்நோக்கத்தை விட்டுச் சிறிதும் வழுவாமல் உழைத்து வருவது உங்களெல்லாருக்கும் தெரிந்த விஷயம். சுயநலமும், மார்க்கப்புரட்டும் கொண்ட சில பத்திரிகைகள் நாளுக்கொரு கொள்கையில் மாறி இங்குமில்லாமல் அங்குமில்லாமல் திண்டாடிக்கொண்டு, இறுதியாகப் புறசமூகத்தாரின் வாயில் காத்து நிற்பது போல் இல்லாமல் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தோங்கி வருவது ஒன்றே இப்பத்திரிகை தனது கொள்கையில் உறுதியாக நின்றுழைத்து வந்திருக்கிறதென்பதற்குத் தக்க சான்றாகும். இவ்வரும் மாசிகையை ஸ்தாபித்த "ஹிபாஜத்துல் இஸ்லாம்" என்னும் இஸ்லாம் பாதுகாப்புச் சங்கத்தார் தங்கள் மீது பொது ஜனங்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கேற்ப, இஸ்லாத்தின் விரோதிகளை எதிர்த்து அநேகம் முயற்சிகளைச் செய்திருக்கிறார்கள் என்பதும், அவைகளில் பெரும்பாலானவைகளில் மகத்தான வெற்றிகளை அடைந்திருக்கிறார்களென்பதும் உங்கள் எல்லோருக்கும் நன்கு தெரிந்த விஷயமாதலின் அதனை ஈண்டு விபரித்துக் கூற நாம் விரும்பவில்லை. ஆயினும் இரண்டொரு முக்கிய விஷயங்களை ஈண்டு குறிப்பிட விரும்புகிறோம்.

இச்சங்கத்தார் செய்த அரும்பெருங் காரியங்களில் "ஹிஸ்புல்லாஹ்" ஸ்தாபனம் முக்கியமானதாகும். இந்த ஸ்தாபனத்தார் தஞ்சை,மதுரை, திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களில் சென்று இஸ்லாமியப் பிரசாரம் செய்து நம்மவருக்குச் சன்மார்க்க உணர்ச்சியை ஊட்டினர். இதன் பயனாக காதியானீ இயக்கத்தார் திருநெல்வேலி ஜில்லாவிலும் மற்றிடங்களிலும் பெருந் தோல்வியடைந்ததுடன் அக்கொள்கைள் நமது தமிழ் ஜில்லாக்களில் வளர்ச்சி யடைவதற்கிடமில்லாமல் ஒழிந்தன. இவர்களிலும் பக்கா வஞ்சகர்களான அஹ்மதி இயக்கத்தார் தஞ்சை ஜில்லாவில் தோல்வியுற்று ஒடுங்கியதுடன், அஹ்மதிப் பிரசாரத்தை நேரடியாகச் செய்வதை விட்டு விலகி காங்கிரஸ் முதலிய ஸ்தாபனங்களுடன் சேர்ந்துகொண்டு நாட்டில் அலைந்து திரிவதும், அவ்வஹ்மதிக் கூட்டத்தாருக்குள்ளாகவே பிளவேற்பட்டு ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டும் தூற்றிக் கொண்டு மிருப்பதும் நம்மவருக்குக் கண்கூடாகத் தெரிந்த விஷயமாகும்.

இந்த ஹிஸ்புல்லாக்களின் பிரசாரத்திற்கு ஆதரவாக ஜகப்பிரசித்தி பெற்ற இஸ்லாம் பிரசாரகர் மீரட் மௌலானா ஹிஸ்ஹோலினஸ் காரீ, ஹாபிஸ், ஸூபி, மௌலானா மௌலவி அல்ஹாஜ் அப்துல் அலீம் ஸித்திக்கீ காதரீ அவர்கள் சென்னையிலும், தென்னாட்டின் பிரதான இடங்களிலும் நமது சங்கத்தின் சார்பாக இஸ்லாமியப் பிரசாரம் செய்து ஆற்றிய அழகிய சொற்பொழிவும் நம்மக்களின் கண்களை வெகுவாகத் திறக்கச் செய்தன. இச்சொற்பொழிவுகளை முஸ்லிம்கள்மட்டு மில்லாமல் முஸ்லிம் அல்லாதாரும் கேட்டு ஆனந்தித்ததும்,அநேகம் முல்ஹிதுகள் தங்களது தவறான போக்கை யுணர்ந்து திருந்தியதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உங்களுக்குத் தெரிந்த விஷயமேயாகும்.

மைக்கேல் பாதிரியார் எழுதிய நாயக தூஷண நூலைப் பறிமுதல் செய்வதற்காக நமது சங்கத்தார் அபாரமுயற்சி எடுத்துக்

கொண்டதுடன், நமது சங்கத்தின் தூது வக் கூட்டத்தினர் சென்னை அரசாங்க உள்நாட்டு மெம்பரைப் பேட்டி கண்டு முஸ்லிம்களின் உணர்ச்சியை திறம்பட எடுத்துக் கூறியதன் பலனுக ஷை தூஷண நூல் சென்னை அரசாங்கத்தா ரால் பறிமுதல் செய்யப்பட்டது.

இதுபோன்ற இன்னும் எத்தனையோ விஷயங்களில் ஈடுபட்டுழைத்து வந்திருக் கிறது. இவ்வாருன காரியாதிகளெல்லாம் உங்களது முயற்சியையும் பிரயத்தனத் தையும் பொருத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிரேம்.

உங்களது இச்சங்கமும், மாசிகையும் செய்துவரும் அரும்பெரும் ஊழியங் களைக் கண்ட மார்க்காபிமானிகள் நமக்கு அதிக உற்சாகமூட்டிக் கடிதங் கள் எழுதுவதுடன் உங்களது இம்மாசி கையை வாரப்பதிப்பாக மாற்றி இன் னும் அதிகமான தொண்டுகளைச் செய்ய வேண்டுமென்று கோரிக்கொண்டிருக் கின்றனர். அபிமானிகளின் இக்கோ ரிக்கை தற்போது உங்களது சங்கமாகிய "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தா ரின் ஆலோசனையில் இருந்து வருகிறது. அபிமானிகளாகவும், வாசகர்களாகவும், சந்தாதாரர்களாகவும் உள்ள நீங்கள் ஆளுக்கொரு புதிய சந்தாதாரரைச் சேர்த்துக் கொடுக்கும்பக்ஷத்தில் உங் கள் சங்கத்தார் இம்மாசிகையை வாரப் பதிப்பாக மாற்றி உங்கள் கோரிக் கையை நிறைவேற்றுவது அவர்களுக் குக் கஷ்டமான காரியமல்ல. ஆகவே, இது வாரப்பதிப்பாக மாறி இன்னும் அதிகமான தொண்டுகளைச் செய்வது உங்கள் கையிலேயே இருக்கிறது என்ற விஷயத்தைத் தெரிவித்துக் கொள்கி ரேம். எல்லாம் வல்ல இறைவன் உங்க ளுக்கும், உங்கள் சங்கமாகிய "ஹிபாஜத் துல் இஸ்லாம்" என்னும் இஸ்லாம் பாது காப்புச் சங்கத்திற்கும், உங்கள் பத்தி ரிகையாகிய இக்குழவிக்கும் இஸ்லாத் தின் தொண்டுகளை இன்னும் அதிகமா கச் செய்யவும், அவைகளில் வெற்றி பெறவும் சகல பாக்கியங்களையும் தந் தருள்வாளுக. ஆமீன் ! ஆமீன் !! யாறப் பல் ஆலமீன் !!!

நமது ஜீவியம் வெளிப்பகட்டேயாகும்

நாம் உண்மை சத்தியம் ஆகியவைகளை விட்டு வெகு தூரத்திற்குப் பின்னடைந்து விட்டதால் நமது ஜீவியமும் வாழ்க்கையும் பொய் வேஷமாகவும், போலியாகவும், வெளிப் பகட்டாகவும் மாறிவிட்டன. கையிற்பண மில் லாத ஒரு ஏழை தன்னை ஏழை என்று சொல்லிக் கொள்ள சங்கோஜப்படுகிருன். கல்வியில்லாத ஒருவன் தன்னை மற்றவர்கள் பெரியமேதாவி என்று நினைத்துக்கொள்ளத் தக்க விதமான பேச்சுக்களை பகிரங்காகக் கூற முற்பட்டு தனக் குள்ள அறியாமையை மற்றவர்கள் தெரிந்து கொள்ளக்கூடாது என்று தனது பேச்சின் மூலம் திரையிடுகின்ருன். பாபியாகவுள்ளவன், துர்நடத்தையுள்ளவன் தனது பேச்சுக்களின் மூலமாகத்தன்னை மற்றவர்கள் துறவியோ அல் லது தபசியோ என்று நினைக்கும்படிச் செய்து விடுகின்ருன். இவ்விதமாக ஒவ்வொருவரும் தனது வெளிப்பகட்டான காரியத்தின் மூலம் தனக்குள்ள யதார்த்தமான நிலைமையை மறைக்கவே முயலுகின்றனர்.

இவ்வாறு வெளிப்பகட்டாக நடிக்கும்செய்கை யானது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவ் வாறு நடிப்பவருக்கே அனர்த்தமாக வந்து முடி கின்றது ; சிற்சில சமயத்தில் மற்றவர்களுக் கும் தீங்கை விளைவிக்கின்றது. விவாகம் முத லிய சுபகாரியங்களிலும் இதரகாரியங்களிலும் கையில் பணமில்லாதவர்களும்கூட மற்றவர் களுக்குக் காண்பிப்பதற்காகவும், பிறர் மெச்சு

வதற்காகவும் பெரிய பெரிய விருந்துகளைச் செய்தும் அதிக விலைமதிப்புள்ள சீதனங்களைக் கொடுத்தும், இதர வீண்செலவுகளைச் செய்தும் அநேகம் பணங்களை விரயம் செய்து விடுகிறார்கள்.

இம்மாதிரியான வீண் செலவுகள் செய்வதற்கு அவர்களிடம் ரொக்கப்பணம் இல்லாத போதினும் தங்களுடைய கௌரவத்தை நிலைநாட்டிக்கொள்வதற்காகவும் தங்களைப் பிறர் பெரிதாக மதிப்பதற்காகவுமென்று எவ்விதத்திலேனும் கடன் வாங்கவோ, தங்களது சொத்துக்களை அடமானம் வைக்கவோ, விற்கிரயம் செய்யவோ அவர்கள் பின்வாங்குவதுமில்லை, தாங்கள் செய்யப்போகும் காரியத்தைப்பற்றிச் சிந்தனை செய்வதுமில்லை.

கடன் வாங்கும்போது இவர்களுக்குப் பொதுவாகச் சந்தோஷமும் மகிழ்ச்சியுமே தானுண்டாகிறது. வீணானதும் பிரயோஜனமற்றதுமான ஊதாரியான செலவுகளுக்குப் பணம் கிடைத்துவிடுவதும், தங்களது அனாவசியமான இக்கருத்து காரியத்தில் நிறைவேறுவதும் தான் இந்தச் சந்தோஷத்திற்குக் காரணம். ஆனால், கடன் ஒரு பெரும் தொத்து வியாதி என்பதையும், ஒருமுறை அதில் வீழ்ந்துவிட்டவர் அப்பால் அதனை விட்டு மீளுவதில்லை என்பதையும் இவ்வியாதியால் பீடிக்கப்பட்டவரை விட்டு இவ்வியாதி விலகுவதில்லை என்பதையும் அறியாதார் இல்லை என்றியம்பலாம். இந்த வியாதியால் பீடிக்கப்பட்டவரின் பதினாயிரக் கணக்கானவும் லக்ஷக்கணக்கானவும் விலைமதிப்புள்ள சொத்துக்களும் பூஸ்திதிகளும் சொற்ப ஆடம்பரத்திற்காக பலியாகி விடுகின்றன. நம்முடைய சகோதரர்களில் கணக்கற்றவர் இவ்வியாதியால் பீடிக்கப்பட்டு தரித்திரர்களாகிவிட்டதை நாம் கண்ணால் கண்டுமிருக்கிறோம், காதால் கேட்டுமிருக்கிறோம். அவ்வாறிருந்தும் நாம் அதனை விட்டு நம்மைத் தவிர்த்துக்கொள்வதுமில்லை, தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று நினைப்பதும்கூட இல்லை. நாமும் கண்ணை இறுக மூடிக்கொண்டு அவர்கள் வீழ்ந்த படுகுழியின்பால் மிக வேகமாகச் சென்றுகொண்டிருக்கிறோம்.

நமது பொய்யான இவ்வெளிப்பகட்டு மற்றவர்களது நாசத்திற்கும்கூடக் காரணமாக இருக்கிறது. அநேகம் சுயநலமிகள், தங்களது வயிற்றை வளர்ப்பவர்கள், அற்பர்கள் ஜன ஊழியம் செய்வதாகவும், இஸ்லாத்திற்குத் தங்களை அற்பணம் செய்வதாகவும் கூறிக்கொண்டு நம் முன் வருகின்றனர். பொது ஜனங்கள் இவர்களின்மீது நம்பிக்கை வைத்து அவர்களைப் பின்பற்றுவதற்கும் தயாராகி விடுகிறார்கள். அதுபோழ்து அவர்கள் தங்களது தவறான ஆலோசனைகளைக் கூறி விநாசம் என்ற நரகத்தின்பால் செல்லும் பாட்டையில் பொதுஜனங்களைச் செல்லும்படிச் செய்து விடுகிறார்கள். இவ்விதமான அநேகம் அசூயையான மனிதர்கள் நமது ராஜீய மத உலகில் தோன்றி நம்மை அநேகம் அல்லல்களுக்குள் சிக்கவைத்துமிருக்கிறார்கள். இப்பொழுது அவ்வல்லல்களை விட்டு நீங்குவது நமக்கு மிகவும் கஷ்டமாகவே இருக்கிறது.

இந்தப் பொய்யான வாழ்வின் நிமித்தமாக நமது ஜனங்களில் வீண் செலவும் தரித்திரமும் சர்வ சாதாரணமாகப் பெருகிவிட்டது. நாம் ஒரு வஸ்துவை அல்லது பொருளை கிரயத்திற்கு வாங்கக்கூடிய அந்தஸ்தில் அல்லது தகுதியில் இருப்பதில்லை. ஆனால், நமது நண்பர்களும், நமக்கு அக்கம்பக்கத்திலிருப்பவர்களும் நம்மை ஏழைகள் என்றோ அல்லது அற்ப சொத்துகளுள்ளவர்களென்றோ நினைக்காமலிருக்கும் பொருட்டு நாம் அப்பொருளை விலைக்கு வாங்கிக்கொள்கிறோம்.

நமக்கு வேலைக்காரர்கள் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இருப்பதுமில்லை. வேலைக்காரர்களை வைத்துக்கொள்ளவேண்டிய தகுதி நமக்கு இருப்பதுமில்லை. ஆனால், நமது துணைவர்களில் அநேகம்பேரிடத்தில் வேலைக்காரர்களிருப்பதால் நாமும் கஷ்டப்பட்டேனும் ஒரு வேலைக்காரனை வைத்துக்கொள்ளவேண்டும் என்ற ஒரே கருத்துக்காக ஏவலாளரை ஏற்படுத்திக்கொள்கிறோம்.

நமது ஊரிலுள்ள தனவந்தர்களும் பிரபுக்களும் விலையுயர்ந்ததும் பார்ப்பதற்கழகானதுமான உடைகளை விதம் விதமாக அணிகின்றனர் என்பதை நாம் காண்கின்றோம். இதனைப் பார்த்தவுடன் நமக்கும் அவைகளை அணிய ஆசையும் விருப்பமும் உண்டாகி விடுகின்றது. நமது தரித்திர நிலைமையையுங் கூட நாம் கவனிக்காமல் நமக்கும், நமது பிள்ளைகளுக்கும் அதே மாதிரியான உடைகளை வாங்கி விடுகின்றோம். சில சமயங்களில் அவைகளை அணிய நம்மவரில் பலருக்கு வெட்கம் உண்டாகி அவை.

களைப் பெட்டியில் வைத்த வண்ணமே இருந்து வருகிறது. இதனால் அத்துணிகள் பழந்துணிகளாகிக் கெட்டுப்போகின்றன. நமக்கு அனுவசியமான பணச் செலவேற்பட்டதுதான் கிடைத்த பலனாக இருந்து வருகிறது.

நாம் எதைச் செய்தாலும் சரி, எவ்வளவு சம்பாத்தியம் செய்தாலும் சரி நம்மில் உண்மையும் சாமான்ய வாழ்க்கையும் உண்டாகாதவரை நமது நிலைமை சீர்திருந்தப்போவதில்லை. நாம் ஏழையாக இருக்கலாம். ஏழையாக இருப்பது பாபமன்று. மேலும், பொய்யான ஆடம்பரங்களானாலும், பிறர் மெச்சுவதற்காகப் பகட்டான காரியங்களைச் செய்வதானாலும் நாம் செலவு செய்யும் தொகையை நமது வருவாயைப் பார்க்கினும் அதிகமாக்கிவிடாமல் காப்பாற்றிக் கொள்வோமாயின் நாம் யதார்த்தத்தில் ஏழையாகவே இல்லை. வரவுக்குமிஞ்சிய செலவு செய்யாதிருக்கப் பழகிக்கொண்டால் அதுவே நமக்குப் பெரும் செல்வமாகும். நமது வருவாய் அதிகமில்லை என்பதும், நமக்கு எவ்வளவு செலவிருக்கிறதோ அவ்வளவுக்குத்தான் நமக்கு வரும்படி இருக்கிறது என்பதும் ஒருவருக்குத் தெரிந்துவிடுமாயின், அது நமக்கு வெட்கக்கேடான காரியமன்று. ஆனால், நாம் நமது வீட்டிற்கு வெளியில் ஸூட், பூட், கோட், பெட்லோன் அணியும் நிலைமையில் வீட்டில் மனைவி மக்கள் கஞ்சிக்கில்லாமல் வாடுகின்றனர் என்ற சமாச்சாரம் ஒருவருக்கு வெளியாகிவிடுமாயின் அதனைப்பார்க்கினும் நமக்கு மானக்கேடான காரியமொன்றுமில்லை. பொய்யான ஆடம்பரத்தையும் வெளிப்பகட்டையும் பார்க்கினும் அதிகமான 'லஅனத்து' மனிதனுக்கு வேறொன்றுமில்லை. ஆகவே, எவ்வளவுக்கு சீக்கிரமாக அதனை நாம் அகற்றுகிறோமோ அவ்வளவுக்கு நமக்கு நன்மை ஏற்படும் என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிவோமாக.

பெருந்தன்மை

பெருந்தன்மையும், பிறரை மதிப்பதும் மனிதனுக்குரிய மிகவும் முக்கியமான லக்ஷணங்களாகும். துர்அதிர்ஷ்டவசமாக நாம் இந்த வார்த்தைகளுக்குத் தவறான அர்த்தங்களைச் செய்துகொண்டோம். அதனால், நாம் இதனை அளவுக்குமீறி மிகவும் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ அனுஷ்டிப்பதால் இவைகள் நமக்குக் குறைவான தன்மைகளாகக் காணப்படுகின்றன. எனவே, இப்பொழுது நாம் ஒருவரைப் பெருந்தன்மையுள்ளவர் என்று கூறுவோமாயின் அவர் அகாரணமாக நமக்காகச் சகலவிதமான கஷ்டங்களையும் அனுபவிப்பவராக இருக்கிறார் என்ற கருத்துத்தான் ஏற்படுகிறது. தியாகம் செய்தல், விட்டுக்கொடுக்கும் தன்மை ஆகியவைகள் மனிதனின் உயர்ந்த தன்மைகளாகும். ஆனால், அதற்காக அனுவசியமாக முட்டாள் என்ற பட்டத்தைக் கட்டிக்கொண்டு நஷ்டத்தை அடைவது தியாகமுமன்று, விட்டுக்கொடுப்பது மன்று. ஒருவர் ஒரு கஷ்டத்தில் அல்லது துன்பத்தில் அகப்பட்டிருப்பாராயின் அதற்காக அவர் நம்மிடம் இச்சகம்பேச வேண்டுமென்பதில்லை. அவருடைய கஷ்டத்தை நம்மால் இயன்றவரை போக்குவதற்கு நாம் உதவி செய்யவேண்டியதே நமது பொறுப்பாகும். இவ்விதமான உதவியை நாம் செய்யும்போது நமக்கு நஷ்டம் வருவதையும் கஷ்டம் வருவதையும் பொருட்படுத்தாமல் இருப்போமாயின் அதுதான் நமது தியாக உணர்ச்சிக்கு ஒப்பற்ற உதாரணமாகும். ஆனால், தற்போது பெருந்தன்மை என்பதற்குத் தலைகீழாக அர்த்தம் செய்யப்படுகிறது. உதாரணமாக, இரவு 10 அல்லது 11 மணிக்கு 4-5 அல்லது 10 பேர் முன்னறிவிப்பின்றியே நமது வீட்டுக்கு வந்துவிடுகிறார்கள். இவர்கள் நமது வீட்டுக்கு வராமலே நமது நகரிலுள்ள ஹோட்டல்களிலோ அல்லது சத்திரங்களிலோ அந்த வேளையில் தங்கி இருந்து அப்பால் சாவதானமாக நம்மிடம் வரமுடியும். அப்படி இருந்தும் தங்களுடைய பணத்தைச் செலவு செய்வதற்கு இஷ்டப்படாமல் அகாலவேளையில் நம்மிடம் வந்துவிடுகிறார்கள். அசந்தர்ப்பமான இவ்வேளையிலும்கூட அவர்கள் தங்குவதற்கு இடவசதி சாப்பாடும் தயார்செய்து கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். அப்படிச் செய்யாவிட்டால் நம்மை பெருந்தன்மை இல்லாதவர் என்று தூற்றுவர்.

நமது நண்பர்களில் ஒருவருக்கு வேண்டியவர் ஏதேனும் ஒரு குற்றம் செய்து கிரிமினல் வழக்குகளில் மாட்டிக்கொண்டு நமது நண்பருடைய தாக்ஷண்யத்திற்காக நாம் பொய்சாக்ஷி சொல்லவேண்டும் என்று விரும்புகிறார்கள். அப்படி சத்தியம் செய்து பொய்சாக்ஷிசொல்ல மறுத்தால் பெருந்தன்மையற்றவர் என்று நம்மைக் கருதுகின்றனர்.

ஸ்தலத்திலுள்ள கலெக்டர் அல்லது கமிஷனர்போன்ற அரசாங்க உத்தியோகஸ்தரிடம்

நமக்கு சிநேகம் இருப்பதால் நாம் அவ்வதிகாரிகளை அடிக்கடி சந்திக்க வேண்டிய சந்தர்ப்பமிருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். இப்படிப்பட்ட நிலைமையில் நாம் நம்மிடம் வரும் ஒவ்வொருவரையும் அவ்வதிகாரியிடம் அழைத்துச் சென்று உத்தியோகம் கொடுக்கும்படியாக சிபார்ஸ் செய்யவேண்டும். அத்துடன் உத்தியோகமும் வாங்கிக் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் நாம் பெருந்தன்மையுள்ளவர் என்ற பெயர் வாங்கமுடியும். இல்லையேல் நாம் பெருந்தன்மையற்றவர், சுயநலமி என்றே அழைக்கப்படுவோம்.

கடன்கொடுத்தால் அதனைக்கேட்காமலிருப்பதும் இக்காலத்தில் பெருந்தன்மைக்குரிய அடையாளமாக இருக்கிறது. தப்பித்தவறி கொடுத்த கடனைக் கேட்டுவிட்டால் நாம் பாபியாகி விடுகிறோம்.

சுறுங்கக்கூறுமிடத்து அகாரணமாக நாம் முட்டாள்களாகி நமக்கு நஷ்டத்தை உண்டாக்கிக்கொண்டே இருக்கவேண்டும். அவசியமில்லாமலே எந்நேரமும் நமது நண்பர்களுக்கு ஊழியம் செய்வதற்கு இடுப்புக் கட்டிக்கொண்டிருக்கவேண்டும். இவைகள்தாம் இக்காலத்தில் பெருந்தன்மை என்பதற்குரிய அடையாளங்களாக இருக்கின்றன. அதிலும், நமது முட்டாள் தனத்தினால் எந்நேரமும் நம்மைக் கொண்டு நன்மையடைந்துகொண்டும், பிரயோஜனம் பெற்றுக்கொண்டு மிருக்கிற அந்த நண்பர்கள்மீது எவ்விதமான குற்றமும் குறையும் கூறக்கூடாது. அப்படி வேறு எவரேனும் குற்றம் கூறினாலும் அதற்காக நாம் மேல் விழுந்து வம்பு செய்யவேண்டும். இல்லையேல் நமது பெருந்தன்மைக்கு வந்துவிடும் ஆபத்து. இவ்விதமான பெருந்தன்மை நற்குணத்தைச் சேர்ந்ததா? இப்படிப்பட்ட தன்மையை நாம் கைவிடாமல் எப்பொழுதும் வைத்துக்கொண்டிருக்கவேண்டுமா? என்பதை வாசகநேயர்களின் அபிப்பிராயத்திற்கு விட்டுவிடுகிறோம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008

அரேபியாவைக் கைப்பற்ற ஐரோப்பியரின் சூழ்ச்சி

ஐரோப்பிய சமூகத்தினர் தங்களது வஞ்சகச் செயல்களினாலேயே கீழ்நாடுகளைப் பெரும்பாலும் தங்களுக்கு அடிமைப்படுத்தி இருக்கிறார்கள். அடியடித்தோறும் அவர்களது சூழ்ச்சி வேலை செய்துகொண்டிருக்கிறது. இதனை மிகவும் விளக்கமாகக் கூற வேண்டுமாயின் சூழ்ச்சி, வஞ்சகம் என்று கூற முடியும். ஐரோப்பிய மகாயுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது உதுமானிய ஏகாதிபத்தியம் என்ற கட்டிடத்தின் அடிச் செங்கல்லையும் கூட உருவி விடுவதற்காக துருக்கியருக்கு விரோதமாக அறபியரை யுத்தம் செய்யத் தூண்டிய முறைகளும், அறபியர்களுடன் எழுத்து மூலமாக உடன்படிக்கை செய்து பிரம்மாண்டமான அறபி அரசாங்க நிர்மாணம் செய்யும் கனவைக் காண்பித்ததும், இறுதியாகத் தங்களது வாக்குறுதிகளை எல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு அறபி தேசங்களை ஐரோப்பியர் ஜீரணம் செய்துகொண்டதும் தற்போதைய நூற்றாண்டில் ஐரோப்பாவின் டிப்ளோமேஸிக்கு ஒப்பற்ற உதாரணமாக இருந்து வருகின்றன. அறபியர்கள் ஏமாற்றமடைந்து, அழிவுற்ற கதையின் விருத்தாந்தம் அடியிற் காணும் சில வரிகளிலிருந்து நன்கு தெரிய வரும். உலகத்தில் ஒழுக்கத்தையும் நாகரீகத்தையும் பரவச்செய்து முன்னேற்றத்துக்குக் கொண்டுவருவதாகப் பறைசாற்றும் குழாத்தினர்கள் எவ்வளவு துணிகரமாகப் பொய் வாக்குறுதிகளைச் செய்கின்றனர் என்பது இதிலிருந்து தெரியவரும்.

துருக்கியர்கள் இஸ்லாத்தைத் தழுவிய பின்னர் நாளதுவரை இஸ்லாம் மதத்தின் மீதுள்ள பக்திக்கு ஒரு சிறிய உதாரணம் வருமாறு:— அவர்கள் பரிசுத்த புண்ணிய பூமிகளாகிய ஹிஜாஸின்மீது அரசாட்சி செய்வதைப் பார்க்கினும் அவைகளுக்குத் தொண்டாற்றுவதையே சிரேஷ்டமாகக் கருதினர். துருக்கி சுல்தான்கள் தங்களது பெயருடன் "காதிமுல் ஹற

மைனி ஷரீபைனி" (சங்கைக்குரிய இரு ஸ்தலங்களின் ஊழியன்) என்ற சிறப்புப் பெயரைச் சூட்டிக்கொள்வதைத் தங்களுக்குக் கிடைத்த பெரும்பேறு என்பதாகக் கருதி வந்தனர். அவர்கள் தங்களை ஹிஜாஸின் அரசர்கள் என்று கருதாமல் "ஊழியர்" கள் என்றே கருதிவந்தனர். ஹிஜாஸ் வாசிகளிடம் வரி வசூல் செய்வதற்குப் பதிலாக அவர்களுக்கு உதவிபுரிவதற்காக ஷாம் முதலிய தேசங்களிலிருந்து கிடைக்கும் வரிப்பணத்திலிருந்து பிரதி வருஷமும் லக்ஷக்கணக்கான பவுன்களைச் செலவு செய்துகொண்டிருந்தனர். ஹிஜாஸ் தேசத்தில் அதிகாரம் வகிக்கும் பொறுப்பை நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது குடும்பத்தினரிடமே என்றென்றைக்குமாக ஒப்புவித்திருந்தனர். "மக்கத்து ஷரீப்" என்பதாக பொதுமக்கள் அழைத்து வந்த ஹிஜாஸின் அதிகாரியானவர் வெளிக்கு துருக்கி சுல்தான்களுக்குக் கீழ்ப்பட்டவராக இருந்தாலும், அந்தரங்கத்தில் துருக்கி சுல்தான்கள் மக்கத்து ஷரீபுக்குத் தொண்டு செய்வதைத் தங்களுக்குப் பெருமையாக எண்ணிவந்தனர். துருக்கி அரசாங்க பொக்கிஷம் மக்கத்து ஷரீபின் கால்களுக்குக் கீழில் வைக்கப்பட்டிருந்தது. துருக்கி சைனியங்கள் அவரிடும் கட்டளையை நிறைவேற்றுவதற்காக எந்நேரமும் தயாராக இருந்துகொண்டிருந்தது. ஹிஜாஸ் தேசத்திலுள்ள துருக்கி கவர்னர் அந்த ஷரீபினுடைய அற்ப சமிக்ஞையின்படி மாற்றப்பட்டுக்கொண்டிருந்தார்.

மகா யுத்தத்தின் நெருப்பானது உலகத்தில் கொழுந்து விட்டெரிந்தது. தொடர்ச்சியாக அநேகம் வருஷங்களாகக் கிறிஸ்துவர்களுடன் மல்லாடிக்கொண்டிருந்த துருக்கியர் தங்களது தலைவிதியை நிர்ணயித்துக் கொள்வதற்காகவும், இருப்பதா இறப்பதா என்ற முடிவைச்செய்து கொள்வதற்காகவும் இம்மகா யுத்தத்தில் ஜெர்மனியருடன் தோளோடு தோள் சேர்த்து நின்றனர். இங்கிலாந்திற்கும் அதனுடைய நேச தேசங்களுக்கும் துருக்கியர்கள் எப்பொழுதும் யுத்தத்திலேயே வாழ்பவர்கள் என்ற விஷயம் நன்கு தெரிந்திருந்ததால் இவர்களை நேருக்கு நேராக எதிர்த்து யுத்தம் செய்வது சுலபமான காரியமன்று என்பதையும் உணர்ந்திருந்தனர்.

ஆகவே, துருக்கியருக்கு விரோதமாகத் தங்களது வஞ்சக வேலைகளைச் செய்ய ஆரம்பித்தனர். அக்காலத்தில் ஷரீப்ஹுஸைன் என்பவர் ஹிஜாஸின் அதிபதியாக இருந்ததால் நேச தேசத்தார் அவருக்கு ஆசை வார்த்தைகள் காண்பிக்க ஆரம்பித்தனர். எல்லோருக்கும் முதலில் லார்டு கிச்னர் ஷரீப் ஹுஸைனிடம் தனது சூக்ஷ்க்கயிற்றைப் போட்டு துருக்கியருக்குக் கீழில் இருந்து ஹிஜாஸை ஆட்சிபுரிவதைப்பார்க்கினும் அவர்களை விட்டுப் பிரிந்து ஹிஜாஸில் தனி அரசு ஏற்படுத்திக்கொள்ளும்படி முதல்முதலாக ஷரீப் ஹுஸைனுக்கு ஆலோசனை கூறினர். ஆனாலும், அறபியர்களிலுள்ள சின்னஞ் சிறு குழந்தைகளும்கூட துருக்கியருக்காக இறைவனைப் பிரார்த்திப்பவர்களாக இருந்தனர். ஆதலால், அவர்களுக்கு விரோதமாகக் கலகஞ்செய்ய ஷரீப் ஹுஸைனுக்குத் தைரியம் வரவில்லை. எனினும், துருக்கியர்கள், அபிப்பிராய சுதந்திரம் புதிய சீர்திருத்தங்கள் முதலியவைகளை அளித்திருப்பதைப் புகலாக வைத்துக்கொண்டு மதவிஷயம் என்ற முறையில் துருக்கியருக்கு விரோதமாகப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தனர்.

இதே சமயத்தில் ஷாம், இராக் ஆகிய தேசங்களிலுள்ள சுதந்திரதாகிகள் துருக்கியரிடம் சுயராஜ்யம் கேட்கத் தலைப்பட்டனர். துருக்கியர்கள் இதுபோழ்து இருப்பதா இறப்பதா என்ற பிரசினையில் இருந்ததால் இராக், ஷாம் ஆகிய தேசங்களிலேற்பட்ட சுதந்திரக் கிளர்ச்சியைக் கொஞ்சம் கடுமையாக அடக்குமுறை செய்ய விரும்பினர். தவிரவும் இவ்விருதேசங்களிலுமுள்ள ஜனங்கள் கிட்டத்தட்ட அனைவரும் அறபி வம்சத்தினராகவே இருந்தனர். ஆதலால், ஸர். ஆர்தர் மக்கான் என்பவர் இத்தருணத்தை நல்ல சந்தர்ப்பமாகக் கருதி ஷரீப் ஹுஸைனுக்கு இன்னும் அதிகமாக ஆசை மொழிகளைக் கூறலானார். "நீங்கள் துருக்கியருக்கு விரோதமாகக் கலகஞ்செய்வீர்களாயின் நேசதேசத்தாரிருவரும் தங்களை ஹிஜாஸுக்கு மட்டுமென்ன? இராக், ஷாம் பலஸ்தீன் ஆகிய தேசங்களுக்கும்கூட அரசர் என்று அங்கிகரித்துக்கொள்வர். இவ்விதமாக அறபியர்கள் அனைவரும் பிரம்மாண்டமான ஒரு ஐக்கிய அரசாங்கத்தினராகி விடுவர்" என்று கூறினர்.

இவ்விஷயம் ஷரீப் ஹுஸைனை உறுதிபடவிருக்கும்படிச் செய்ய விடுவதாக இல்லை. ஆகவே, அவர் துருக்கியருக்கு விரோதமாகக் கலகம் செய்யத் துணிந்துவிட்டார். தனக்கு

திருப்தி யேற்படவேண்டும் என்பதற்காக ஆங்கிலேயருடன் எழுத்துமூலம் உடன்படிக்கையும் செய்துகொள்ள வேண்டுமென்றும் கூறினர். எனவே, 1916-ம் வருஷம் ஜனவரி மாதம் பிரிட்டிஷ் அரசாங்கம் ஷரீப் ஹுஸைனின் ஈமானை அடியிற்கண்ட உடன்படிக்கை ஷர்த்துகளுக்கு பதிலாகக் கிரயத்திற்கு வாங்கிக் கொண்டது.

1. பரிபூரண சுயேச்சையுள்ள தனி அறபி அரசாங்கத்தை ஏற்படுத்துவதாகவும், அவ்வரசாங்கத்திற்கு உள் வெளிநாடு ஆகியவைகளில் பூரணசுயேச்சை இருக்கும் என்பதாகவும் அவ்வரசாங்கத்தின் எல்லை பின்வருமாறு இருக்கும் என்பதாகவும் பிரிட்டிஷ் அரசாங்கம் வாக்களிக்கிறது.

கிழக்கே:—பாரசீக வளைகுடா, ஊரான் எல்லைப்புறம், பாரசீகவளைகுடாவில் டைக்ரீஸ் நதியின் முகத்துவாரம்

மேற்கே:—செங்கடல், சூயஸ்கால்வாய்

வடக்கே:—அலப்போ மாகாணம்.

வடக்கு மோசூல்பிரதேசம், யூப்ரட்டீஸ் நதி ஆகியவைகள் இப்புதிய அரசாங்கத்தின் எல்லைகளாக இருக்கும். ஆனல், ஏடன்மாத்திரம் இதற்குக் கட்டுப்பட்டதல்ல.

2. இப்புதிய அரசாங்கத்தில் அந்நியர் தலையிடுவதை—அத்தலையீடு எம்முறையி லிருந்த போதினும் சரியே— சகலத்தையும்விட்டு பிரிட்டிஷ் அரசாங்கம் காப்பாற்றும். கடல் திடல் ஆகிய இரண்டுவகையிலும் வெளியிடத்திலிருந்து அக்கிரமிப்புச்செய்வதைவிட்டு இப்புதிய அரசாங்கத்திற்குப் பாதுகாப்பளிக்கும். பகைவர்களின் சதியாலோசனையினலோ அல்லது அறபித்தலைவர்கள் ஒருவருக்கொருவர் விரோதம்பாராட்டிக் கொள்வதனலோ இப்புதிய அரசாங்கத்திற்குள் உள்நாட்டுக் குழப்பமேற்படுமாயின் ஷரீப்ஹுஸைனின் வேண்டுகோளின்பேரில் பிரிட்டிஷ் அரசாங்கம் அதில் தலையிட்டு ஷரீப்ஸுஸைனுக்கு உதவிபுரியும். இவ்விதமானஉதவி இப்புதிய அரசாங்கம் தானகத்தனது காரியத்தைப் பார்த்துக் கொள்ளச் சக்திபெறும்வரை கிடைத்துவரும் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் வாக்களிக்கிறது.

3. புதிய அறபி அரசாங்க நிர்மாணம் பூர்த்தியடையும்வரை பஸரா பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மேற்பார்வையின் கீழிலிருந்துவரும். இதற்கு பதிலாக பிரிட்டிஷ் அரசாங்கம் காலநிலைக்கேற்றவாறு புதிய அறபி அரசாங்கத்திற்கு ஒரு தொகை கொடுத்துவரும்.

4. யுத்தகாலத்தில் இப்புதிய அறபி அரசாங்கத்திற்கு எம்மாத்திரம் யுத்தக்கருவிகளும், பணமும் தேவையாகுமோ அவையனைத்தையும் பிரிட்டிஷ் அரசாங்கம் கொடுத்துதவும் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் வாக்களிக்கிறது.

ஏடனையும், பஸராவையும் தவிர்த்து ஜஸீரத்துல் அறப் முழுவதிலும் ஷரீப்ஹுஸைனுடைய சுயேச்சையான தனி ஆட்சியை ஒப்புக்கொண்டிருக்கிற இவ்வுடன்படிக்கைக்குப் பின் ஷரீப்ஹுஸைன் திருமக்காவில் யுத்தக் கருவிகளை இரகசியமாக ஒன்றுசேர்க்க ஆரம்பித்துவிட்டார். அதுபோழ்து துருக்கி சுல்தான்களின் அரண்மனையில் வளர்ந்தவரும், பீல்டு மார்ஷல் ஜெனரல் ஜமால்பாஷாவினுடன் ஷாம் தேசத்து யுத்த அரங்கத்திலிருந்தவருமான தனது மூத்தகுமாரர் அமீர்பைஸலை சூயஸ்கால்வாய்மீது படையெடுக்கவேண்டும் என்ற புகல் கூறி தம்மிடம் அழைத்துக்கொண்டார்.

எனவே, ஒருபக்கம் மக்கத்து ஷரீப் ஹுஸைன் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் எழுத்து உடன்படிக்கையை நம்பி உதுமானியா அரசாங்கத்திற்கு விரோதமாக ஆயுதந்தாங்கிக் கலகஞ்செய்வதற்கான முஸ்தீப்புகளைச் செய்துகொண்டிருந்தார். ஆனல், மற்றொருபக்கத்தில் அதாவது 1916—ம் வருஷம் மே மாதத்தில் பிரான்சும் பிரிட்டனும் ஜஸீரத்துல் அறபைத் தங்களுக்குள் பங்குபோட்டுக் கொள்வதற்காக ஒரு ரகசிய உடன்படிக்கையைச் செய்துகொண்டிருந்தனவானதால் இவ்விரகசிய உடன்படிக்கையின் ஷர்த்துகளின்படி பிரிட்டிஷாருக்கு பாலஸ்தீனமும், பிரஞ்சுக்காரருக்கு ஷாம் தேசத்திலுள்ள கடற்கரைப் பிரதேசத்தில் ஸூரிலிருந்து ஸ்கந்தருனுவரையிலும் பாகமாகக் கொடுப்பதென்றும், ஹிஜாஸில் கலகம் செய்கிற நிபந்தனையிருப்பதுடன் டமஸ்கஸிலிருந்து அலப்போவரை அதாவது ஷாம் தேசத்தில் பாக்கியுள்ள பிரதேசத்தை ஷரீப்ஹுஸைனுக்குக் கொடுப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. ஆனல், பிரிட்டிஷாரும் பிரஞ்சுக்காரர்களும் செய்து கொண்ட இவ்வுடன்படிக்கை ஷரீப் ஹுஸைனுக்குக் கொஞ்சங்கூடத் தெரியாது. ஆகவே, ஷரீப் ஹுஸைன் 1916—ம் வருஷம் ஜூன் மாதத்தில் துருக்கியருக்கு

விரோதமாகக் கலகம்செய்ய ஆரம்பித்து விட்டார். ஹிஜாஸ்வாசிகள் தங்களுக்கு விரோதமாகக் கலகஞ்செய்து செய்ந்நன்றி கொல்வர் என்ற எண்ணம் துருக்கியரின் கனவிற்கூட உண்டானதில்லை.

ஷரீப் ஹுஸைனின் புதல்வர்களான அமீர் ஜைதும், அமீர் அப்துல்லாவும் மக்காமு அல்லமாவிலும் தாயிபிலும் துருக்கியர்களை முற்றுகையிட்டு அவர்களை இரக்கமில்லாமல் வாளுக்கு இரையாக்கினர். ஷரீப் ஹுஸைனின் பெரிய குமாரர் அமீர் பைஸல் மதீனாமுனவ்வராவை முற்றுகையிட்டு முன்னேறினர். ஆனால், மதீனா முனவ்வராவில் துருக்கியருக்குப் போதிய ராணுவபலமிருந்தது. அவர்கள் விரும்பி இருப்பாராயின் பல மாதங்கள் வரை அமீர்பைசலை மதீனாவின் அண்டையிற்கூட வரவிடாமற்றடுத்திருக்க முடியும். ஆஷிக்கே றஸூலான துருக்கியர்கள் குண்டு போட்டால் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களது ரௌலா ஷரீபின்மீது தவறுதலாகவேனும் விழுந்துவிடுதல் கூடும் என்ற ஐயத்தால் தங்களிடம் பூரண பலமிருந்தும் அமீர்பைசலின் பட்டாளத்தை எதிர்த்துத் தாக்கவில்லை. என்னே! நாயகம் (ஸல்.) அவர்கள்பால் துருக்கியருக்கு இருந்துவரும் பக்தி.

அமீர்பைசலுடைய படைகள் மதீனாவில் பிரவேசித்தவுடன் துருக்கி சிப்பாய்கள் கோட்டைக்குள்ளிருந்து வெளியேறினர். ஆனால், அவர்களது வாள்கள் உரையை விட்டுக் கழறப்படவில்லை. துப்பாக்கிகள் மதீனா முனவ்வராவின் பரிசுத்தபூமியை முத்தமிட்டுக்கொண்டிருந்தன. கைகள் ரௌலாஷரீபின் திசையில் கடைசி சலாமுக்காக உயர்த்தப்பட்டிருந்தன. நாவில் ஸலவாத்துகள் முழங்கின. அவர்களது மார்பில் துரோகி பைசலுடைய காட்டுமிராண்டிகளான பதவி அறபிப்படையின் குண்டு வந்து பாய்ந்து கொண்டிருந்தன. துருக்கியர் நினைத்திருந்தால் ஒரு க்ஷணப்பொழுதில் அப்படையினரைத் தங்களது பீரங்கிகளால் ஊதிவிடமுடியும். ஆனால், அவர்கள் "அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்கும் யாறஸூலல்லாஹ்" என்ற ஆன்மசாந்தியை அளிக்கும் வாக்கியங்களைக் கூறிப் பூமியில் சாய்ந்து கொண்டிருந்தனர். எனினும், தாஜ்தாரேமதீனா, மதீனா நகராளும் நாயகம் (ஸல்.) அவர்களது அயலகத்தார் இதனை லக்ஷியம் செய்யாதிருந்தனர்.

1916—ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் மிக வைபவமாக மக்கத்து ஷரீப் ஹுஸைனுக்குப் பட்டாபிஷேகம் நடைபெற்றது. நேசதேசத்தார் அவரை சுயேச்சையுள்ள அரசர் என்ற நற்சாக்ஷிபத்திரத்தையும் வழங்கினர். இங்கிலாந்திலிருந்தும் பிரான்சிலிருந்தும் யுத்தக் கப்பல்கள் வாழ்த்துச் செய்திகளைக் கொண்டு அறபிக் கடற்கரையை நோக்கி வந்தன. துருக்கியரின் அறபிப் பட்டாளம் துருக்கியருக்கு துரோகம் செய்து மக்கத்து ஷரீப் ஹுஸைனின் கொடியின்கீழ் ஒன்றுகூடவாரம்பித்தன.

ஒருபுறம் இராக், ஷாம், பாலஸ்தீனம் ஆகிய தேசங்களின்மீது நேசதேசத்தார் முன்னேறிக் கொண்டிருந்தனர். மற்றொரு புறம் மக்கத்து ஷரீப் துருக்கியரைக் கண்டவிடமெல்லாம் படுகொலைபுரிந்து கொண்டிருந்தார். அமீர்பைசலுடைய படைகள் ஷாம் தேசத்தைக் கைப்பற்றின. பாலஸ்தீனம் சுயேச்சையுள்ள நாடாக இருக்கவேண்டும் என்பதற்காக பலநூற்றாண்டுகள்வரை முஸ்லிம்கள் யுத்தம்செய்து கிறிஸ்துவர்களின் ஆதிக்கத்திலிருந்து சுத்தப்படுத்திய அதே புண்யபூமியின்மீது அமீர் பைஸலின் மன்ஹூஸான கரங்களால் சிலுவைக் கொடி நட்டுவைக்கப்பட்டது. துருக்கியர் தோல்வியடைந்தனர். மகா யுத்தமும் முடிவடைந்தது.

ஷரீப்ஹுஸைன் ஐக்கிய அறபி அரசாங்க நிர்மாணம் என்ற நீர்மேலெழுத்தைக் கையிலேந்திக்கொண்டு முன்னே வந்தார். ஆனால், இப்பொழுதோ அவ்வுடன்படிக்கையின் மதிப்பு குப்பைத்தொட்டியின் காகிதத்திற்குச் சமமாகவே இருக்கிறது. பிரஞ்சு பிரிட்டிஷ் இரகசிய உடன்படிக்கை அமலில் வந்தது. ஷரீப்ஹுஸைனுக்கு ஹிஜாஸ் மாகாணத்தை மட்டிலும் ஆட்சிபுரிவதற்குள்ள உரிமைதான் கிடைத்தது. இதற்கு முன்னர் இரகசிய உடன்படிக்கையில் ஷரீப் ஹுஸைனுக்காக நியமிக்கப்பட்டிருந்த ஷாம்தேசத்திலுள்ள எஞ்சிய சொற்ப பாகமும் கூட அவருக்குக் கிடைக்கவில்லை. அந்தப் பாகத்தையும் பிரான்சு கைப்பற்றிக்கொண்டது. அமீர் பைசல் ஷாம் தேசத்தை விட்டு வாள் வலிமையால் வெளியேற்றப்பட்டார்.

"தீன் துன்யா"

பழங்காலச் செய்திகள்

மனிதன் சரித்திரங்களைப் படிக்கிறான். ஆனாலும், ஆழ்ந்த கருத்துடன் படிக்கிறதில்லை. மேலெழுந்தவாரியாகவே படித்து இன்புறுகிறான். எனினும் சரித்திரங்கள் முற்காலம் தற்காலம் நிகழும் சம்பவங்களையும், யுத்தங்களையும் மாத்திரம் தன்னுள்ளடக்கிக் கொண்டில்லை. அவைகளில் மனிதனுடைய குணாதிசயங்களும், அவனுக்கேற்படும் கஷ்ட நஷ்டங்களில் அவனிலேற்படும் மாறுதல்களும், கோத்திரங்கள், வம்சங்கள் மதம் ஆகியவைகளின் விலைமதிக்க முடியா மாணிக்கங்களைப் போன்ற உணர்ச்சிகளும் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன. இவை மனித வர்க்கத்திற்குரிய பொதுவான மூலதனங்களாகும்.

சரித்திரம் எவ்வளவுதான் சீர்கேடான முறையில் எழுதப்பட்டிருந்தாலும் சரி, அல்லது வரிசைக் கிரமமின்றி வரையப்பட்டிருந்தாலும் சரி, அல்லது சில குறிப்பிட்ட விஷயங்களை மட்டிலும் எழுதப்பட்டிருந்தாலும் சரி அவைகளின் ஏட்டில் இயற்கை என்றபுத்தகத்திலிருந்து அழிக்க முடியாத சில அக்ஷரங்கள் அவசியம் கிடைக்கத்தான் செய்யும். ஏனெனில், அவை பற்பலவிதமான வர்ணங்களுடன் தோற்றங்களுடன் ஒவ்வொரு காலத்திலும் நடைபெறும் சம்பவங்களுடன் இணைக்கப்பட்டதாகவே இருக்கின்றன. மனித ஒழுக்கத்தை அச்சரித்திரங்கள் இரகசியமாகவும் சமிக்ஞையாகவும் எடுத்துக் கூறுபவனவாகவே இருக்கின்றன. அகக்கண்ணால் அவைகளை நோட்டமிடுபவருக்கு சரித்திரங்கள் மனித ஒழுக்கத்தால் உண்டுபண்ணப் பட்டவைகளென்பதும், மனிதவர்க்கம் இவ்வொழுக்கங்களுடன் ஒவ்வொரு காலத்திலும் பிணைக்கப்பட்டிருக்கிறது என்பதும் தெரியவரும். இதுசம்பந்தமான சில சரித்திரசம்பவங்கள் இதனடியில் எடுத்தெழுதப்படுகின்றன. வாசக நேயர்கள் மேலெழுந்தவாரியாக அவைகளை கவனியாது ஆழ்ந்து கவனிப்பார்களென நம்புகிறோம்.

பாரசீக ஏகாதிபத்தியத்துடன் ஹஜ்றத் உமர் (றலி.) அவர்கள் யுத்தம்செய்த காலத்தில் முஸ்லிம்களுக்கும் பாரசீகர்களுக்கு மிடையில் காதிஸிய்யா என்ற இடத்தில் நடைபெற்ற சண்டை மிகவும் முக்கியமானது. இந்தச் சண்டையில் முஸ்லிம்களுக்குக் கிடைத்த வெற்றியானது பாரசீகதேசம் பெலுஜிஸ்தானம் முதலிய பலதேசங்கள் முஸ்லிம்கள் கையில் வீழ்ச்சியடைவதற்கு முதற்படி யெனலாம். இந்தச் சண்டையில் பாரசீகப் படைக்கு 'ருஸ்தம்' என்பவனும், முஸ்லிம்களது படைக்கு ஸஅது றலியல்லாஹு அன்ஹுவும் தளகர்த்தர்களாக இருந்தனர்.

(1)

பாரசீகப் படையின் தளகர்த்தனை ருஸ்தம் தம்முடைய புஜபல பராக் கிரமத்தையும், தமது படைப் பெருக்கையும், ஆயுதபலத்தையும் கண்டு பெருமை கொண்டு "இன்றைக்கு யான் அறபிகளனைவரையும் நசுக்கிவிடுவேன்" என்று இறுமாப்புடன் கூறினன். அப்பொழுது அவனது போர்வீரர்களில் ஒருவர் "கடவுள் விரும்பினால் தானே" என்பதாகக் கூறினார். அதற்கவன் "கடவுள் விரும்பவில்லையானாலும் நசுக்குவேன்" என்றனன்.

சண்டை ஆரம்பமாயிற்று. இரு கக்ஷியினரிலுமுள்ள குதிரை வீரர்களும் கைகலந்து யுத்தம் செய்தனர். பிரபல கவிவாணரும், போர்வீரருமான அபூமுஹ்ஜின் தக்பீ என்ற ஒருவர் மதுபானம் அருந்திய குற்றத்திற்காக முஸ்லிம் தளகர்த்தரான ஹஜ்றத் ஸஅது (அலி) அவர்களால் சிறைக்கூடத்தில் வைக்கப்பட்டிருந்தார். முஸ்லிம்களுக்கும் பாரசீகர்களுக்குமிடையில் கைகலந்த யுத்தம் நடைபெறுவதை இவர் சிறைச்சாலையின் ஜன்னல்வழியே பார்த்துக்கொண்டிருந்தார். இவர் இயற்கையிலேயே போர்வீரராகவும், பல முறை பகைவர்களை எதிர்த்து யுத்தம் செய்தவராகவும், குதிரைவீரராகவும் இருந்ததால் யுத்தம் நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டு சிறைக்குள் வீற்றிருக்கமுடியவில்லை. தாமும் போர்க்களஞ்சென்று பகைவரை ஒடுக்க வேண்டுமென்ற பேரவா உண்டாயிற்று. ஆனால், சிறைச்சாலைக்குள்ளிருப்பதால் தமது அவாவை

நிறைவேற்றிக்கொள்ள இடமில்லை. முஸ்லிம் தளகர்த்தரான ஸஅது (றஹ்) அவர்கள் போர்க்களத்தில் படைகளை நடத்திக்கொண்டிருந்ததால் அவரிடம் அனுமதி பெறவும் வழியில்லை.

எனவே, ஹஜ்றத் ஸஅது (றலி) அவர்களது வாழ்க்கைத்துணைவியான ஸல்மா (றலி) அவர்கள் அங்கிருப்பதுகண்டு, அவ்வம்மையிடம் தமது விருப்பத்தை அறிவித்து "அல்லாஹுதஆலாவுக்காக தற்போது தம்மீதுள்ள விலங்குகளை அவிழ்த்துவிட்டால் தாம் யுத்தத்திற்குச்செல்வதாகவும், உயிர்பிழைத்துதிரும்பி வந்தால் தாமே வலியவந்து மறுபடியும் விலங்குகளை மாட்டிக்கொள்வதாகவும் வெகுவாகக் கூறி வேண்டிக்கொண்டார். ஹஜ்றத் ஸஅது (றலி) அவர்களைக்கேட்காமல் சிறையிலிருக்கும் கைதியை யுத்தத்துக்கனுப்புவது உசிதமன்றென்றெண்ணி அவ்வம்மையார் அவரை அவிழ்த்துவிட மறுத்துவிட்டார். எனவே, அபூமுஹ்ஜின் தக்பீ (றலி) அவர்களுக்கு வருத்தமேலீட்டால் தமது நிர்ப்பந்தமான நிலைமையைப் பற்றியும் இஸ்லாத்திற்காக விரோதிகளை எதிர்த்து யுத்தம் செய்ய முடியாமல் தாம் பிணைக்கப்பட்டிருப்பதையும் பற்றி வருந்திச் சில செய்யுள்களைக் கூறிப் புலம்பினர். இஸ்லாம் மதத்தின்பாலிவருக்குள்ள பற்றுதலையும் இஸ்லாம் மதத்தைக் காப்பதற்காக யுத்தம்செய்து உயிர்த்தியாகம் செய்ய இவருக்குள்ள பேரவாவையும் இந்தச் செய்யுள்களின் மூலம் உணர்ந்த ஹஸ்ரத் ஸல்மா (றலி.) தாமே மறுபடியும் வந்து அவரது கால்களில் மாட்டப்பட்டிருந்த விலங்குகளை அவிழ்த்து விட்டார்.

ஹஜ்ரத் அபூ முஹ்ஜின் தக்பீ (றஹ்.) அவர்கள் தமக்கு விடுதலை கிடைத்தவுடன் அசுவங்கள் கட்டப்பட்டிருக்குமிடம் நேராகச்சென்று தமக்கிஷ்டமான ஓரசுவத்தைப் பிடித்துக்கொண்டு போர்க்கருவிகளை யணிந்து மாவேகம் மனவேகமாகப் பகைவர்கள் மீது பாய்ந்து விழுந்துஎதிரிகளின் அணிகளைச்சின்னபின்னப்படுத்தி அவர்களை பிணக்குவியலாகக் குவித்துக்கொண்டிருந்தார். தூரத்திலிருந்து படைகளை நடத்திக் கொண்டிருந்த தளகர்த்தரான ஹஜ்ரத் ஸஅது (றலி.) அவர்கள் புதியதோராசாமி போர்க்களம் வந்து பகைவர்களைத்தாக்கி அவர்களை பிணக்குவியலாக்கிக்கொண்டு மிகத்திறமையாகப் பகைவர்களைச் சிதறடிப்பதைப்பார்த்து ஆச்சரியமுற்றவராய், "இவ்வீரர் எவரோ? இவரது யுத்த முறையும் தாக்குகையும் அபூமுஹ்ஜின் தக்பீயின் முறையைப் போலிருக்கிறதே! ஒருவேளை அவர் தான் போர்க்களம் வந்துவிட்டாரோ? அவரை நாம் சிறைக்கூடத்திலன்றோ வைத்திருக்கிறோம்? அவர் எங்ஙனம் போர்க்களம் வரமுடியும்? இவ்வீரரை இன்னர் என்றறிய முடியவில்லையே, ஒருவேளை இது தெய்வாதீனமாகக் கிடைத்த உதவியாக இருக்குமோ" என்றெல்லாம் பலவாறு தமக்குள் சிந்தித்துக் கொண்டிருந்தாராயினும் போர்க்களத்தில் அவரைப்பற்றி அதிகம் கவனிக்க முடியாமல் யுத்தத்தைப்பற்றிக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். இறுதியாக அன்றைய யுத்தம் முஸ்லிம்களுக்கு வெற்றியாக முடிந்தது. பகைவர்கள்புறங்காட்டினர்கள்.

போர்க்களத்திலிருந்து பகைவர்கள் புறங்காட்டி ஓடியபின் ஹஜ்ரத் அபூமுஹ்ஜின்தக்பீ தமது வாக்குத்தத்தத்தின்படி மறுபடியும் சிறைக்கூடம்வந்து விலங்குகளை மாட்டிக்கொண்டார். பிறகு, இன்று நடைபெற்ற இவ்விஷேத்தைப்பற்றி ஹஜ்றத் ஸஅது (றலி) அவர்கள் தமதுவாழ்க்கைத் துணைவியான ஹஜ்ரத் ஸல்மா (றலி) அவர்களிடம் பிரஸ்தாபித்தார்கள். அப்பொழுது அவ்வம்மையார் நடந்த விருத்தாந்தங்களைக்கூறி அவ்வீரர் அபூமுஹ்ஜின் தக்பீதான் என்று அறிவித்ததுடன், அனுமதியில்லாமல் அவரை அவிழ்த்துவிட்டதற்காக மன்னிப்புக் கேட்டார். இதனையறிந்தவுடன் ஹஜ்றத் ஸஅது (றலி) அவர்கள் "முஸ்லிம்களுக்காக இத்துணை உயிர்த்தியாகம்செய்யும் உணர்ச்சியுள்ள வீரரை யான் எங்ஙனம் தண்டிப்பேன்" என்று கூறி அதேக்ஷணத்திலேயே அவரை விடுதலை செய்துவிட்டார்கள். ஹஜ்றத் அபூமுஹ்ஜின் தக்பீ (றஹ்) அவர்களும் தளகர்த்தர் அவர்களது அன்பையும் சிறந்த பெருந்தன்மையையும் வியந்து "இனிமேல் மதுபானம் அருந்தேன்" என்று பிரமாணம் செய்துகொண்டார்.

(2)

இராக்கில் நடந்த இரண்டாவது யுத்தத்தின்போழ்து பாரசீகச்சேனதிபதியின் உதவிக்காக வேறொரு படையையும் அனுப்பினர்கள். பாரசீகர்களின் இப்புதியபடையின் ஒரு பிரிவிற்கு நர்ஸீ என்பவனும், மற்றொரு பிரிவிற்கு ஜாப்பான் என்பவனும் தளகர்த்தர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். இவ்விருவரும் யுத்தத்தில் கைதேர்ந்த வீரர்களும் அனுபவசாலிகளுமாவார்கள்.

இவ்விருவரும் முஸ்லிம்களை எதிர்த்து நன்கு யுத்தம் செய்தனராதலின், இருவரும் தோல்வியடைந்தனர். இந்தயுத்தத்தில் ஜாப்பான்என்பவனும் மர்வான்ஷாஹ் என்ற மற்றொரு தளகர்த்தனும் போர்க்களத்திலேயே யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது முஸ்லிம்களால் பிடிக்கப்பட்டனர். மர்வான்ஷாஹ் என்பவன் அதே இடத்தில் வெட்டுண்டிறந்தனன். ஜாப்பான் என்பவன் புதிதாகப் போர்க்களம் வந்ததால் அவனை முஸ்லிம்கள் இன்னார் என்றறியமாட்டார்கள். மேலும் அவன் வயோதிகனாகவு மிருந்ததால் தம்மைப்பிடித்த முஸ்லிம்வீரரைநோக்கி "வயோதிகனான எம்மைப் பிடித்துச் சிறைசெய்வதால் உமக்கென்ன பிரயோஜன மேற்படப்போகிறது, என்னை நீர் விட்டு விடுவாயாயின் எனக்குப் பதிலாக இரண்டுவாலிப அடிமைகளைத்தருவேன்" என்றனன். அம்முஸ்லிம்வீரருக்கு இவ்வயோதிகர் தளகர்த்தர் என்பது தெரியாததால் ஒன்றுக்கிரண்டு கிடைப்பதைநினைத்து சம்மதித்துக்கொண்டார்.

யுத்தம் முடிந்தபிறகு முஸ்லிம்களுக்கு இவ்வயோதிகன் தங்களது எதிரிகளின் தளகர்த்தர்களில் ஒருவனென்று தெரியவந்தது. ஆகவே, அவர்கள் இரண்டுவாலிப அடிமைகளுக்குப் பதிலாக அவனை விடுதலைசெய்யக்கூடாது என்று கூச்சலிட்டனர். அதுசமயம் முஸ்லிம்களின் தளகர்த்தராயிருந்த ஹஜ்றத்அபூஉபைத் (றலி) அவர்கள் முஸ்லிம்கள் வாக்குறுதிக்கு மாறு செய்வது கூடாது; முஸ்லிம்களில் எவர் வாக்களித்திருந்தாலும் அதனை நாம் எல்லோரும் நிறைவேற்ற முயற்சிப்பதே முறையாகும் என்றுகூறி இரண்டு வாலிப அடிமைகளுக்குப் பதிலாக பாரசீகர்களின் பிரபல தளகர்த்தர்களிலொருவனான ஜாப்பானை விடுதலை செய்துவிட்டார்கள்.

(3)

பாரசீக தேசத்தில் பாரூஸமா என்றும், ஸவ்வாபீ என்றும் இரண்டு பிரபுக்களிருந்தனர். இவ்விரு பிரபுக்களும் இஸ்லாமியப் படைகளிடம் சரண்புகுந்து இஸ்லாமிய ஆட்சிக்குக் கீழ்ப்படிந்தனர். முஸ்லிம்களின்பால் தங்களுக்குள்ள விசுவாசத்தையும், உண்மையையும் காண்பித்துக்கொள்வதற்காக ஒருநாள் இவர்கள் முஸ்லிம் சேனாதிபதியான ஹஜ்றத் அபூஉபைத் (றலி.) அவர்களிடம் பலவிதமான ருசியுள்ள பதார்த்தங்களைத் தயார் செய்தனுப்பினார்கள். ஹஜ்றத் அபூஉபைத் (றலி.) அவர்கள் அவ்விருவரையும் நோக்கி, இந்தப் பதார்த்தங்கள் நமது போர்வீரர்கள் அனைவருக்குமா? அல்லது எனக்கு மாத்திரம் தானா? என்று வினவினார்கள். அதற்கவர்கள் "அவசரமாகத் தயார் செய்ததால் போர்வீரர்களனைவருக்கும் தயார்செய்யப் போதிய சாமான்கள் கைவசமில்லை. ஆதலின், இவை தங்களுக்கு மாத்திரம் தான்." என்று பதிலளித்தார்கள். அதற்கு முஸ்லிம் சேனாதிபதியான ஹஜ்றத் அபூஉபைத் (றலி.) அவர்கள் "முஸ்லிம்களுள் ஒருவரைப் பார்க்கினும் ஒருவர் உயர்ந்தவரன்று?" என்று கூறி அந்தப்பதார்த்தங்களை தமக்காக மாத்திரம் என்று ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள்.

(4)

முதலாவது இராக் யுத்தத்தில் வைப்பு என்ற இடத்திற்குப் பக்கத்தில் பாரசீகர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பலத்த போராட்டம் நிகழ்ந்தது. இந்தப்போரில் பாரசீகர்களுக்கு பூரான்தக்து என்பவன் தளகர்த்தனாக இருந்தனன். முஸ்லிம் வீரர்களுக்கு ஹஜ்றத் முதன்னைஷைபானீ (றலி.) அவர்கள் தளகர்த்தராக இருந்தார்கள். முஸ்லிம்கள் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு தக்பீர் சொல்லும் வழக்கம் அக்காலத்திலேயே ஏற்படுத்தப்பட்டிருந்ததால் முதலாவது தக்பீர் சொன்னவுடன் முஸ்லிம் வீரர்கள் தங்களுடைய ஆயுதங்களை அணிந்துகொள்வர். இரண்டாவது தக்பீர் சொன்னவுடன் ஆயுதங்களைச் சரியாக வைத்துக்கொண்டு ஆயத்தமாகிவிடுவர். மூன்றாவதுமுறை தக்பீர் சொன்னவுடன் பகைவர்களைத் தாக்குவார்கள்.

இவ்வழக்கத்திற்கேற்ப இஸ்லாமியச் சேனைகளின் தளகர்த்தரான ஹஜ்றத் முதன்னைஷைபானீ (றலி) அவர்கள் இரண்டாம்முறை தக்பீர் சொல்வதற்குள்ளாகவே எதிரிகளின் சைனியங்கள் முஸ்லிம் வீரர்கள்மீது பாய்ந்து தாக்கினார்கள். உடனே முஸ்லிம்களும் தங்களது தலைவரின் மூன்றாவது தக்பீரை எதிர்பார்க்காமல் பகைவர்களைத் தடுத்து நிறுத்த முன்னேறினர். முஸ்லிம் தளகர்த்தரான ஹஜ்றத் முதன்னைஷைபானீ (றலி.) அவர்களுக்கு தமது போர்வீரர்களின் இச்செய்கை கோபமூட்டிவிட்டது. கோபத்தால் தமது தாடியைக் கடித்துக்கொண்டு "வீரர்களே!

அல்லாஹு^த ஆலாவுக்காக இஸ்லாம் மதத்தைக் கேவலப்படுத்தாதிர்கள்? என்று உரத்துக் கூறினர். இச்சப்தம் கேட்டவுடன் முஸ்லிம் வீரர்கள் பகைவர்களின் தாக்குதலேயும் பொறுத்துக்கொண்டு தங்களது ஸ்தலங்களில் திரும்பவும் வந்து நின்றனர். பிறகு மூன்ருவது தக்பீர் சொன்ன பிறகுதான் பகைவர்கள்மீது அடர்ந்தேறினர்கள்.

(5)

பாரசீகச் சக்கரவர்த்தியான யஜ்துகுர்து முஸ்லிம்களுடன் சமரசம் பேசுவதற்காக முஸ்லிம் தளகர்த்தரிடம் தூதுவர்களை அனுப்பி, அவரது பிரதிநிதிகளைத் தம்மிடம் அனுப்பும்படி கேட்டுக்கொண்டார். சமாதானப் பிரியர்களான முஸ்லிம்கள் இதனை வரவேற்றனர். முஸ்லிம் தளகர்த்தரான ஹஜ்றத் ஸஅது (றலி) அவர்கள் தமது பிரதிநிதிகளை அனுப்பி வைத்தார். இப்பிரதிநிதிகள் வந்த அரவம் கேட்டு யஜ்துகுர்து தமது தர்பாரை அலங்கரித்துக்கொண்டு, முஸ்லிம் தூதுவர்களை அழைத்துவரும்படி கட்டளையிட்டனன்.

முஸ்லிம் தூதுவர்கள் தர்பாருக்குச் சென்றவுடன் அவர்களை நோக்கி யஜ்துகுர்து "நீங்கள் இத்தேசத்திற்கு ஏன்வந்தீர்கள்?" என்று வினவினன். முஸ்லிம் பிரதிநிதிகளின் தலைவரும் பிரபல தளகர்த்தருமான ஹஜ்றத் நுஃமானுப்னுமுக்ரின் (றஹ்) அவர்கள் பாரசீகத்தின்மீது படையெடுக்கவேண்டி ஏற்பட்ட நிர்ப்பந்தத்தை விளக்கிக்கூறி இறுதியாக ஜிஸ்யாவரி கொடுப்பதாக ஒப்புக்கொண்டால் சமாதானம்என்றும், இல்லையேல் வாளாயுதத்தின் மூலம் முடிவு செய்துகொள்ளலாம் என்றும் கூறினர். பிறகு, பாரசீகச் சக்கரவர்த்தி முஸ்லிம்களின் நிலைமையைப்பற்றி அவமதித்துப் பேசினன். அதற்கு மறுமொழியாக முஸ்லிம் பிரதிநிதிகளில் ஒருவரும் பிரபல பிரசங்கியுமான முகையரத்துப்னுஜராரா (றலி) அவர்கள் இஸ்லாம் மதத்தின் சிறப்பைப் பற்றியும் முஸ்லிம்களின் ஒழுக்கத்தைப் பற்றியும் மிகத்திறமையாக எடுத்துக்கூறி முஸ்லிம்கள் மீது யஜ்துகுர்து கூறிய பழிச் சொற்களுக்குப் பதிலளித்தார். இப்பிரசங்கத்திற்குப் பின் யஜ்துகுர்து தக்கவாறு பதில் கூறமுடியாமல், கோபமடைந்து "தூதுவர்களைக் கொல்வது குற்றமில்லை என்றிருந்தால் உங்களில் எவரும் உயிர் தப்பித் திரும்பச் செல்ல முடியாது" என்று கூறி ஒரு கூடை மண் கொண்டுவரும்படி தமது ஏவலாளருக்குக் கட்டளையிட்டனன். பிறகு, முஸ்லிம் தூதுவர்களை நோக்கி உங்களில் சிறந்தவர்—கௌரவம் மிக்கவுள்ளவர் எவர் என்று வினவினன். அப்பொழுது முஸ்லிம் தூதுவர்களிலொருவரான ஆஸிமுப்னு உமர் (றலி.) அவர்கள் "நான் தான்" என்று கூறி முன் சென்ருர். அவரது தலையின்மீது மண் கூடையை ஏற்றிவைத்துத் தூதுவர்களைத் திரும்ப அனுப்பிவிட்டான். இப்படிச் செய்ததால் முஸ்லிம் தூதுவர்களை அவமானப்படுத்திவிட்டதாக அவன் நினைத்துக்கொண்டான்.

ஆனல், ஹஜ்றத் ஆஸிமுப்னு உமர் (றலி.) அவர்கள் மண் கூடையைத் தலையிலிருந்து அகற்ருமல் அப்படியே குதிரை மீதேறித் தமது சேனதிபதியான ஹஜ்றத் ஸஅது (றலி.) அவர்களிடம் வேகமாக வந்து 'வெற்றி வெற்றி' என்று கூறி, "பகைவர்கள் தங்களுடைய பூமியைத் தாங்களாக நம்மிடம் ஒப்புவித்துவிட்டார்கள்" என்று கூறினர். இதற்குப் பிறகு தான் காதிஸிய்யா யுத்தம் நடைபெற்று முஸ்லிம்கள் பாரசீகர்களை முறியடித்தனர்.

(6)

மூன்ருவது இராக் யுத்தத்தில் காதிஸிய்யா என்ற இடத்தில் முஸ்லிம்களுக்கும் பாரசீகர்களுக்கு மிடையில் நடைபெற்ற யுத்தத்தின் போழ்து அறபியரின் கீர்த்திபெற்ற வித்துவையான கனஸா என்ற வயோதிக ஸ்திரீயும் தனது நான்கு புதல்வர்களையும் அழைத்துக்கொண்டு போர்க்களம் சென்ருர். (நம் தமிழுலகில் ஔவையாருக்கு இருக்கும் பிரபல்யம் இவ்வம்மையாருக்கு அறபி தேசத்திலுண்டு). யுத்தம் ஆரம்பிக்கும் போது இவ்வம்மையார் தமது அருமை மைந்தர்கள் நால்வரையும் போர்க்களத்திற் கனுப்பும்போது கூறிய வீர மொழிகள் வருமாறு:—

"மக்காள்! நீங்கள் உங்களது தேசத்திற்கு பாரமாக இருக்கவில்லை. உங்களுக்குப் பஞ்சப் பிணியு முண்டாகிவிடவில்லை. அவ்வாறிருந்தும் நீங்கள் உங்களது வயோதிக மாதாவாகிய என்னை இங்கு அழைத்துவந்து விட்டீர்கள். பாரசீக தேசத்தில் என்னை நிற்க வைத்து விட்டீர்கள். இறைவன்மீது பிரமாணமாகக் கூறுகிறேன்: நீங்கள் எவ்விதமாக ஒரே மாதாவின் புத்திரர்களாக இருக்கின்றீர்களோ அவ்விதமாகவே ஒரே பிதா

வின் புத்திரர்களாகவு மிருக்கிறீர்கள். நான் உங்களது தந்தைக்குத் துரோகம் செய்யவில்லை. உங்களது மாமனுக்கு இழிவை யுண்டாக்கவில்லை. யுத்தத்திற்குச் செல்லுங்கள். கடைசிவரை போர் புரியுங்கள்.''

இவ்வம்மையார் இவ்விதம் கூறிய பொன்மொழிகள் அவரது புதல்வர்களுக்கு அதிக உற்சாகத்தைத் தந்தன. போரில் புறங்காட்டக் கூடாது என்ற தனது மாதாவின் உபதேசத்தை மறக்காமல் அந்நான்கு சகோதரர்களும் அன்றைய தினம் மிக வீரதீரமாகப் போர் செய்தனர். ஆனால் அந்நால்வரும் உயிருடன் திரும்பவில்லை. தமது புதல்வர்கள் முதுகில் காயம்படாமல் வீரத்துடன் மரித்ததைப்பற்றி அவ்வம்மையார் சந்தோஷமடைந்தார்.

(7)

மூன்றாவது இராக் யுத்தத்தின் பிரதம சேனாதிபதியான ஹஜ்றத் ஸஅது (றலி.) அவர்கள் அவ்வப்போது நடைபெறும் நிகழ்ச்சிகளை கலீபாவான ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்களுக்கு அறிவித்து மேற்கொண்டு உத்தரவை எதிர்பார்ப்பது வழக்கம். அமீறுல் மூமினீன் ஹஜ்றத் உமர்பாறூக் (றலி) அவர்கள் ஒவ்வொரு அற்பகாரியத்தையும் விடாமல் எழுதி அனுப்புவதுடன் யுத்தத்தைப்பற்றிய சகல கட்டளைகளையும் தாமே பிறப்பித்து வந்தார்கள். அதுபோல் காதிஸிய்யாவில் யுத்தம் செய்வதற்கான திட்டம், படைகள் தங்குமிடம், முன்னணி, பின்னணி, நடுவணி, வலதுபக்கப்படை இடது பக்கப்படை ஆகியவைகள், யுத்தம் செய்ய வேண்டிய காலம் நேரம் முதல்கொண்டு எழுதி யனுப்பிவிட்டு, யுத்தத்தின் முடிவைப் பற்றி ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். காதிஸிய்யாவிலிருந்து மதீனாவுக்கு வரும் பாட்டையில் வந்து தினசரி காலையில் வெகு நேரம்வரை தூதுவர்களை எதிர் பார்த்துக் காத்திருப்பது வழக்கம்.

ஒருநாள் ஒரு ஒட்டகச் சவாரிக்காரர் வந்தார். ஹஜ்றத் உமர்பாறூக் (றலி,) அவர்கள் முன் சென்று "எங்கிருந்து வருகின்றீர்கள் ?'' என்று வினவினர். இவ்வொட்டகைச் சவாரிக்காரர் ஹஜ்றத் ஸஅது (றலி.) அவர்களது கடிதத்தைக் கொண்டுவருபவராகவும், வெற்றிச் செய்தியை அறிவிப்பவராகவும் இருந்தார். ஆதலின், காதிஸிய்யாவிலிருந்து வருகிறேன் என்று கூறினர். இதனைக் கேட்டவுடன் ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்கள் யுத்தத்தைப் பற்றிய செய்திகளைக் கேட்க ஆரம்பித்து விட்டார்கள். தூதுவர் யுத்தத்தில் முஸ்லிம்கள் வெற்றியடைந்தனர் என்ற நற்செய்தியை நவின்றார்.

ஆனால், தபால் கொண்டுவரும் தூதுவர் ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்களை முன்பு பார்த்திராதவராதலால் தம்மிடம் யுத்தத்தைப் பற்றிக் கேட்பவர்தான் முஸ்லிம்களின் தலைவரான ஹஜ்றத் அமீறுல்மூமினீன் ஹஜ்றத் உமர் பாறூக் (றலி.) என்று தெரிந்துகொள்ளவில்லை. ஆதலின், அத்தபால்காரர் தமது ஒட்டகத்தை நிறுத்தாமலும், அதனைவிட்டுக் கீழிறங்காமலும், சவாரியின்மீதிருந்துகொண்டே கேட்கும் கேள்விகளுக்குப் பதில் கூறிக்கொண்டே மதீனாவை நோக்கிவந்துகொண்டிருந்தார். ஹஜ்றத் அமீறுல் மூமினீன் உமர்பாறூக் (றலி.) அவர்கள் அவ்வொட்டகையின் பக்கத்தில் பின்றொடர்ந்து ஓடிவந்துகொண்டே சமாச்சாரங்களை விசாரித்துக் கொண்டிருந்தார்கள். இவ்விதமாக இருவரும் மதீனா நகருக்குள் பிரவேசித்தனர். அங்குள்ள ஜனங்கள் ஒட்டகத்திற்குப் பக்கத்தில் ஓடி வந்துகொண்டு தம்மிடம் விசாரிப்பவரை "அமீறுல் மூமினீன்'' என்ற பெயரால் அழைப்பதை வாகனத்தின்மீதிருக்கும் தூதுவர் கேட்டு ஓடிவந்துகொண்டே தம்முடன் சமாச்சாரம் கேட்பவர்தான் கலீபா என்பதாகவும், இவரிடம்தான் தாம் கடிதம் கொண்டுவருகிறேன் என்பதையும் உணர்ந்துகொண்டார். பயம் மேலிட்டது; கலீபா அவர்களை லக்ஷியம் செய்யாமல் கஷ்டப்படுத்தி விட்டதற்கு கலீபா அவர்கள் தம்மை தண்டித்து விடுவாரோ என்று நடுங்கினர். "தங்களது பெயரை ஏன் எனக்கறிவிக்கவில்லை; அவ்வாறு அறிவித்திருந்தால் நான் இம்மாதிரி வந்திருக்கமாட்டேனே'' என்று வருத்தத்துடன் கூறினர். அதற்கு ஹஜ்றத் உமர் பாறூக் (றலி.) அவர்கள் "குற்றமில்லை; நீங்கள் யுத்தச் செய்தியை நிறுத்தாமல் மேலும் சொல்லுங்கள்'' என்று கூறி அவரை ஒட்டகையை விட்டிறங்காமல் செய்து, அவ்வொட்டகையினது அண்டையில் நடந்து கொண்டே நடந்த விபரங்களைக் கேட்டுக் கொண்டு வீடுவரை வந்தார்கள்.

(8)

ஷாம் தேசத்தில் உரோமச் சக்கிரவர்த்திக்கும் ஹஜ்றத் உமர் பாறூக் (றலி.) அவர்களுக்

கும் நடைபெற்ற யுத்தத்தில் உரோமர்களின் சைனியங்கள் "பேஸான்" என்ற இடத்தில் ஒன்றுகூடி பெருஞ் சண்டை செய்வதற்கு முஸ்தீப்புச் செய்தன. முஸ்லிம்கள் "பஹ்லு" என்ற இடத்தில் பாளையமிறங்கி இருந்தனர். முஸ்லிம்களின் உறுதியையும் அஞ்சாமையையும் பார்த்து உரோமர்கள் சமாதானத்துக்கு ஆயுத்தமானார்கள். சமாதானப் பிரியர்களான முஸ்லிம்கள் தங்கள் பிரதிநிதியாக ஹஜ்ரத் மஆதுப்னுஜபல் (றலி.) அவர்களை அனுப்பி வைத்தார்கள். ஹஜ்ரத் மஆதுப்னுஜபல் (றலி.) அவர்கள் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்காக உரோமர்களின் தளகர்த்தரைக் கண்டுபேச அவர்களது சைனியங்கள் தங்கி இருக்குமிடத்திற்குச் சென்றார்கள். தளகர்த்தர் இருக்கும் கூடாரத்தின் தரையில் ஜரிகை வேலைப்பாடமைந்த விரிப்புகள் விரித்திருந்தன. ஆகவே, ஹஜ்ரத் மஆதுப்னு ஜபல் (றலி.) அவர்கள் அவ்விடத்திலேயே நின்றுகொண்டார்கள். அங்குள்ள ஒரு கிறிஸ்துவர் ஹஜ்ரத் அவர்களைப் பார்த்து "தாங்கள் தர்பாருக்குள் சென்று ஆசனத்தில் அமர்ந்துகொள்ளுங்கள்" என்று கூறினர். அதற்கு ஹஜ்ரத் மஆதுப்னு ஜபல் (றலி.) அவர்கள் "ஏழைகளின் பாத்தியதையை அபகரித்துத் தயார் செய்த விரிப்பில் உட்கார நான் விரும்பவில்லை" என்றுகூறி வெற்றரையில் உட்கார்ந்துகொண்டார்கள்.

அதுபோழ்து கிறிஸ்துவர்கள் "உங்களுடைய கௌரவத்தைப்பற்றி நீங்களே அக்கறை செலுத்தவில்லை" என்று கூறினர். ஹஜ்ரத் மஆதுப்னு ஜபல் (றலி.) அவர்களுக்கு இவ்வார்த்தைகள் கோபத்தை யுண்டாக்கின. அறபியர்களின் வழக்கத்திற்கேற்ப முழங்காலின் மீது நின்றுகொண்டு "நீங்கள் கௌரவம் மரியாதை என்று எதனைக் கருதுகின்றீர்களோ அதனைப்பற்றி எனக்கு அக்கரை இல்லை. வெற்றரையில் உட்காருவது அடிமைகளின் வழக்கம் என்றிருந்தால் என்னைப் பார்க்கினும் அல்லாஹு தஆலாவுக்கு அடிமையாக இருக்கக் கூடியவர் வேறெவருளர்?" என்று கூறினார்கள். அதற்கு ஒரு கிறிஸ்துவர் "முஸ்லிம்களில் உம்மைப் பார்க்கினும் மேலானவர் இருக்கிறாரா?" என்று வினவினர். அதற்கு ஹஜ்ரத் மஆதுப்னுஜபல் (றலி.) அவர்கள் "இறைவன் காப்பாற்ற வேண்டும். முஸ்லிம்கள் எல்லோரினும் நான் தாழ்ந்தவனாக இருப்பது ஒன்றே எனக்கு மிக அதிக மானது" என்று கூறினார்கள்.

(9)

ஹஜ்ரத் மஆதுப்னு ஜபல் (றலி.) அவர்கள் இவ்வண்ணம் கிறிஸ்துவர்களிடம் பட்டவர்த்தனமாகப் பேசியதன்பயனாக முஸ்லிம்களின் பிரதம தளகர்த்தரான ஹஜ்ரத் அபூ உபைதா (றலி) அவர்களிடம் நேருக்குநேர் சம்பாஷணை செய்யவேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். ஆகவே, அவர்கள் ஹஜ்ரத் அபூ உபைதா (றலி) அவர்களிடம் பேசுவதற்காக ஒரு தூதுவரை அனுப்பினார்கள்.

அத்தூதுவர் முஸ்லிம்களின் சேனாதிபதியைப் பார்க்க வந்தபோது ஹஜ்ரத் அபூ உபைதா (றலி) அவர்கள் வெற்றரையில் உட்கார்ந்துகொண்டு, அம்புகளைத் தமதுகையால் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இஸ்லாமியச் சேனைகளின் அதிபதி மிகவும் கம்பீரமாக இருப்பார். ஆதலின் அவருடைய கம்பீரத்தைக் கொண்டே அவரைத் தெரிந்துகொள்ளலாம் என்று அத்தூதுவர் நினைத்திருந்தார். ஆனால், முஸ்லிம் போர்வீரர்களின் மத்தியில் வந்தபோது எல்லோரும் ஒன்றுபோலவே இருப்பது தெரியவந்ததால், சேனாதிபதியார் என்பது அத்தூதுவருக்குத் தெரியவில்லை. ஆகவே, அத்தூதுவர் மருண்டு உங்களது தலைவர் எவர்? என்று விசாரித்தார். ஜனங்கள் ஹஜ்ரத் அபூ உபைதா (றலி) அவர்களை சமிக்ஞையால் காண்பித்தார்கள். அதனைப்பார்த்ததும் அத்தூதுவருக்கு ஆச்சரியமும் பிரமிப்பும் உண்டாகி "நீங்கள்தானா முஸ்லிம் போர்வீரர்களின் அதிபதி? என்று வினவினர். அதற்கு ஹஜ்ரத் அபூ உபைதா (றலி) அவர்கள் "ஆம்" என்று பதில் கூறினார்கள். (முஸ்லிம்களுக்குள்ள இச்சமத்துவத்தைப் பார்த்து அத்தூதுவர் இஸ்லாம் மதத்தை அங்கேயே தழுவிவிட்டார். ஆயினும், அவர் தமது கடமையை நிறைவேற்றிவிட வேண்டும் என்பதற்காக மறுபடியும் உரோமர்களிடம் சென்று தகவல் அறிவித்துவிட்டு அப்புறம் திரும்பவந்து சேர்ந்துகொண்டார்.)

(10)

உரோமர்கள் தோல்வியடைந்து திமிஷ்கு, (டமஸ்கஸ்) ஹிம்மஸ் முதலிய இடங்களைக் காலி செய்து கிழக்கு உரோம ராஜ்யத்திற்கு அக்காலத்தில் தலைநகராக இருந்த அன்தாக்கியாவுக்குச் சென்றனர். அதுபோழ்து அங்கிருந்த உரோமச் சக்கிரவர்த்தியான ஹிர்க்கல்

என்பவனிடம் சென்று அறபியர் ஷாம் தேசம் முழுவதையும் அழித்துவிட்டனர் என்று முறையிட்டனர். அதற்கு ஹிர்க்கல் சக்கிரவர்த்தி அவர்களிலுள்ள சில கௌரவஸ்தர்களேயும் அனுபவசாலிகளேயும் தர்பாருக்கு வரும்படிச் செய்து "அறபியர்கள் உங்களைப் பார்க்கினும் மிகவும் சொற்பமான ஜனங்கள், யுத்தக் கருவிகளும் அவர்களிடம் மிகச்சொற்பம், அவ்வாறிருந்தும் நீங்கள் அவர்களை எதிர்த்து நிற்கமுடியவில்லையே இதற்குக் காரணம் என்ன? என்று வினவினன். அதற்கு யாவரும் தலைகுனிந்து வெட்கத்துடன் இருந்தனர். ஆனால், அங்குள்ள வயோதிகர் ஒருவர் மாத்திரம் "அறபியர்களின் ஒழுக்கங்கள் நமது ஒழுக்கங்களைப் பார்க்கினும் சிறந்தனவாயிருக்கின்றன; அவர்கள் இராப்பொழுதில் இறைவனை வணங்குகின்றனர்; பகற்பொழுதில் உபவாசமிருக்கின்றனர்; எவருக்கும் அநீதி செய்வதில்லை; தங்களுக்குள் உடன்பிறந்த சகோதரர்களைப்போல் வாழ்கின்றனர். நமது நிலைமை அவ்வாறன்று. நாம் மதுபானம் அருந்துகின்றோம்; துர்செய்கை செய்கின்றோம்; வாக்குறுதியைக் காப்பாற்றுவதில்லை; மற்றவருக்கு அநீதி செய்கின்றோம். இதனால் தான் அறபியர்களின் ஒவ்வொரு காரியமும் உணர்ச்சியுள்ளதாகவும் ஊக்கமுள்ளதாகவும் இருக்கின்றது. அவர்களது உலகம் உறுதியுடன் செழித்திருக்கிறது. பயம் என்பது அவர்களது இருதயத்தை விட்டு எடுபட்டுவிட்டது" எனக் கூறினார்.

(11)

ஷாம் தேசத்து யுத்தத்தின் பிரதம சேனாதிபதியான ஹஜ்றத் அபூ உபைதா (றலி) அவர்கள் உரோமர்களிடமிருந்து அநேகம் பிரதேசங்களை ஜெயித்துக் கைப்பற்றிவிட்டார்கள். உரோமர்கள் இப்படித் தோல்வியடைந்து நாட்டைப் பறிகொடுப்பதைப் பார்த்த உரோமச் சக்கரவர்த்தியான ஹிர்க்கல் மனமுடைந்து புதியதோர் பட்டாளத்தை லக்ஷகணக்கில் திரட்டி அறபியர்களை அடியுடன் நாட்டைவிட்டுத் துரத்திவிட வேண்டுமென முயன்றனன். முஸ்லிம் சேனாதிபதியான ஹஜ்றத் அபூ உபைதா (றலி) அவர்களுக்கு இச்சமாச்சாரங்களெல்லாம் அவ்வப்போது ஒற்றர்கள் மூலம் தவறாமல் கிடைத்துக்கொண்டிருந்தன. ஆகவே, அவர்கள் தமது போர் வீரர்களிடம் இதற்கு ஏக்க பாதுகாப்புச் செய்வது எங்ஙனம் என்பதைப்பற்றி ஆலோசனைபுரிந்தார்கள். ஹிம்மஸில் இருந்துகொண்டு உதவிப்படை வருவதை எதிர்பார்க்க வேண்டும் என்று சபையினர் ஆலோசனை கூறினர். ஹஜ்றத் அபூ உபைதா (றலி.) அவர்கள் அவ்வாறு செய்வதற்குப் போதிய சாவகாசம் எங்கே இருக்கிறது? என்றுகூறி அவ்வாலோசனையை மறுத்துவிட்டார்கள். பிறகு, ஹிம்மஸைக் காலி செய்துவிட்டு திமிஷ்கு நகருக்குச் சென்று விடவேண்டும் என்றும், அவ்விடத்தில் முஸ்லிம்களின் ஜகப் பிரசித்திபெற்ற வீர சிங்கம் ஹஜ்றத் காலித் ஸைபுல்லா தமது படையுடன் இருப்பதால் அவருடைய உதவியும் நமக்குக் கிடைக்கும், அத்துடன் அறபி தேசத்து எல்லையும் பக்கத்தில் இருக்கிறது என்றும் அபிப்பிராயம் கூறப்பட்டது. இவ்வபிப்பிராயம்தான் கடைசியில் ஊர்ஜிதமாகி ஹிம்மஸ் முதலிய இடங்களைக் காலிசெய்துவிடவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

சேனாதிபதியான ஹஜ்றத் அபூ உபைதா (றலி.) அவர்கள் தாம் பிடித்த இடங்களைக் காலிசெய்வதற்கு முன் ஜிஸ்யா வரிவசூல் அதிகாரியான ஹுபைபுப்னு முஸல்லமா (றலி) என்பவரை அழைத்து "கிறிஸ்துவர்களிடமிருந்து நாம் வசூல் செய்த ஜிஸ்யாவரி அவர்களை நாம் பகைவர்களை விட்டுக் காப்பதற்காகவே வசூல் செய்யப்பட்டது. இந்தக் கஷ்டமான நேரத்தில் நாம் அவர்களைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆதலின், அவர்களிடமிருந்து வசூல்செய்த வரிப்பணம் முழுவதையும் வாபஸ் செய்துவிடுங்கள்" என்று கட்டளையிட்டார்கள். இக்கட்டளைக்கேற்ப பல லக்ஷம் திரவியங்கள் கிறிஸ்துவர்கள் யூதர்கள் ஆகியவர்களிடம் வாப்பஸ் செய்யப்பட்டன.

முஸ்லிம்கள் செய்த இந்த நேர்மையான காரியத்தைக்கண்டு யூதர்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் முஸ்லிம்கள்பால் அதிகப் பிரியமும் அபிமானமும் உண்டாகிவிட்டது. ஆகவே யூதரும்கிறிஸ்துவர்களும் முஸ்லிம்கள் வெளியேறுவதைப் பார்த்து அழுது பிரலாபித்ததுடன் "கடவுள் முஸ்லிம்களாகிய உங்களைத் திரும்பவும் இத்தேசத்திற்குக் கொண்டுவரவேண்டும்" என்று கூறிப் பிரார்த்தனை புரிந்தனர். யூதர்கள் இன்னும் அதிகமாக வருந்தியதுடன் தங்களது வேதமாகிய தௌராத்தை எடுத்துக்கொண்டு "நாங்கள் உயிருடன் இருக்கும்வரை உரோம சக்கிரவர்த்தி ஹிம்மஸை மறுபடியும் கைப்பற்ற

முடியாது" என்று பிரமாணம்செய்து ஹிம்மஸ் நகரின் கோட்டைச்சுவரை அடைத்துக் கொண்டு பலமான காவற்படையும் ஏற்படுத்திக் கொண்டனர். தவிரவும் திரும்பவும் பணத்தை வாப்பஸ் பெற்றுக்கொண்ட யூதர்கள் முஸ்லிம்களிடம் "உங்களுக்குப் பதிலாகக் கிறிஸ்துவர்கள் இருந்திருப்பார்களாயின் அவர்கள் எங்களது இதர பணங்காசுகளையும் பொருள்களையும் கொள்ளையடித்துக் கொள்வது மல்லாமல் எங்களையும் அவமானப்படுத்தி எங்கள் பெண்டு பிள்ளைகளையும் மானபங்கம் செய்திருப்பார்கள்" என்று கூறினார்கள்.

விக்கிரகஞ் செய்வோனின் தௌபா

கல்லின் கடுமையானதும், ஒழுங்கற்றதுமான பாகத்தை நான் எத்தனை நாளைக்குத்தான் உடைத்துக்கொண்டிருப்பேன்? என்று தனது கையில் ஏற்பட்டுள்ள காய்ப்புகளைத் தடவிக் கொண்டு விக்கிரகஞ் செய்வோனொருவன் கூறிக்கொண்டிருந்தான். "ஆமாம்! உங்களது மனம் இப்பொழுது மிகக் கடுமையானதாகி விட்டது; விக்கிரகஞ் செய்வது போன்ற புநிதமான காரியத்தையும் கூட நீங்கள் செய்ய வருந்துகிறீர்கள்; நமது ஜாதியார் உங்களுடைய இந்த வார்த்தைகளைக் கேட்டால் அப்புறம் நாம் இந்த ஊரில் குடித்தனம் செய்வது கூடக்கஷ்டமாகிவிடும்" என்று அவனுக்குப் பக்கத்தில் பிள்ளைத் தொட்டிலை ஆட்டிக்கொண்டிருந்த அவனது மனைவி முகத்தைச் சுளித்துக்கொண்டு கோபமாகக் கூறினாள். விக்கிரகஞ் செய்வோன் கொஞ்ச நேரம் வாய் பேசாதிருந்தான். ஆனால், அவனுடைய மனமுடைந்த உணர்ச்சியானது அவனை மெதுவாகத் தூண்டிற்று. எனவே, தனது மனைவியின் தோழ் புஜங்களைப்பிடித்து குலுக்கிக்கொண்டு!

"புஷ்பா! உனக்கு இன்னும் அந்தக் கர்நாடக பைத்தியம் விடவில்லை. பழைய ஆசாரம் என்ற பயங்கரமான பிசாசு உன்னை இன்னமும் நன்றாய்ப் பலமாகப் பிடித்துக்கொண்டிருக்கிறது. அந்தப் பிசாசு உனது இருதயத்தையும் நினைப்பையும் ஒரு வினாடி நேரத்திற்குக் கூட விடுதலையளிப்பதில்லை. நான் உனது பரிசுத்தமான சிலைகளைப்பற்றி இகழவில்லை. நீயே இந்தக் கதையை ஆரம்பித்து இருக்கும் போது நான் ஏன் மௌனமாக இருக்கவேண்டும்? கேளு நன்றாய் ஞாபகமாய்கேள்? இன்று நான் தெளிவாகக் கூறிவிடுகின்றேன். ரொம்பக் காலமான எனது உறுதி என்ற நரம்புகளை என்னுடைய இவ்வெண்ணம் கத்தரித்துக் கொண்டே இருக்கிறது. எனது கைகளால் நான் செய்யும் கல் துண்டுகளின் முன்னால் எனது தலையை வணக்கத்துடன் சாய்ப்பதற்கு அவைகள் தகுதியுடையனவா? என்பது என்னை வாட்டுகின்றது" என்று கூறினான்.

விக்கிரகஞ்செய்வோனின் மனைவியான புஷ்பா இவ்வாக்கியங்களைக் கேட்டவுடன் நெருப்புப்போல் தனல்பொறி தெரிப்பவளாகிவிட்டாள். பிள்ளையின் தொட்டிலை விசையாக ஆட்டியதால் அது மதிலின்மீது மோதியது. அவளுடைய முகம் பார்ப்பதற்குப் பயங்கரமானதாகிவிட்டது. கோபத்தின் மேலீட்டால் பலநாள் பட்டினியாக இருக்கும் குட்டிகளையுடைய பெண் சிங்கத்தைப்போலாகிவிட்டாள். பாவம்! ஏழை விக்கிரகஞ் செய்வோன் தனது மனைவியின் முகத்தைப் பார்த்ததும் பயந்து அடங்கிவிட்டான். அவளுடைய கர்ஜனையின் முழக்கம் அவனது மனத்தை நடுங்கச் செய்துவிட்டது. இம்மட்டுடன் அவ்வணங்கை நில்லாது மேலும் கூறியதாவது:—

"பார்வதி தேவியின் அறைகுறையாகச் செதுக்கப்பட்டிருந்த சிலையின்மீது நேற்று நீங்கள் உட்கார்ந்து சாப்பிட்டபோதே எனது மனத்தில் தட்டியது. இன்று அது மெய்யாகி விட்டது. நீங்கள் இம்மாதிரி பைத்தியம் பிடித்தவர்களைப்போல்உளருகிறீர்களே இதற்கு யாரும் உங்கள்மீது செய்வினை செய்துவிட்டார்களோ, அல்லது ஏவுதல் செய்துவிட்டார்களோ? விக்கிரகங்களைக் கேவலப்படுத்துவதா? ஈசுவரனைப் பயப்படுங்கள். அவனது கோபத்துக்கு அஞ்சுங்கள். சென்ற சித்திரை மாதத்தில் நடந்த சங்கதியை மறந்து விட்டீர்களா? அந்த இடைப்பையன் கிருஷ்ணமூர்த்தியின் சிலையின்மீது அசூயையான கையால் தீண்டிவிட்டு, கோவிலிலிருந்து இறங்கிவரும்

போது படியிலிருந்து விழுந்து இறந்து போனது ஞாபகமில்லையா? நீங்களும் சாவதற்கு விரும்புகிறீர்களா? எனக்கு எனது "சாந்தி"யின்மீது அதிகக் கவலையிருக்கிறது.

ஈசுவரன்மீது பிரமாணமாகக் கூறுகிறேன். என்னைக் கவனிக்காவிட்டாலும் உங்களது புதல்வனுக்காகவாவது இரக்கங் கொள்ளுங்கள். இனிமேல் இம்மாதிரியான கெட்ட வார்த்தையை நாவிலும் எடுக்காதீர்கள். நீங்கள் சொன்ன இந்த வார்த்தைகளால் வானமே இடிந்து தலையில் விழுவதுபோல் அவ்வளவு பயம் எனக்கிருக்கிறது."

மகன்; அதிலும் ஒரே புதல்வன்; அவன்பாலுள்ள அன்பானது தடுமாற்றமான இந்தக் கொள்கையை மிகைத்து விட்டது. பிறகு, தனது மனைவி புஷ்பா கூறிய சித்திரை மாதத்துச் சம்பவம் அவனுடைய நினைப்பை ஆட்டி விட்டது. ஆகவே, அவனது கண்களிலிருந்து வெதும்பிய கண்ணீர் சொட்ட ஆரம்பித்தது. நடுநடுங்கிக்கொண்டு,

"ஈசுவரா! நான் மன்னிப்புக் கேட்கிறேன். என்னை ரக்ஷித்தருள்வாயாக. மூர்த்திகளே! என்னை மன்னீர்ப்பீர்களாக. நான் தவறுதலாக தெரியாமல் சொல்லிவிட்டேன். நான் சொன்னவைகள் இன்னவை என்று எனக்கே புலப்படவில்லை. விக்கிரகங்களை பூஜிப்பதுதான் எனது உறுதியான விசுவாசம். எனது மதமும் அதுவேயாகும், எனது உயிருமாகும். மூர்த்திகளுக்கு முன் தலைவணங்குவதிலேயே எனது ஆத்மா சாந்தியடைகிறது. ஈசுவரா! நற்குணம் வாய்ந்த எனது மனைவிக்கு அருள்புரிவாயாக. அவள் தான் வழுவிப்போன எனது கையைப் பிடித்து என்னைத் தூக்கிவிட்டனள்"

என்று கூறிப் புலம்பினன். இந்த விஷயம் இம்மட்டுடன் முடிந்து விட்டது. விக்கிரகம் செய்வோன் வழக்கம்போல் தினந்தோறும் விக்கிரகங்களைச் செய்து ஜீவனம் செய்துகொண்டிருந்தான்.

அவனுடைய மனைவி ரொம்பக்கெட்டிக்காரி. தனது கொழுநனை விக்கிரக ஆராதனையில் பலமாகப் பிணைத்துவிட வேண்டும் என்பதற்காக அவள் தினந்தோறும் விக்கிரகங்களைப்பற்றிய ஏதேனும் ஒரு புதிய நூதனமான கதையைக் கூறுவது வழக்கம்.

"ஒரு அரசனுக்கு வெகு நாளாகப் பிள்ளையில்லா திருந்ததால் தனக்குப் பிள்ளைப் பாக்கியம் கிடைத்தால் தன்னைக் காளிதேவிக்குப் பலி கொடுத்து விடுவதாக அவ்வரசன் வேண்டுதல் செய்துகொண்டான். இவ்வேண்டுதல் செய்த ஒரு வருஷம் கழிந்தவுடன் அவ்வரசனுக்கு ஆண் குழந்தை பிறந்தது. ஆகவே, ராஜன் தனது வேண்டுதலின்படி காளிதேவிக்கு முன் தனது தலையை பட்டாகத்தியால் வெட்டிக் கொள்ள விரும்பினன். அவன் வெட்டிக் கொள்ள எத்தனித்தபோது காளிதேவி தனது கையை நீட்டி அவனைத் தடுத்து, "உனது வேண்டுதலை ஒப்புக்கொண்டேன். உன்னை நீ பலியிட்டுக்கொள்ள வேண்டாம். போ, மங்களமாக இரு" என்று கூறினள்.

என்பதாக எனது தந்தை எனக்குக்கூற நான் கேள்விப்பட்டிருக்கிறேன் என்று ஒருமுறை ஒரு கதையைக் கூறுவாள். மற்றொருசமயம்,

"எனது மாதாவின் தோழிப்பெண் இருந்த ஊரில் ஒரு உற்சவம் நடைபெற்றது. அதில் கணேசருடைய விக்கிரகத்தை தேர்மேல் வைத்துப் பட்டணப் பிரவேசம் செய்தனர். தேரின் சக்கரத்தில் ஒரு குழந்தை அகப்பட்டுக்கொண்டு நசுங்கி அந்த இடத்திலேயே ஆவி துறந்தது. பிள்ளையின் தாய் தனது குழந்தை மரித்ததற்காகக் கதறி அழுது புலம்பித் துடித்தாள். அப்பொழுது கணேச மூர்த்தியின் வாயிலிருந்து ஒருவிதச் சப்தம் கிளம்பிற்று. உடனே அக்குழந்தை யாவரும் பார்த்திருக்க உயிர்பெற்றெழும்பிற்று."

என்று மற்றொரு கதை கூறுவாள். எனவே, இவ்வாறான கதைகளால் தனது புருஷனை விக்கிரகஞ் செய்வோனை மெழுகுபோல் இழக்கி விட்டாள். இக்கதைகளைக் கேட்டுக் கேட்டு அவனது மனமும் மாற்றமடைந்தது. தனது கரங்களால் செய்யப்படும் இவ்விக்கிரகங்களுக்கும் தெய்வீக சக்தி இருக்கிறது; இவைகள் கஷ்டங்களை நீக்கச் சக்தியுள்ளவை என்ற எண்ணம் அவனுக்கு உறுதியாகி விட்டது. விக்கிரகஞ் செய்வோனின் மனைவியான புஷ்பா தனது கணவனிடம் கோயில் பூசாரியின் ஆத்ம சக்தியையும் தெய்வீகத் தன்மையையும் பற்றியும் அடிக்கடி கூறுவதுண்டு. அவருடைய பாதத்தைத் தொடுவதால் அபிவிருத்தியும் பாக்கியமும் கிடைக்கும் என்றும் அவள் கூறுவாள். எனவே, விக்கிரகஞ் செய்வோன் அந்த மூர்த்திகளைப் பூஜிக்க மந்தரத்திற்குச் செல்லும்போதெல்லாம் அதன் பூசாரியின் கால்களில் விழுந்து அவனது கைகளையும் தொட்டு முத்திக்கொள்வான்.

எந்தக்கல் ஒழுங்காக உடைக்க வரவில்லையோ அந்தக்கல் கல்லுடைப்போருக்கு உயிர்வதையாக ஏற்பட்டு விடுவதுண்டு. இன்றையத் தினம் விக்கிரகம் செய்யும் இவனுக்கும் இவ்வித நிலைமையே ஏற்பட்டது. அவன் செய்த ஒரு விக்கிரகத்தின்கல் அவனது இஷ்டம் போல் ஒழுங்காக உடைபடவில்லை. ஆகவே, அவன் பகலெல்லாம் சாமியை வேண்டிக் கொண்டு கஷ்டப்பட்டான். எனினும், கல் ஒழுங்காய் உடைவதற்கு வழியில்லை. அதனை ஒழுங்குபடுத்திப் படுத்திக் கற்றூள்கள் தான் கனமாய்க் குவிந்தன. ஆனாலும், கல்லினுள்ள சீர்கேடு மாத்திரம் தூரமானபாடில்லை. அந்திப் பொழுதுமாச்சு, ஆதவனும் அஸ்தமித்தனன். இருட்டும் வந்தது, கல் ஒழுங்குபடவில்லை. மனச்சோர்வடைந்து மந்தரம் சென்று மூர்த்தியை வணங்கலாம் என்று வெளியேறினான்.

கோவிலுக்குட்சென்று ஒரு மூர்த்தியின் முன் தலைவணங்கினான். பார்வதி தேவியின் சிலையில் எரிந்துகொண்டிருந்த விளக்கின் எண்ணெய்யை எடுத்து நெற்றியில் தடவிக்கொண்டான். இவன் இப்படிச் செய்துகொண்டிருந்த போது கன்னியழியாத வாலிபப்பெண்ணொருவள் விக்கிரகங்கள் வைக்கப்பட்டுள்ள அவ்வறையினுள் பிரவேசித்தாள். வாலிபப் பருவத்தில் எவ்வளவு அவலக்ஷணமான உருவமும் அழகாய் தோன்றுவதியற்கை. அதிலும் அவ்வாலிபஸ்திரீ கன்னிப்பெண். அவளுக்கு இயற்கையானது மிகமிக விலைமதிப்புள்ள ரூபலாவண்யத்தையும் அளித்திருந்தது. ஆகவே, அவள் பார்ப்பவர்களைப் பரவசப் படுத்தத் தகுந்தவளாயிருந்தனள்.

அக்கன்னிப்பெண் அங்குள்ள விக்கிரகங்கள் ஒவ்வொன்றையும் பூஜிக்கத் தொடங்கினள். விக்கிரகஞ் செய்வோனும் தனது அலுவலில் ஈடுபட்டிருந்தனன். ஆனால், அவனது உணர்ச்சி ஒரு காட்சியை விரும்பிக்கொண்டிருந்தது. ஆனால், பூசாரியும் உள்ளேவந்ததால் அவன் வெளியில் வரவேண்டிய நிர்பந்தத்திற்கு வந்தான். மந்தரத்தை விட்டு வெளியேறும் அப்பெண்ணை ஒரு பார்வை பார்த்தான். அவளது அழகிய தோற்றம் அவன் இருதயக் கண்ணாடியில் அழியாது பதிந்துவிட்டது. விக்கிரகஞ் செய்பவன் கோவிலைவிட்டுக் கொஞ்சதூரம் தான் வந்திருப்பான். அதற்குள் கோவிலுக்குள்ளிருந்து கூக்குரல் சப்தம் வந்தது. விக்கிரகம் செய்வோன் கோவிலுக்குத் திரும்பச் சென்று பார்க்கும்போது கோவில் தலைவாயல் சாத்தப்பட்டிருந்தது. அக்கன்னிப் பெண் சப்தமிட்டுக்கொண்டே இருந்தனள். விக்கிரகம் செய்வோன் கதவின் இடைச்சந்தின் வழியாக உள்ளே பார்த்தபோது, அநேகம் அற்புதங்களைச் செய்தவனென்று கேள்விப்பட்டிருந்த அதே பூசாரி அப்பெண்ணின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டிருப்பது தெரிந்தது. விக்கிரகம் செய்பவன் கதவை பலமாக இடித்துத்தட்டி :—

“ துஷ்ட பூஜாரியே! பெண்ணைவிட்டுவிடு. இல்லையேல் உனக்குக் கேடுகாலம் சமீபித்து விட்டது ” என்று கூறினான். இந்தச் சப்தமானது பூசாரியின் ஈரல் குலையைப் பிடுங்கிப் போட்டது போலிருந்தது. சித்தமிழந்தான். அப்பெண்ணின் கையை விட்டுவிட்டான். அவள் உடனே கதவைத்திறந்து வெளியில் வந்ததும் விக்கிரகம் செய்வோனின் காலில் விழுந்து,

“ தயா! தயா! என்னைப் பூசாரியை விட்டுக் காப்பாற்றினீர் ” என்று கூறினாள். விக்கிரகம் செய்வோன் அவளது தலையைப் பிடித்துயர்த்தி அவளைத் தூக்கியதுடன் அவளுக்கு ஆறுதல் தேருதல் கூறி இனி பூசாரி உன்னை ஒன்றும் செய்யமாட்டான். பயப்படவேண்டாம் என்று கூறி தைரியமூட்டினான். பிறகு, பூசாரியிடம் சென்று “ மிலேச்சா! கற்பைக் கொள்ளை கொள்வோனே! கேவலமான நாயே!! கன்னிப்பெண்ணின் கையைப் பிடிப்பதில் உனக்கு பயம்வரவில்லையா? இதுபாபமல்லவா? அதுவும் மூர்த்திகளின் முன்னிலையிலா? ஈசுவரர் உன்னைக்கெடுக்கமாட்டாரா? ” என்று ஏசினன். அதுபோழ்து பூசாரி மிகவும் பீதியடைந்திருந்ததால் சமயோசிதமாக நடந்துகொள்ள வேண்டுமென்று நினைத்துச் சிறிய தலைவாசலின் வழியாக மெதுவாய் நடந்துவிட்டான். பிறகு, அவ்விக்ரகம் செய்வோன் அக்கன்னிகையை அவளது இல்லம் சேர்ப்பித்தான். மறுநாட்காலையில் விக்கிரகம் செய்வோனும் அந்தப்பெண்ணும் ஊரிலுள்ள பெரியதனக்காரர்களிடம் இம்சம்பவத்தைக் கூறினர். பஞ்சாயத்துக் கூட்டப்பட்டது. சவுக்கையில் பூசாரி வரவழைக்கப்பட்டான். அதுபோழ்து பூசாரி மிகத்தைரியமாக,

“ இந்தப்பெண்ணும் விக்ரகஞ் செய்வோனும் வெகு சமர்த்தர்கள். வஞ்சகர்கள். என்மீது பழியைச் சுமத்துகின்றனர். இந்தப் பெண்

கிருஷ்ணமூர்த்தியின் சிலையிலிருந்த தங்காரத்தை எடுத்தனள். விக்கிரகம்செய்யும் இவன் வெளியில் நின்றுகொண்டிருந்தான். நான் அந்தப்பெண்ணை கையும்களவுமாகப் பிடித்துக் கொண்டேன். இப்பொழுது இவ்விருவரும் தங்களுடைய குற்றத்தை என் தலைமீது சுமத்துகின்றனர்''

என்றுகூறினன். பூசாரியின் இந்த வாக்குமூலத்தை அந்தப்பெண்ணும் விக்கிரகஞ்செய்வோனும் பலமாகமறுத்தனர். ஆயினும், கிராமவாசிகளின் கண்ணில் கௌரவமாகவும் கண்ணியமாகவும் காணப்படுகிற பூசாரியின்மீது அவர்களுக்கு எவ்விதமான கெட்ட எண்ணமும் உண்டாகவில்லை. எல்லோரும் பூசாரி சொல்வதையே நம்பினர். இவ்விருவரும் கூறியதை அவர்கள் பொய்யென்று மறுத்தனர். இறுதியாக அவனது மனைவியான புஷ்பாவும் கூட அவர்களிருவரும் கூறியதை நம்பவில்லை.

ஆகவே, விக்கிரகஞ் செய்வோனும் அக்கன்னிகையும் வெட்கமடைந்து திரும்பினர். பூசாரி தனது தந்திரத்தால் எல்லோருடைய கண்ணிலும் மண்ணைத் தூவி உண்மையை மறைத்து விட்டான். எனினும், அவனது அகம் அவனைக் குற்றவாளி என்றே கூறிவந்தது. சில தினங்களுக்குப் பின் அந்தப் பூசாரி பக்கத்திலிருந்த கிராமத்துக் கோவிலுக்குச் சென்று அங்கிருந்த பூசாரியைத் தன் ஸ்தானத்தில் வைத்து விட்டனன். இச்சம்பவத்தால் விக்கிரகம் செய்வோனின் விக்கிரக விசுவாசத்தில் பெருத்த மாறுதலேற்பட்டது. ஆகவே, அவன் பூசாரிகளின் மீது அவநம்பிக்கையுள்ளவனுகி விட்டான்.

அற்புதச் செய்கை

புதிய பூசாரி வந்தவுடன் கோவிலுக்குள்ளிருந்த மூர்த்திகளின் அற்புதங்களை வெளிப்படுத்துவதற்குப் பெரும் தந்திரம் செய்தனன். அவன் இராக்காலங்களில் ஜனங்களுக்குத் தெரியாமல் மறைவாக வந்து சந்தடியில்லாமல் கோவிலைத் திறந்து விக்கிரகங்களின் நெற்றிகளில் "ஓம்" என்று எழுதிவைத்துக்கொண்டிருந்தான். விக்கிரகங்களின்பால் நம்பிக்கையுள்ள ஜனங்கள் முதலிலிருந்தே அவ்விக்கிரகங்களினுல் சக்தி விளங்குவதாகவும் அற்புதங்கள் நிகழுவதாகவும் எண்ணிக்கொண்டிருந்தனர். இப்படிப்பட்ட ஜனங்களுக்கு இந்தப் புதிய அற்புதம் அதிகமான நம்பிக்கையையும் பக்தியையும் உண்டாக்கிற்று. இதனுல் கோவிலிலுள்ள விக்கிரகங்களுக்கு பொன் வெள்ளி, தங்க ஆபரணங்கள் வந்து குவிந்துகொண்டிருந்தன. அந்த அற்புதச் செய்கை ஊரெங்கும் மின்னலைப்போல் ஒரு நொடிக்குள் பரவிக்கொண்டிருந்தது. இந்தச் சமாச்சாரம் உள்ளூரிலிருந்து வெளியேறி அக்கம் பக்கத்திலுள்ள கிராமங்களையும் நடுங்கச் செய்தது. இதனுல் இதர கோவில்களுக்குள்ள மகிமையும் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வந்தது. இச்சம்பவம் விக்கிரகம் செய்வோனையும் கூட மனமாற்றம் செய்ய ஆரம்பித்து விட்டது. அவனது மனைவியைப்பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. அவள் தனது அருமைப் புதல்வனின் சென்னியை அக்கோவிலின் வாசற்படியில் பல மணி நேரங்கள் வரை வைத்திருந்து அவனது தீர்க்காயுளுக்காகக் கையேந்திய வண்ணம் நிற்பாள்.

கோவிலின் தலைவாசற்கல் சீர்கேடடைந்து பழுது ஏற்பட்டிருந்ததால் கிராமவாசிகள் பண வசூல் செய்து அதனை மராமத்துச் செய்ய முடிவு செய்திருந்தனர். இந்த வேலையைச் செய்து முடிக்க அவ்விக்கிரகம் செய்வோனையே நியமித்தனர். இவனும் மிகுந்த பயபக்தியுடன் இவ்வேலையைச் செய்ய ஆரம்பித்தனன். இவ்வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஒருநாள் அவனுடைய மனைவி தனது தாய் வீட்டிற்குச் சென்றிருந்தனள். இவன் இராக்காலங்களில் தனிமையில் நித்திரை செய்ய வேண்டியதிருந்தது. இவ்வண்ணம் கோவிலில் வேலைசெய்து கொண்டிருந்தபோது ஒருநாள் அவனுக்குச் சிறிது உஷ்ணமேற்பட்டது. ஆதலின், அவன் வீட்டுக்குச் செல்லாமல் அன்றைய இரவில் தலை வாசலுக்குப் பக்கத்திலிருந்த அறையில் படுத்துக்கொண்டான். கொஞ்சநேரம் வரை பலவிதமான காரியங்களையும் பற்றி ஆலோசனை செய்துகொண்டிருந்து அப்பால் கண்டுஞ்சினன்.

பாதி இரவு கழிந்தது. நல்ல ஜாமம். கோவிலின் கதவு திறக்கும் சப்தம் கேட்டது, அதனுல் அவனது நித்திரை கலைந்து விழித்துக் கொண்டனன். உடனே அவசரமாக எழுந்து உட்கார்ந்துகொண்டான். எவரும் திருடர் வந்திருக்கலாம். மூர்த்திகளின் கழுத்திலுள்ள சொர்ணுபரணங்களை சோரஞ் செய்யக்கூடும் என்ற சந்தேகம் உண்டாயிற்று. ஆகவே, அவன் சந்தடியில்லாமல் தனது படுக்கையி

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
208346

விருந்து கோவில் தலைவாசலண்டை வந்தான். கோவிற் கதவு திறந்திருந்ததுகண்டு அவனுக்கு இன்னும் சந்தேகம் அதிகமாயிற்று. ஆதலின், அவன் நடக்கும் காரியங்களைக் கவனிப்பதற்காகத் தலைவாயல் நிலையுடன் சேர்ந்து நின்றுகொண்டான்.

உள்ளே ஒரு மனிதன் விளக்குக் கொளுத்தினன். வெளிச்சம் உண்டானபின் குச்சியினல் விக்கிரகங்களின் நெற்றியில் "ஓம்" என்றெழுதுவதைப் பார்த்தான். பிறகு, எழுதுபவன் தனது வேலையை முடித்துக்கொண்டு விளக்கை மெதுவாக அணைத்து, கோவிலுக்குள்ளிருந்து வெளியில் வந்து கதவை இழுத்து அடைத்துப் பூட்ட ஆரம்பித்தான். விக்கிரகம் செய்வோனுக்குத் தைரியம் பிறந்தது. மனத்தைத் தேற்றிக்கொண்டு,

நீர் யார்? என்று அதட்டிக் கேட்டான்.

அந்த மனிதன் :—(நடுங்கிக்கொண்டு) நான் இந்தக் கோவிலின் பூசாரி.

விக்கிரகம் செய்வோன் :—நீர் ஏன் இன்னேரத்தில் இங்கு வந்தீர்?

பூசாரி :—மாலை நேரம் எனது மாலை இங்கு தவறிவிட்டது. அதனை எடுப்பதற்காக வந்தேன்.

விக்கிரகம் செய்வோன் :—பூசாரியாரே! இவ்வளவு பச்சைப் பொய், படு மோசம். ஒரு உலகத்தையே முட்டாளாக்கி வைத்திருக்கிறீர். உம்மைப்போல் இன்னுமிரண்டு பூசாரிகள் உண்டாகிவிடுவார்களாயின் பிறகு உலகில் அரசர்களின் ஆட்சிக்குப்பதிலாக மூர்த்திகளின் அரசாங்கமே ஏற்பட்டுவிடும்.

பூசாரி கோழைத்தனமுள்ள திருடனைப் போல் அங்கிருந்து மெதுவாக நழுவினன். இந்தப் புதிய சம்பவத்தால் விக்கிரகம் செய்வோனின் மதநம்பிக்கை தலைகீழாகப்புரண்டது. கோபம்பொங்கி எழுந்தது. இங்கும் அங்கும் உலாவினன். பற்பலவிதமான எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்ருக அவனெதிரில்வந்து நின்றன. இறுதியாக அவனது பொறுமை நிற்க முடியவில்லை. தண்டத்தைஎடுத்து விக்கிரகங்களுள்ள அறைக்குச்சென்று ஒவ்வொன்ருக உடைத்தான். இதற்குப் பிறகுதான் அவனது உணர்ச்சிகள் அடங்கின.

விடிந்தவுடன் கிராமஜனங்கள் விக்கிரகங்கள் உடைந்திருப்பதைப் பார்த்தால் ஒரு பெரும் புரளியல்லவா உண்டாகிவிடும் என்ற எண்ணம் பிறகுதானுண்டாயிற்று. ஆகவே, அதனைவிட்டுத் தப்பித்துக்கொள்வதற் கென்னசெய்வோம் என்று யோசித்தான். இறுதியாக இந்த கிராமத்தைவிட்டுச்செல்வதே சரியென்று முடிவுசெய்து ஊரைவிட்டோடிப்போகப் புறப்பட்டான். போகும்போது ஒருகடிதத்தில் பின்வருமாறு எழுதி தலைவாசல் கதவின் சங்கிலியில் தொங்கவிட்டான் :—

"விக்கிரகங்களைச் செய்தவனே இன்று அவைகளைக் கடைசியாக உடைத்தனன். அசைவற்ற கற்துண்டுகள் ஒருவருக்கு லாபநஷ்டம் செய்வதெங்ஙனம்? மனிதனுடைய தலை அவனுற்செய்யப்பட்ட கற்சிலைக்குமுன் வணங்குவது நியாயமா? சூரியனின் கிரணங்கள் அணுக்களுக்கு சாஷ்டாங்கஞ் செய்யுமா? கொந்தளிக்குஞ் சமுத்திரம் அதனுடைய நுரைகளுக்குக் கட்டுப்படுமா? செழிப்பான புஷ்பங்கள் செடியிலுள்ள முட்களிடம் செல்லுமா? அந்தோ! மூடநம்பிக்கை மனிதனைக் குருடனுக்கியதன்ருே? மனிதர்களே! கடவுளை வணங்குங்கள். அவனே வணங்கப்படத்தகுந்தவன். கண்ணுல் பார்த்தவனின் மனத்திலிருந்து தோன்றிய தொனி ஒருவருடைய இருதயத்தையேனும் மாறும்படிசெய்யாதா?

—"பாரான்."

இஷாஅத்துல் இஸ்லாமும் ஹிபாஜத்துல் இஸ்லாமும்.

இச்சென்னையம்பதியின்கண் மார்க்க பக்தர்களால் ஸ்தாபிக்கப்பட்டு, சென்ற ஏழாண்டுகளாய் நடைபெற்றுவரும் உங்கள் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம், இஸ்லாம் மதத்திற்குப் பிறரால் ஏற்படும் இருக்கண்களை அகற்றவும், முஸ்லிம் சமூகத்திற்குள்ளேற்பட்டுவரும் நூதன அனுஷ்டானங்களாகிய பிதுஅத்துகளையும், மார்க்கமுரணுன கிரியை

களையும் அகற்றவும், தங்களை முஸ்லிம்களென்று சொல்லிக்கொண்டும், தங்களுக்கு இஸ்லாமியப் பெயர் சூட்டிக்கொண்டும், இஸ்லாத்திற் குழைப்பதாக வாய்ப்பறை சாற்றிக்கொண்டும் முஸ்லிம்களை ஏமாற்றி வழிகெட்ட கொள்கைகளில் செல்லும்படித் தூண்டுகிற காதியானி அஹ்மதியர்களின் நயவஞ்சகப் பிரசாரத்தை எதிர்த்து, அவர்களது நயவஞ்சகப் பிரசாரம் வெற்றியடையாமற் செய்யவும், இஸ்லாம் மதத்தின் நன்மைக்காகவும் அதன் அபிவிருத்திக்காக உழைக்கவும் வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்ட.தற்கேற்ப, கடந்த ஏழாண்டுகளாக உங்கள் சங்கம் உழைத்துவருவது உங்களெல்லாருக்கும் நன்கு தெரிந்த விஷயமாகும்.

இச்சங்கம் தனது கொள்கைகளிலிருந்து சிறிதும், பிரழாமல் இறைவனது கிருபையால் உங்களெல்லோருடைய ஒத்துழைப்பைக் கொண்டு ஆற்றி இருக்கும் அருந்தொண்டுகளை இங்கு ஒவ்வொன்றாக எடுத்துக் கூறிடின் இவ்வேடு விரிந்துவிடும் என்றஞ்சுகின்றோம். எனினும், நமதுணர்வுக்காக இவ்விடத்தில் இரண்டொரு விஷயங்களைச் சுட்டிக் காண்பிக்க விரும்புகின்றனம். இச்சங்கம் ஏற்பட்ட சிறிது காலத்திற்குள் கம்பம் பள்ளத்தாக்கில் உத்தமபாளையம் வட்டகையில் இஷாஅத்தே இஸ்லாம் பணியில் ஈடுபட்டு அங்குள்ள முஸ்லிம்களுக்கும் நவ் முஸ்லிம்களுக்கும் தன்னாலான சகல உதவிகளைச் செய்ததுடன் சென்னை முதலிய பல இடங்களிலும் பணவசூல் செய்து உதவி இருக்கிறது. இச்சங்கத்தின் உத்தியோகஸ்தர்களிலும், பிரசாரகர்களிலும் பெரும்பாலர் அங்கு சென்று, சட்டப்படியுள்ள ஒரு சங்கத்தை அங்கு நிறுவவேண்டுமென்று முயற்சி செய்து கம்பம் பள்ளத்தாக்கிலுள்ள பிரபலஸ்தர்களைக் கொண்ட ஒரு சங்கத்தை நிறுவி அதற்கு "இஷாஅத்தே இஸ்லாம்" என்ற பெயரும் சூட்டியதுடன், இச்சங்கத்தின் அரிய மாசிகையாகிய உங்கள் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" இஸ்லாமியப் பிரசாரம் சம்பந்தமாகவும், இஸ்லாமியப்பிரசாரம் செய்வதில் ஈடுபட்டுள்ள "இஷாஅத்துல் இஸ்லாமு"க்கு உதவி புரிவது சம்பந்தமாகவும் பல கட்டுரைகளை வெளிப்படுத்தியதுடன் தமிழ்நாட்டில் அச்சங்கத்திற்கு ஆதரவு ஏற்படுவதற்காக அரும் பெரும் தொண்டுகளாற்றியது. இதன்பலனாக அச்சங்கத்திற்கு நமதுநாட்டில் மட்டுமென்ன சிலோன், பர்மா, சிங்கை முதலிய நாடுகளிலும் தக்க செல்வாக்கும் நன்மதிப்பும் ஏற்பட்டதுடன், அச்சங்கத்தாருக்கு தனசகாயமும் ஏற்பட்டது. சுருங்கக் கூறுமிடத்து, கம்பத்திலுள்ள இஷாஅத்துல் இஸ்லாம் சங்கத்திற்கு உங்களது ஹிபாஜத்துல் இஸ்லாம் மூதுகெலும்பு போல் நின்றுழைத்தது என்பது மிகைப்படக் கூறியதாகாது.

இதுமட்டுமா? நமது ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரால் ஸ்தாபிக்கப்பட்ட "ஹிஸ்புல்லாஹ்" என்னும் சத்தியப் பிரசாரக் கூட்டம் தஞ்சை, மதுரை, திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்து காதியானி அஹ்மதி முதலிய குதர்க்க வாதிகளின் வழிகெட்ட கொள்கைகளை அகற்றியதுடன் ஆங்காங்கு ஏற்பட்டிருந்த சில்லரை மனஸ்தாபங்களையும், பித்அத்து முதலிய அனுச்சாரங்களையும் அகற்றியதுமல்லால் இஸ்லாத்தின் கொள்கைகளைப் பொதுஜனங்களுக்கு எடுத்துக் கூறின. இதன்பலனாக பிறமதத்தாரிலுள்ள சகோதரர்கள் இஸ்லாம் மதத்தையுந்தழுவினர். இவ்விஷயங்களை எமது சங்கத்திலிருந்து வெளியிடப்பட்ட "சத்திய பிரசாரம்" என்ற புத்தகத்திலிருந்து தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம்.

எனவே, எமது ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தார் இதுவரை இஷாஅத்துல் இஸ்லாம் விஷயமாக உழைத்து வந்ததுபோல் இனியும் உழைத்து வருவார்கள். ஆயினும், தற்போது இவ்விந்திய நாட்டில் கிளம்பியுள்ள ஹரிஜனங்கள் மதம்மாறும் பிரசினையிலும் தலையிட்டு கோடிக்கணக்கான மக்கள் தாழ்ந்தப்பட்டு, தள்ளப்பட்டு வீழ்த்தப்பட்டுக் கிடப்பவர்களை உயர்த்தி, அவர்களுக்கு இஸ்லாம் மதம் அளித்துள்ள மாசிட சுதந்திரத்தை அளிக்கும் விஷயத்தில் உழைக்க நுங்களது சங்கம் முன் வருகின்றது. டாக்டர் அம்பெத்கார் போன்ற ஹரிஜனத் தலைவர்கள் தங்கள் வகுப்பாருக்குக் கூறிவரும் மதம் மாற்ற விஷயத்தை அனுசரித்து நமது தமிழ்நாட்டிலுள்ள ஹரிஜனங்கள் பிறமதம் தழுவ முன் வந்திருப்பதால் இது போழ்து நமது கடமையை நமது சார்பாக நுங்களது சங்கம் செய்து முடிக்கவும், அவர்களுக்கு இஸ்லாத்தின் சிறப்புகளையும், இஸ்லாம் அளித்திருக்கிற சுதந்திரத்தையும் எடுத்துக்கூறி அவர்களிடம் இஷாஅத்தே இஸ்லாம் செய்யவும் விரும்புகிறது.

ஆனால், நுங்களது சங்கம் இத்துறையில் வெற்றிபெற்று, நுங்கள் சார்பாகத் தனது கடமையை நிறைவேற்றுவது நுங்களது ஒத்துழைப்பையும் ஆதரவையும் பொறுத்திருக்கிறது. கூடிய சீக்கிரம் நுங்கள் சங்கத்திலிருந்து ஒரு தூதுவக் கூட்டம் தமிழ் ஜில்லாக்களிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களிடை சென்று அவர்களிடம் கலந்தாலோசனை செய்யவும், நமது ஜில்லாக்களில் இஷாஅத்தே இஸ்லாம் எவ்வளவுதூரம் வெற்றியடையும், அதற்கு எவ்வளவு பணச் செலவேற்படும், அதற்குச் செய்யவேண்டிய இதர காரியங்களென்னவென்பதைப் பற்றி ரிப்போர்ட்டு அனுப்பவும் புறப்படும். ஆங்காங்குள்ள முஸ்லிம்கள் அத்தூதுவக் கூட்டத்தாருக்கு ஆதரவு புரிந்து அவர்களுக்குப் பக்கபலமாக இருக்கவேண்டும் என்று மிகமிக வேண்டிக் கொள்கிறோம்.

நமது இஷாஅத்தின் இந்நோக்கத்திற்காகவும் ஆதிதிராவிடர்களின் முன்னேற்றத்திற்காகவும் அவர்களுக்கு வேண்டிய நோட்டீஸ் துண்டு பிரசுரம் முதலியவற்றை வெளியிடுவதற்காகவும் மலாய் நாட்டிலுள்ள சில நண்பர்களிடம் கிள்ளான் மெஸ்ஸர்ஸ் ஆர். இ. எம். கம்பெனியார் ஈதுல் அல்ஹா பெருநாளன்று ஓர் சிறிய தொகை வசூலித்தனுப்பியிருக்கிறார்கள். அதுபோலவே மலாய் நாடு பினாங் சிங்கப்பூர் முதலியவைகளிலுள்ள நண்பர்களும் நமது தேசத்திலுள்ள அபிமானிகளும் வேண்டிய ஏற்பாடு செய்வார்களாகில் இவ் வேலையைத் தக்க முறையில் நடத்திச்செல்ல ஏதுவாக விருக்குமென்று கருதுகிறோம்.

ஹரிஜனங்களுக்கு வேண்டுகோள்.

சோதரீர்! இவ்வுலகத்திலுள்ள பல தேசங்களிலும், உங்களைப்போன்ற ஒரு வகுப்பினர் இல்லை. இவ்விந்திய நாட்டில்தான் தீண்டாமை, பார்க்காமை, நிழல் படாமை என்னும் குறுகிய உணர்ச்சி இருந்து வருகிறது. இவ்விந்திய நாட்டிலுள்ள சில லக்ஷம் ஜனங்கள் தங்களது சுயநலத்தின் காரணமாகப் பல கோடி மக்களைத் தங்களது கட்சியில் சேர்த்துக் கொண்டு உங்களை நாயினும் கடையர்களாக மதித்துநடத்தி வருகிறார்கள். மலத்தைத் தின்னும் அசூயையான மிருகமாகிய நாய் முதலிய ஜீவ ஜந்துக்கள் ரோட்டல்போக அனுமதிக்கப் படுகின்றன. உயர்குலத்தார் என்று சொல்லிக் கொள்பவர்கள் தங்கள் வீடுகளில் நாய்களை வளர்க்கிறார்கள். அவைகளுக்கு சோப் முதலியவைகள் போட்டு குளிப்பாட்டிச் சொகுசாக வைத்திருக்கின்றனர். வெளியே போகும் போதும், வெளியிலிருந்து வரும்போதும் அந்த நாய்களைத் தடவுகின்றனர். அவைகளை முத்தம் கொடுக்கின்றனர். அவைகளின் எச்சில் தங்கள் உடலிலோ உடையிலோபட்டு விட்டாலும் அதைப்பற்றிக் கவலை கொள்கிறார்களில்லை. ஆனால், தங்களைப்போல் கை, கால், மூக்கு, கண், செவி, நா, மூளை, அறிவு ஆகியவைகளால் அமைக்கப்பட்ட உங்களைத் தங்கள் வீடுகளில் வரவும் விடுவதில்லை. தங்களண்டையில் நிற்கவோ உட்காரவோ அனுமதிப்பதில்லை. சிற்சில இடங்களில் உங்களை ரஸ்தாவில் நடக்கவும் அனுமதிப்பதில்லை. கண்ணுக்குமுன் வராமல் ஒதுங்கிச் செல்லவேண்டும் என்றும் நிர்பந்தித்திருக்கிறார்கள். சுருங்கச் சொல்லுமிடத்து அவர்கள் நாய், கழுதை முதலிய நாற்கால் பிராணிகளுக்குக் கொடுத்திருக்கும் சுயேச்சையைக் கூடக்கொடுக்காமல், உங்களைத் தாழ்த்தி வைத்திருக்கிறார்கள்.

மனிதவர்க்கத்தில் பிறந்த உங்களுக்கு மிருகஜாதிகளுக்குள்ள மதிப்புக்கூடக் கொடுக்காதிருக்கும் இந்தக் குறுகிய எண்ணத்தையும் செய்கையையும் இறைவன்கூட ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால்தான் அவனும்கூட இந்த நாட்டைப் பிறஜாதியாருக்கு அடிமைப் படுத்தி வைத்திருக்கிறான் என்று கூறுவது மிகைப்படுத்திக் கூறுவதாகாது. இந்த தேசம் பிறரால் ஆட்சிபுரியப்படுவது ஒருபுறமிருக்க, இங்கிருந்து வெளிநாடுகள் செல்லும் இத்தேச மக்கள் அங்கு அடிமைகளைப்போலவே நடத்தப் படுகிறார்கள். எளியாரை வலியார் வாட்டினால் வலியாரைத் தெய்வம் வாட்டும் என்பதற்கேற்ப உங்களை இத்தேசத்தில் சிலர் இப்படி நடத்துவதால் வெளிநாட்டில் இத்தேசத்தவர் தாழ்த்தப்பட்ட மக்களை போல் நடத்தப் படுகிறார்கள்.

எனவே, நீங்கள் உங்களது மனித உரிமைக்காக, பாத்தியதைக்காகச் செய்துவரும் போராட்டங்களையும் முயற்சிகளையும் நாங்கள் அனுதாபத்துடன் கவனித்துக் கொண்டுதானிருக்கிறோம். உங்களது முயற்சி வெற்றி பெற்று நீங்கள் மனித உரிமையை அடைவதில் உங்களைப் பார்க்கினும் நாங்கள் அதிகமாகச் சந்தோஷம் அடைவோம். ஆனால், உங்களது இம்

முயற்சியில் நாங்கள் பங்கெடுத்துக் கொள்ளாததற்குக் காரணம், "நீங்கள் உங்களை ஹிந்து மதத்தவர் என்றோ, கிறிஸ்து மதத்தவர் என்றோ கூறிக் கொள்வதே யாகும். உங்களது இம்முயற்சிகளெல்லாம் உங்களது சகோதரர்களான ஹிந்துக்களிடமும் கிறிஸ்துவர்களிடமுமே இருப்பதால் நாங்கள் அதில் தலையிடுவது உங்களது முயற்சியைத்தடை செய்வதற்கு ஒப்பாகவே இருக்கும். அன்றியும், ஒரேமதத்திலுள்ள இருசகோதரர்களில் ஒருவருக்கொருவரை சண்டையில் மூட்டிவிட்டு ஒரு தலைப்பக்ஷமாக நாங்கள் நடந்து கொள்கிறோம் என்று உங்களிலுள்ள உயர்ந்தோர் எனப்படுவோர் எங்கள்பால் குற்றம்கூற இடமேற்படுவது மல்லாமல் இந்தியாவில் வகுப்புச் சச்சரவுக்கு இதனை ஒரு புகலாகவும் அவர்கள் கொள்ளக் கூடும்.

தாழ்த்தப்பட்ட மக்களாகிய நீங்கள் ஹிந்து மதத்திலேயே இருந்துகொண்டு சமசுதந்திரத்திற்காக முயற்சிசெய்தீர்கள். அதில் நீங்கள் வெற்றிபெறவில்லை. உங்களில் விவேகமுள்ள சிலர் பிறமதம் தழுவ முன்வந்து கிறிஸ்துவ மதத்தைத் தழுவினர். ஆயினும், அவர்கள் எக்குறையின் காரணமாக மதம் மாறினர்களோ அக்குறை அங்கும் நிவர்த்தியாகவில்லை. ஆகவே, கிறிஸ்துவர்களிலும் தாழ்த்தப்பட்ட கிறிஸ்துவர்கள் இருந்தே வருகின்றனர். ஆனால், சிலர் இஸ்லாம் மதத்தைத்தழுவினர். இஸ்லாம் மதத்தைத் தழுவியவர்கள் இன்றைக்கு இவ்வுலகில் ஏனைய மனிதர் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் பாத்தியதைகளையும் அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர். இஸ்லாம் மதத்தைத் தழுவிய அந்த க்ஷணத்திலேயே அவர்கள் உயர்த்தப்பட்டு சகல உரிமைகளையும் அனுபவிக்க அருகதையுள்ளவர்களாகின்றனர். இதற்கு உதாரணம் பார்க்கவேண்டும் என்று நீங்கள் இஷ்டப்பட்டால் மதுரை ஜில்லாவிலுள்ள கம்பம் பள்ளத்தாக்கிற்குச் செல்லுங்கள். அங்கு ஆயிரக்கணக்கான தாழ்த்தப்பட்டமக்கள் இஸ்லாத்தைத்தழுவி இருக்கிறார்கள்.

அவர்களைப்பார்த்தால் நீங்கள் அவர்களைப் புதிய முஸ்லிம் என்றும், தாழ்த்தப்பட்டவர்களாக இருந்து உயர்த்தப்பட்டவர்கள் என்றும் கூட நம்பமுடியாது. அவர்களிடம் நீங்கள் நேரில் விசாரித்தால் இஸ்லாம் மதத்தைத் தழுவியபின் அவர்கள் எவ்வாறு சமஉரிமை அளிக்கப்பட்டனர் என்ற விருத்தாந்தத்தை அவர்களே உங்களுக்குச் சவிஸ்தாரமாகச்சாற்றுவர். கூட்டம்கூட்டமாக இஸ்லாம் மதத்தில்சேர்ந்தால் அங்கும் அப்படித்தானிருக்கும், என்று சில சுயநலமிகளும் குறுகிய எண்ணமுள்ளவர்களும் கூறுகின்றனர். அவர்கள் கூறுவது உண்மையல்லவென்பதை ருஜூப்பிப்பதற்காகவே மேலே உதாரணங் காட்டினோம். பிரத்தியக்ஷமாகப் பார்த்துக்கொள்ளலாம்.

இஸ்லாம் மதம் இவ்வுலகிற்றோன்றியதன் முக்கிய நோக்கம் மக்களுக்குப் பாரமார்த்திக வழியைக் காண்பித்து மனிதருக்கு மனிதர் அடிமைகளாக இல்லாமல் "மனிதர் அனைவரும் ஆண்டவனின் அடிமைகள்" என்பதை ஸ்தாபிக்கவேயாகும். எனவே, மனிதரிலுள்ள வலியார் எளியாரை வாட்டுவதைத் தடுத்து மனிதர் யாவரும் சமமே என்பதை ஸ்தாபித்து, அதனை அமலில் செய்து காட்டிய மதம் இஸ்லாம் மதம் ஒன்றேயாகும். இஸ்லாம் மதம் ஒன்றைத் தவிர்த்துச் சமத்துவத்தைச் சம்பூரணமாக அளிப்பது இக்குவலயத்தில் வேறெந்த மதமும் கிடையாது. இதனைக் குறித்துத் தான் மலையாளத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர்களில் ஒருவரான ஸ்ரீமான் சுங்குராமன், B. A. என்பவரும் தமது மதஆராய்ச்சி உரையாகிய "உபதேச ரத்தினம்" என்ற கட்டுரையில் இஸ்லாம் மதத்தை விசேஷித்துக் கூறியுள்ளார். சுயமரியாதை இயக்க ஸ்தாபகரான ஈரோடு ஈ. வே. ராமசாமி நாய்க்கர் அவர்களும் இஸ்லாம் மதத்தைப் பாராட்டிக் கூறுவதுடன் ஹரிஜனங்கள் ஹிந்துமதத்தை விட்டு இஸ்லாம் மதத்தில் சேர்ந்துகொள்ளும்படி அவர்களுக்கு ஆலோசனையும் கூறி இருக்கிறார்.

ஹரிஜனங்களாகிய நீங்கள் ஹிந்துமதத்தில் இருக்கும்வரை உங்களுக்கு சமத்துவம் கிடைக்கும் என்பது வீண் கனவேயாகும். ஏனெனில், ஹிந்துமதத்திற்கு வர்ணாசிரம தர்மம் உயிர்நாடியாக இருந்து வருகிறது. வர்ணாசிரமதர்மத்தை ஒழித்து விட்டால் ஹிந்து மதம் இல்லை என்று கூறிவிடலாம். ஒருவர் ஹிந்து மதத்தில் இருந்துகொண்டே வர்ணாசிரம தர்மத்தை ஒழித்து விடுகிறேன் என்று கூறுவது சுத்த ஹம்பக்காகும். இதனால்தான் இந்தியாவிலுள்ள பெரிய ராஜிய ஸ்தாபனமாகிய காங்கிரஸ் மகாசபை தீண்டாமை விலக்கு என்பதைப்பற்றி தீர்மானம் செய்து, 15-வருஷகாலமாக அதனை அடிக்கடி கூறி வந்தும் அது அமலில் கொண்டுவரப் பட

வில்லை. காங்கிரஸ் தலைவர்களின் பிரபலஸ்த ரான ஸ்ரீ காந்தி இவ்வியக்கத்திற்கென்று இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்து பலலக்ஷ கணக்கான பணந்திரட்டியும் அவ்வியக்கம் உருப்படாமல் இருந்து வருகிறது. ஹிந்து சமூகத்தில் மகத்தான செல்வாக்குள்ள ஸ்ரீ காந்திக்கும் கூட இவ்வியக்கத்தில் தவக்கமென்றால் இனி யார் ஹரிஜனங்களுக்காக முன் வரப் போகிறார்கள்.

ராஜிய வாதிகளான சில ஹிந்துக்கள் தங்களது ராஜிய நோக்கத்திற்காக ஹரிஜனங்களுக்கு அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்று வாய்ப்பிரசங்கம் செய்யலாம். பத்திரிகைகளில் பத்தி பத்தியாக வியாசங்களையும் கட்டுரைகளையும் வரையலாம். ஆனால் காரியத்தில் நடைபெறுவது கோழி முட்டை தான். எனவே, ஹரிஜனங்களாகிய நீங்கள் உங்களது சமத்துவத்தையும் சுயமரியாதையையும் பெரிதென மதித்து உங்கள் ஹிந்து மதத்தை விட்டு விலகுவதாக முடிவு செய்தது நியாயமாகும். ஆனால், நீங்கள் சமத்துவத்திற்காகத் தழுவ இருக்கும் பிறமதத்தைப்பற்றி நன்றாகச் சிந்தித்துக்கொள்ளுங்கள். குளிக்கப் போனவன் சேற்றைப் பூசிக்கொண்டதுபோல் இல்லாமல் சரியான மதத்தை நன்கு ஆராய்ந்து அதனைத் தழுவுங்கள். "எங்கள் மதம் நல்லது" "எங்கள் மதத்தைத் தழுவுங்கள் உங்களுக்குச் சமத்துவம் தருகிறோம்" என்று ஒவ்வொரு மதத்தவரும் கூறுவர். ஆனால், அவர்கள் கூறுவது எம்மட்டும் அமலில் இருந்து வருகிறது என்பதை ஆராய்ந்து பாருங்கள்.

தற்போதுள்ள மதங்களில் பல கோடி மக்களைச் சேர்த்துக்கொண்டிருப்பவை சில மதங்களேயாகும். அவைகளிலெல்லாம் அதிகமான ஜனத்தொகையைக் கொண்ட மதம் இஸ்லாம் மதமேயாகும். உலகத்திலுள்ள 180 கோடி மக்களில் 70 கோடிப் பேர்கள் முஸ்லிம்களாவார்கள். கிறிஸ்துவர்கள் 50 கோடிக்குக் கீழில் இருக்கிறார்கள். புத்த மதத்தார் 22 கோடிப் பேர்தான். ஹிந்துக்கள் (ஹரி ஜனங்கள் உள்பட) 20 கோடிப் பேர்களே யாவார்கள். இந்த நிலைமையில் முஸ்லிம்கள் எத்தேசத்தாராயினும் அவர்கள் உலகமெங்கும் சகோதரர்களாக இருந்து வருகிறார்கள். மற்றைய சமூகத்தார் அவ்வாறன்று. ஹரிஜனங்கள் இஸ்லாத்தைத் தழுவுவார்களாயின் அவர்களுக்கு இந்திய முஸ்லிம்கள் மாத்திரம் ஆதரவு புரிவார்கள் என்பதுமட்டுமில்லை, உலகத்திலுள்ள எல்லா முஸ்லிம்களுமே அவர்களுக்கு ஆதரவு புரிவர். உலகத்திலுள்ள 70 கோடி மக்களுக்குச் சகோதரர்களாகுவது உத்தமமா அல்லது அதற்குக் குறைவாக இருந்து கொண்டு, நாளுக்கு நாள் குறுகிக்கொண்டு வருகிற ஏனைய சமூகத்தினரில் ஒரு சமூகத்தாருக்குச் சகோதரர்களாக அது பூரண சமத்துவமில்லாமல் இருப்பது உத்தமமா? என்பதை ஹரிஜனங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

பிற மதத்தைப்பற்றிக் குணதோஷம் சொல்வது இக்கட்டுரையின் நோக்கமல்லவாதலின் இவ்விஷயமாக ஏனைய மதங்களைப்பற்றி யாம் அதிகம் கூறுவதற்கில்லை. ஆயினும், ஹரிஜனங்கள் தங்களது முடிவுக்குமுன் சில விஷயங்களைச் சிந்திக்கவேண்டியதிருப்பதால் தான் பிற மதங்களைப்பற்றி மேலே சிறிது கூறவேண்டியதேற்பட்டது. எனவே, ஹரிஜனங்களை ஆதரித்து அவர்களுக்கு வேண்டும் சமத்துவத்தை அளிக்க முஸ்லிம் சமூகம் தயாராக இருந்து கொண்டிருக்கிறது. முஸ்லிம் சமூகம் தயாராக இருப்பதற்குக் காரணம் ஹரிஜனங்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவுவதால் முஸ்லிம்களுக்கு விசேஷமான கௌரவம் ஏற்பட்டு விடும் என்பதற்காகவன்று. இஸ்லாம் மதம் விதித்துள்ள கட்டளைக்குக் கீழ்ப்படிந்தே முஸ்லிம் சமூகம் ஹரிஜனங்களை ஆதரிக்கவும், உதவி புரியவும், அவர்களைத் தங்கள் சகோதரர்களாக நடத்தவும் தயாராக இருக்கிறது என்பதை நாம் வற்புறுத்திக் கூறுகிறோம்.

அன்பர்கட்கு

பேட்டை வாசியான S. K. ஷாகுல்ஹமீது சாஹிப் அவர்களை நமது பத்திரிகைக்கு சந்தா சேர்க்கும் ஏஜண்டாக நியமித்து திருநெல்வேலி ஜில்லாவுக்கு அனுப்பியிருப்பதால் அங்குள்ள நண்பர்கள் யாவரும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து மாசிகையை ஆதரிக்குமாறு கோருகிறோம்.

ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.)

(தேன்காசி மீ. இ. மு. அபுல்ஹஸன் ஷாதலி வரைவது.)

முதன்முதல் பரிசுத்த "இஸ்லாம்" மார்க்கத்தை பின்பற்றியோரும், நபிகள் நாயகம் அகில விருட்சகர் அஹ்மது முஸ்தபா (ஸல்.) அவர்கட்கு ஆதிமுதல் அந்தம்வரை நண்பராக விருந்தவரும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இவ்வுலக வாழ்க்கையைத் திறந்தபின் அவர்களது பிரதிநிதியாக அரசாட்சி புரிந்தவருமான ஹஸ்ரத் "அபூபக்ர் ஸித்தீக்" (ரலி.) அவர்களின் சரிதையை ஈண்டு சுருக்கமாக வரைகின்றேனாதலின், நேயர்கள் யாவரும் நன்கு கவனத்துடன் வாசிக்கும்படி கோருகின்றனன்.

அரேபியா தேயத்தின் பிரபல்ய நகராகிய பரிசுத்த மக்கமா நகரின் "குறைஷ்" என்ற வகுப்பில் 'தைம், என்ற ஓர் சிறு பிரிவிருந்தது. இப்பிரிவினர்கட்கு "அபூகுஹாபா" என்ற தனவந்தர் தலைவராவர். இவரது மக்களில் ஸகல சற்குண நல்லொழுக்கங்கள் யாவும் ஒருங்கேயமைந்த 'அப்துல்லா, வென்ற நாமமுடைய ஒருவரிருந்தார். இவர்களையே "அபூபக்ர் ஸித்தீக்" என்றழைக்கப்படும். இவர்கள் நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்கள் பிறந்த மூன்றும் வருடம் ஜனனமானார்கள். இவர்கள் நபிகள் நாயகமவர்களின் நபித்துவத்தையும் மற்றும் அவர்களின் சொற்களையும் உண்மைப்படுத்தியதால் இவர்கட்கு "ஸித்தீகெ அக்பர்" என்ற பட்டப்பெயர் வழங்கப்படுகிறது. "ஸித்தீக்" என்ற பதத்தின் பொருள்:—உண்மையில் அளவுகடந்தவர், நல்வழியில் நடப்பவர் என்பதே.

ஹஸ்ரத் அவர்கள் சிறுபிராயமிருந்தே நல்லொழுக்கங்களைப் பின்பற்றுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பார்கள். அக்காலை விக்ரஹ வணக்கம் எத்துணை மும்முரமாக விருந்ததென்பதை நாயக சரிதைகளில் நன்குணர்ந்திருக்கலாம். அத்துணை தூரம் விக்ரஹ வணக்கம் வியாபித்திருந்தும் ஹஸ்ரத் அவர்கட்கு அதில் எள்ளத்துணையும் நம்பிக்கையில்லாதிருந்தது. ஹஸ்ரத் அவர்கள் ஜவுளி வியாபாரத்தில் பிரக்கியாதிபெற்ற வணிகராயிருந்தார்கள். இங்ஙனமிருந்தும் பிறர்க்கு உபகாரம் புரிவதையே தங்களின் முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தார்கள். ஏழைகள், கஷ்ட நிலையிலுள்ளோர்கள், துன்பத்தால் அல்லல்பட்டுக் கொண்டிருப்போர்கள் ஆகிய இவர்களுக்கு உதவியளித்து இவர்களை சந்தோஷப்படுத்தி வைப்பதில் சதாவும் கண்ணுங்கருத்துமாயிருப்பார்கள். இதன் காரணமாக இவர்கட்கு "குறைஷ்"களிடம் அளவற்ற கியாதியிருந்து வந்தது. இதனாலேதான் ஹஸ்ரத் அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய சில வருடங்களுக்குப் பின் காபிர்களின் அளவுகடந்த கஷ்டம் பொறுக்க வியலாமல் மக்காவை விட்டும் (ஹபஷா) அபிஸீயா தேயத்திற்கு ஹிஜ்ரத் செல்லலாமென நினைத்து தங்களது பந்துமித்திரர்களையும் மற்றும் சகலவற்றையும் துறந்து தங்களது பிறப்பிடமாகிய மக்காவை விட்டுத் தனியாக ஹபஷா தேசத்திற்குச் சென்றுகொண்டிருக்கையில் "குறைஷி" தலைவர்களில் ஒருவராகிய "மாலிக்கிப்னு தகினா" என்பவர் ஹஸ்ரத் அவர்களைக்கண்டு, ஹஸ்ரத் அவர்களின் குணவிசேஷங்களைப் புகழ்ந்து "தங்களைப் போன்ற மஹான்கள் மக்காவை விட்டு வெளியேறுவதற்கு யாங்கள் ஒருக்காலும் சம்மதியோம்" என்றுகூறி ஹஸ்ரத் அவர்களை மீண்டும் மக்காவுக்கு அழைத்து வந்துவிட்டார். இச்சம்பவத்திலிருந்து ஹஸ்ரத் அவர்களுக்கு மக்கத்தவர்களிடம் எவ்வளவு கியாதியிருந்ததென்பதை தெற்றெனத் தெரிந்து கொள்ளலாம்.

இஸ்லாத்தைப் பின்பற்றலும் நாயகத்தின் மீது வைத்துள்ள பிரீதியும்

ஹஸ்ரத் அவர்கள் இஸ்லாத்தைத் தழுவும் சமயம் நாற்பது வயதை அடைந்திருந்தார்கள். சுயேச்சையான ஆண்களில் இவர்களே இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதில் முதல்வராவர். இவர்களுக்குமுன் மூன்று பேர்கள் இஸ்லாத்தைத் தழுவியிருந்தார்கள். அதாவது, பெண்களில் நாயகமவர்களின் மனைவியரான ஹஸ்ரத்

'கதீஜா, (ரலி.) அவர்களும், சிறுவர்களில் நாயகமவர்களின் பெரிய தந்தையராகிய அபூ தாலிப் அவர்களின் குமாரர் ஹஸ்ரத் 'அலி' (ரலி.) அவர்களும், அடிமைகளில் ஹஸ்ரத் ஸைதிப்னு ஹாரித் (ரலி.) அவர்களுமாம்.

ஹஸ்ரத் அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய பின் அநேக சமயங்களில் நபிகள் நாயகத்துடனேயே இருந்து கொண்டிருப்பார்கள். மேலும், ஹஸ்ரத் அவர்கள் இஸ்லாத்தைப் பரத்துவதற்காகவும், மானிடர்களை இஸ்லாத்தைத் தழுவச் செய்வதற்காகவும் ஏராளமான உதவிகளை நாயகமவர்கட்குச் செய்துள்ளார்கள். ஹஸ்ரத் அவர்களின் சொந்த முயற்சியால் பெரும் தலைவர்களிலநேகர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மக்காவில் ஹஸ்ரத் அவர்கட்கு குப்பார்களாய அவிஸ்வாஸிகள் எண்ணத் தொலையா கஷ்ட நஷ்டங்களைக் கொடுத்தனர். ஆனால் ஹஸ்ரத் அவர்கள் இவைகளை பொருட்படுத்தாது இஸ்லாத்தின் முன்னேற்றத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தார்கள். ஒரு சமயம் குறைஷிகளின் மாபெருங் கூட்டமொன்று கஃபாவின்முன் கூடிற்று. அதுபோழ்து ஹஸ்ரத் அவர்கள், அவிஸ்வாஸிகட்கு ஓர் பிரசங்கம் செய்தார்கள். அதில் இறைவனுக்குரிய லக்ஷணங்களையும் குணங்களையும்எடுத்துக் கூறியபின் அவ்விறைவனுக்கு இணை வைப்பதைப்பற்றிய கெடுதிகளையும் அதற்குண்டாகும் தண்டனைகளையும் அஞ்சா நெஞ்சத்துடன் சபையோர்களுக்கு விளக்கிக் கூறினார்கள். இதனைச் செவியுற்ற அக்காபிர்கட்கு மட்டிலடங்காக் கோபமும், ஆக்ரோஷமும் கிளம்பின. அவர்கள் ஹஸ்ரத் அவர்களை அளவுகடந்து தூஷித்தனர். கடுமொழிகளைக்கொண்டு தாக்கினர். ஆனால், சாந்த சொரூபியான ஹஸ்ரத் அவர்களோ அவர்களின் இம்மொழிகளைச் சிறிதும் பொருள்படுத்தவில்லை. சத்தியத்தைச் சாதிப்பதையே சரியெனக் கண்டார்கள். இன்னும் இதேபோன்று பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்துள்ளன. இறுதியாகக் கூறுமிடத்து ஹஸ்ரத் அவர்கள் இஸ்லாத்தைப் பரவச் செய்வதில் பூரண பொறுமையுடையவர்களாகவே காணப்பட்டார்கள்.

ஹஸ்ரத் அவர்களின் பொருளுதவியும் நாயகத்தின் நல்வாக்கும்

ஹஸ்ரத் ஸித்தீகே அக்பரவர்கள் இஸ்லாத்தைத் தழுவும்போழ்து அவர்களிடம் ரொக்கமாக நாற்பது ஆயிரம் தங்க நாணயங்களிருந்தன. ஹஸ்ரத் அவர்கள் இவைகளை அல்லாஹ்வுக்காக—இஸ்லாத்தைப் பரவச் செய்வதற்கும், முஸ்லிம்களுக்கு உதவி செய்வதற்கும் செலவு செய்துவிட்டார்கள். இதற்காகவே நாயகமவர்கள் "அபூபக்ரின் பொருளில் நின்று யான் பிரயோஜனம் பெற்றதேபோல் வேறு யாருடைய பொருளில்நின்றும் பிரயோசனம் பெறவில்லை" எனக் கூறிப் போந்தார்கள். மேலும், இவர்களின் தாராள சிந்தையையும் சன்மார்க்க பக்தியையும்பற்றி இறைவனே திருமறையில் சைக்கினையாக பலவிடங்களில் புகழ்ந்து கூறியிருக்கின்றான்.

கலீபா பதவியும் அக்காலை நிகழ்ந்த சம்பவங்களும்.

உலக விருட்சகரான நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்கள்இவ்வுலகை விட்டுச்சென்றபின் முஸ்லிம்கள் யாவரும் ஒன்று கூடி நாயகமவர்களின் பிரதிநிதியாக(கலிபாவாக) ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக்(ரலி.) அவர்களையே நியமித்தார்கள். இக்காலத்தில் இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காக ஹஸ்ரத் வெகு சிரத்தையுடன் கவனம் செலுத்தி வரலானார்கள். இஸ்லாத்தை அலங்கோலப்படுத்திக்கொண்டிருந்த விரோதிகளை சம்ஹாரம்செய்ய பல சேனைகளை அனுப்பி அவைகளில் இறைவனருளால் பூரண வெற்றியும் பெற்றார்கள். மேலும், அக்காலத்தில் "முஸைலமா" என்றொருவன், தான் நபியென்பதாக தாவாசெய்து தன்னுடன் பல ஜனங்களையும் சேர்த்துக் கொண்டிருந்தான். இவனின் போதனை "நபிகள் நாயகத்தையொப்புக்கொள்வதுடன் இவனையும் நபியென ஒப்புக்கொள்ளல் வேண்டும்" என்பதாகும். ஹஸ்ரத் அவர்கள் இப்போலியையும் அவனைப் பின்பற்றியோர்களையும் சம்ஹரிப்பதற்காக சேனைகளை அனுப்பி இறைவனருளால் ஜெயம் பெற்றார்கள். அந்த போலியும் அவனைச்சார்ந்த பலரும் வெட்டுண்டு மரணமடைந்தனர். மற்றும் பலர் மீண்டும் இஸ்லாத்தைத் தழுவி முஸ்லிம்களாயினர். மேலும்,

ஹஸ்ரத் அவர்களின் கிலாபத் காலத்தில் மற்றொரு பெரிய சம்பவம் நிகழ்ந்தது. அதாவது :—ஹஸ்ரத் அவர்கள் ஹாபிஸ்களின் களின் உதவியைக்கொண்டும் நாயகமவர்கள் காலத்திலேயே வரைந்து வைக்கப்பட்ட பிரதியின் உதவியைக்கொண்டும் குர் ஆன் ஷரீபை

புத்தகரூபமாக எழுதி சேகரம் செய்தார்கள். ஹஸ்ரத் அவர்களின் மரணத்திற்குப்பின் இப்பிரதி ஹஸ்ரத் உமர் (றலி.) அவர்களிடத்திலும் இவர்களுக்குப்பின் ஹஸ்ரத் உமர்(றலி.) அவர்களின் புத்திரியும், நபிகள்நாயகமவர்களின் மனைவியாருமாகிய ஹஸ்ரத் ஹப்ஸா, (றலி.) அவர்களிடமும் இருந்துவந்தது.

ஹஸ்ரத் அவர்களின் குண ஒழுக்கங்கள்.

ஹஸ்ரத் அவர்கள் எளிய தன்மையிலேயே சதாவும் இருந்துகொண்டிருப்பார்கள். பெரும் பெரும் கூட்டங்களில் சாதாரண மனிதரைப்போலவே ஹஸ்ரத் அவர்களும் இருந்துகொண்டிருப்பார்கள். ஒரு சமயம் ஒருயுத்தத்திற்கு சேனைகளை அனுப்பும் போழ்து ஹஸ்ரத் அவர்கள் வெகுதூரம்வரை கால்நடையாகவே அச்சேனைத் தலைவரிடம் சம்பாஷித்துக்கொண்டே நடந்துசென்றார்கள். சேனைத்தலைவரோ குதிரையின்மீது சவாரி செய்துகொண்டிருந்தார். அதுபோழ்து சேனைத் தலைவர் ஹஸ்ரத் அவர்களைநோக்கி "தாங்களும் குதிரைமீது ஏறிவாருங்கள், இன்றேல் எனக்கு தங்களைப்போல் நடந்துவர அனுமதியுங்கள்" என வேண்டினார். ஹஸ்ரத் அவர்கள் அவ் வேண்டுகோளைமறுத்து "எனது இக்கால்நடை அல்லாஹ்வின் பாதையிலிருப்பதாக யான் கருதுகிறேன்" என நவின்றார்கள். மேலும், ஹஸ்ரத் அவர்கள் ஏழைகள், அனாதைகள், விதவைகள், ஆதரிப்போரற்றவர்கள் ஆகியோர்கள் மாட்டு அதிகப்பிரீதியுடையவராக விருந்தார்கள். மதீனாநகரின்எல்லையோரத்தில் கண் தெரியாத ஓர் வயோதிகப்பெண் இருந்துவந்தாள். ஹஸ்ரத் அவர்கள் இரவுநேரங்களில் மறைவாக அவண்சென்று அவ்வயோதிகப் பெண்மணிக்கு ஆகாரம், பானம் முதலியன அருந்தச்செய்துகொண்டிருப்பார்கள்; இதை யாரிடமும் தெரிவிப்பதில்லை. ஹஸ்ரத் அவர்கள் வியாதியஸ்தர்களை விசாரிப்பதற்காக அதிகம் சென்றுகொண்டிருப்பார்கள். இன்னும், அவ்வியாதியஸ்தர்கட்கு ஆறுதல் மொழிகளைக்கூறி அவர்களை அகமகிழச்செய்வார்கள்.

நபிகள்நாயகத்தின்மீது அன்பு

ஹஸ்ரத் அவர்கள் மக்காவிலிருக்கும்போழ்து நடந்த ஓர் சம்பவத்தை ஈண்டு சுருக்கமாக வரைகிறேன். இதிலிருந்து ஹஸ்ரத் அவர்கள் நாயகமவர்களுக்கு அணுத்துணையும் துன்பம் நேரிட தங்கள் மனம் பொருந்தவில்லை யென்பதை நன்கு தெரிந்துகொள்ளலாம். ஒருநாள் விக்ரஹ ஆராதனைபுரியும் அவிஸ்வாசிகள் கஃபதுல்வாவில் ஒன்றுகூடி நாயகமவர்களை எவ்வாறு துன்புறுத்துவது?" என்பதைப்பற்றி ஆலோசனைசெய்துகொண்டிருந்தார்கள். அதுபோழ்து நாயகமவர்களும் அவண் திடீரென விஜயஞ் செய்ய, அக்காபிர்கள் நாயகமவர்களைச் சூழ்ந்துகொண்டு "எதற்காக எங்களது விக்ரஹங்களைக்குறை கூறுகின்றீர்" என்பன போன்ற பல கேள்விகளைக்கேட்டனர். நாயகமவர்கள் இவர்கட்கு சாந்தமான முறையில் பதில் கூறினார்கள். நாயகம் (ஸல்) அவர்களது பதிலைக் கேட்டதும் அவிஸ்வாசிகளான துஷ்டர்கள் அளவு கடந்த கோபத்துடன் நபிகள் நாயகத்தின்மீது பாய்ந்து விழுந்தார்கள். இச்சம்பவம் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுக் கெட்டியதும் உடனே அவண் விஜயஞ் செய்து எம்பெருமானார் (ஸல்) அவர்களுடன் தங்களின் அன்பை வெளியாக்கியும் அத்துஷ்டர்கள் மீது தங்களின் வெறுப்பை வெளியாக்கியும் அத்துஷ்டர்களை நோக்கி "நீங்கள் கண்யமிக்க எனது நண்பரான அல்லாஹ்வின் பரிசுத்த அடியாரை, அல்லாஹ்வின் பரிசுத்தமான வழியைக்காட்டுவதற்காக, நோவினை செய்கின்றீர்களா? எனக் கூறினார்கள். இவ் வார்த்தைகளைக் கேட்ட அத்துஷ்டர்கள் நாயகத்தை விட்டு விட்டு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை சுற்றிலும் வளைந்து கொண்டு ஹஸ்ரத் அவர்கள் உணர்ச்சியற்றவர்களாக ஆகும் வரை அடித்தார்கள். என்னே, ஹஸ்ரத் அவர்களின் பக்தி!

மற்றொரு சமயம் உலக விருட்சகரான நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஃபதுல்லாவில் தொழுது கொண்டிருக்கும் பொழுது "அகபா" வென்ற ஓர் துஷ்டன் நபிகள் நாயகத்தின் கழுத்தில் திரிக்கப்பட்டவோர் பிடவையைப் போட்டு இறக்கமற்ற தன்மையில் இழுத்தான். எந்த அளவிற்கென்றால், அக் கஷ்டத்தினால் வலி பொருக்க முடியாதவர்களாக ஆய் விட்டார்கள். இக்சமயம் திடீரென ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் அவண் விஜயஞ் செய்ய, நடக்கும் சம்பவங்களைக் கண்டு மனவருத்தங்கொண்டு அகபா என்பவனின் பிடியை விட்டு நபிகள் நாயகமவர்களை அகற்றி அத்துஷ்டனை அதட்டினார்கள். மேலும், கூறியதாவது: நீங்கள் ஒருபரிசுத்த மனிதரை ஈகையற்ற விதமாக நோவினை புரிகின்றீர்களோ, அவர்கள் இறைவ

னின் ஆணையின்படி நுங்களை அவ்விறைவனின் சத்திய வழியின் மீது அழைக்கிற குற்றத்திற்காகவா இத்துணை துன்பப்படுத்துகின்றீர்கள் ? என்பதே.

மேலும், மற்றொரு சம்பவத்தையும் ஈண்டு வரைகின்றனன். அதாவது:—அகில விருட்சகராகிய அஹ்மது முஸ்தபா (ஸல்.) அவர்களும், ஹஸ்றத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்களும் மதீனா நகருக்கு ஹிஜ்ரத் செல்லுந் தருவாயில் சில தினங்கள் "தௌர்" என்ற குகையில் தாமதித்தார்கள். இக்குகையில் இவர்கள் நுழையுந் தருவாயில் பல துவாரங்கள் நிறைந்திருந்தன. பாம்பு தேள் முதலியவைகள் வசிக்கும் இடம்போல் தோன்றியது. உடனே ஹஸ்ரத் ஸித்தீகெ அக்பர் (ரலி.) அவர்கள் அதில் நுழைந்து அதனை தங்களின் திருக்கரங்களால் சுத்தம் செய்ததுடன் தாங்கள் அணிந்திருந்த துணிகளைக் கிழித்து பல துவாரங்களை அடைத்துவிட்டார்கள். ஆனால் ஒரு துவாரம் அடைக்க வழியில்லாது தங்களின் குதிங்காலை அதில் வைத்து அடைத்துக்கொண்டார்கள். இதன் பின் நாயகமவர்கள் உள்சென்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்களது மடியின்மீது தலையை வைத்து நித்திரை செய்தார்கள். இந்நிலைமையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) எதில் குதிக்காலை வைத்து அடைத்திருந்தார்களோ அப்புதரிலிருந்து ஒரு பாம்பானது ஹஸ்ரத் அவர்களின் காலில் பல தடவை அதிவேகத்துடன் கொட்டியது. இந்த நோவினையால் ஹஸ்ரத் அவர்கள் அளவற்ற கஷ்டத்துடன் பொறுமை செய்துகொண்டிருந்ததுடன் தங்களின் காலை எடுக்கவே யில்லை. காலை எடுத்தால் பாம்பானது உள்நுழைந்து நாயகமவர்கட்கு துன்பம் கொடுக்கலாம். இன்னும், காலை எடுப்பதினால் நாயகமவர்கள் நித்திரையை விட்டும் விழித்து விடலாம், என்ற காரணத்தை ஆலோசித்துக்கொண்டிருந்தார்கள். இதே சமயம் வலிபொறுக்க வொண்ணாமல் ஹஸ்ரத் அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகளானது நித்திரை செய்துகொண்டிருந்த நாயகமவர்களின் கன்னத்தின்மீது விழவே நாயகமவர்களும் விழித்து விட்டார்கள். இறுதியாக விஷயத்தை யுணர்ந்து பாம்பு கடித்த விடத்தில் நாயகமவர்கள் தங்களின் உமிழ் நீரைத் தடவ, ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்களுக்கேற்பட்டிருந்த வலி யாவும் நீங்கி பூரண சுகமடைந்தார்கள். இன்னும் இதுபோன்ற அநேக சம்பவங்கள் நாயகத்தின் மீது ஹஸ்ரத் அவர்கள் கொண்டிருந்த உண்மையான அன்பை நன்கு காட்டிக்கொண்டிருக்கிறது. விரிவஞ்சி விடுத்தனன்.

ஹஸ்ரத் அவர்கள் வீரம் பொருந்திய பராக்கிரமசாலியாக விருந்தார்களாதலின், நாயகமவர்களுடன் பல யுத்தங்களில் ஈடுபட்டிருந்தார்கள். ஹஸ்ரத் அவர்கள் யுத்த தளகர்த்தராகவும், சிறந்த வியாபாரியாகவும், குறைஷித்தலைவர்களில் மஹா கண்ணியம் வாய்ந்த தலைவராகவும், சாந்தமான முறையில் அழகாகப்பேசும் வன்மையுள்ளவராகவும் விளங்கினார்கள். இன்னும், இதுபோன்ற அநேக தன்மைகள் ஹஸ்ரத் அவர்களின் இயற்கைத் தன்மையிலேயே அமைந்திருந்தன. எளியாரிடத்தும் வலியாரிடத்தும் அன்பாகவும் பட்சமாகவும் நடந்துகொள்வார்கள். அநேக நேரங்களில் மௌனமாகவே இறைவனை தியானித்துக்கொண்டிருப்பார்கள். கனவிற் கண்ட விஷயங்கட்குக் கருத்துக் கூறுவதில் நிகரற்று விளங்கினார்கள். இறுதியாகக் கூறுமிடத்து சகல விஷயங்களிலும் சம்பூர்ணராக விளங்கினார்களெனக் கூறினும் மிகையாகா.

இறுதிப் பிரார்த்தனையும் இவ்வுலகப் பிரிவும்

ஹஸ்ரத் அவர்கள் "கலீபா" பதவியை ஏற்று ஈராண்டு மூன்று மாதங்கள் வெகு உபரிய முறையில் அரசாட்சி புரிந்தார்கள். ஹஸ்ரத் அவர்கள் சில தினங்கள் நோய் வாய்ப்பட்டிருந்தார்கள். இந்நிலைமையில் ஹஸ்ரத் அவர்கள் "இறையே என்னை நீ, நினக்கு வழிப்பட்டவனாக யிருக்கும் நிலைமையில் மரணமாக்கி, நல்லடியார்களுடன் என்னைச் சேர்த்தருள்" எனப் பிரார்த்தனை புரிந்துகொண்டிருப்பார்கள். இறுதியாக வல்லவனின் ஆக்ஞைப் பிரகாரம் ஹிஜ்ரி பதின்மூன்றாமாண்டு ஜமாதுல் ஆகிர் மாதம் பிறை 23-ல் (கி. பி. 634) தங்களின் 63-வது வயதில் இம்மண்ணுலகை விடுத்து என்றும் சாஸ்வதமான மெய்யுலகெய்தினர். (இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்) ஹஸ்ரத் அவர்களை நாயகமவர்களின் கப்ரினருகில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவர்களுக்குப் பின் இரண்டாவது கலீபாவாக ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் நியமிக்கப்பெற்றார்கள். இன்ஷாஅல்லாஹ் இனி இவர்களின் சரிதையையும் சுருக்கமாக வரையலாமென நாட்டங்கொண்டுள்ளேன்.

இஸ்லாமிய சகோதர சகோதரிகளே!

இஸ்லாத்தின் இணையற்ற பக்தரும் நபிகள் நாயகத்தின் உற்ற தோழருமான ஹஸ்ரத் அபூ பக்ர் ஸித்தீக் (றலி.) அவர்களின் சரிதைச் சுருக்கத்தை மேலே வரைந்துள்ளேன். பொதுவாக ஸஹாப்பாக்களைப் பின்பற்றும்படியும், குறிப்பாக ஹஸ்ரத் அவர்களைப் பின்பற்றும்படியும் நபிகள் நாயகமவர்கள் கட்டளையிட்டுள்ள வாக்கியங்கள் ஹதீஸ் கிரந்தங்களில் மிளிர்ந்து காணக்கிடக்கின்றன. ஆதலின், நாம் ஒவ்வொருவரும் ஹஸ்ரத் அவர்களின் நடையுடைகளைப் பின்பற்றுவோமாக. ஹஸ்ரத் அவர்கள் இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்கு எடுத்துக்கொண்டுள்ள முயற்சிகளை முன்மாதிரியாக வைத்துக்கொண்டு நாமும் அவ்வாறே பிரச்சார வேலையில் ஈடுபடுவோமாக. ஆங்காங்கு பிரச்சார சபைகளை ஏற்படுத்தி மார்க்க அறிஞர்களைக்கொண்டு பிரச்சாரம் செய்வோமாக. நமது அனுஷ்டான மூலமாக இஸ்லாத்தின் இணையற்ற தத்துவங்களை உலகோர்கட்குக் காட்டுவோமாக. எல்லாம் வல்ல இறைவன் நம் யாவர்களையும் தனது திருமறையின்படி நடந்த சமூகத்தில் சேர்த்தருள்வானாக.

வஸ்ஸலாம்.

பாபிலில் தாராவின் வெற்றி

பாரசீக தேயத்து சக்கிரவர்த்தியான தாராவினது பாபிலின் அரசமாளிகையில் புரட்சி ஏற்பட்டுவிட்டது. புரட்சிக்காரர்கள் பாரசீகர்களுக்கு அடிமையாக இருக்கும் பளுவைத் தங்களது தோள்களிலிருந்து இறக்கிவைத்துவிடுவதில் முனைந்து நிற்கின்றனர் என்ற செய்தி எட்டிற்று. ஆனால், “பாபிலை வெற்றிக் கொண்டபின் அங்கு விரோத உணர்ச்சி அடங்கிவிட்டது; அங்குள்ள ஜனங்கள் தமது ஆட்சியை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டுவிட்டனர்” என்று பாரசீக மன்னனான தாராஷாஹ் நிம்மதியடைந்திருந்தனன். திடீரென எதிர்பாராத வண்ணமேற்பட்ட இந்தப் புரட்சிச் செய்தியைக் கேட்டவுடன் தாராவின் மனம் துடிதுடித்தது. பாபிலோனிலுள்ளவர்களை அடக்கி, அவர்களுக்குப் புத்தி புகட்டவேண்டும் என்ற எண்ணம் தாராவின் உள்ளத்தில் கொழுந்துவிட்டெரிய வாரம்பித்தது. அவன் இவர்களை அடக்குவதற்காக ஒரு படையுடன் தாமே நேரில் செல்லவேண்டும் என்று முடிவுசெய்து பாபிலோனை நோக்கிச் சென்றனன். பட்டணத்திற்கு வெளியில் வந்தவுடன் தமது பரிவாரங்களுடனும் சேனைகளுடனும் தாரா தங்கி இருந்தனன். மறுநாள் களைப்பாறிவிட்டு நகருக்குள் சென்று கலகக்காரர்களை அடக்கவேண்டுமென்பது அவனது எண்ணம். ஆனால், தாரா சக்கிரவர்த்தியின் கூடாரத்தைக் காவல் புரியும் காவற்காரன் சக்கிரவர்த்தியிடம் வந்து “அரசே! கூடார வாசலில் ஒருவர் காத்து நிற்கிறார். அவர் பாபிலோனிலிருந்து வருந்தத்தக்க சமாச்சாரத்தைக் கொண்டு வந்திருக்கிறார்” என அறிவித்து உத்தரவை எதிர்பார்த்து நின்றனன். அரசனின் ஆணை பிறந்த அந்த க்ஷணத்திலேயே அச்சமாச்சாரத்தைக் கொண்டுவந்த துப்பறிபவன் அரசன்முன் நிறுத்தப்பட்டனன். ஒற்றன் அரசனுக்குச் செய்யவேண்டிய மரியாதையைச் செய்து,

“அரசே! பாபிலோன் தற்சமயம் கனல் மலையாக மாறி நிற்கிறது. ஒவ்வொரு மூலை முடுக்குகளிலிருந்தும் கலகம் என்ற தணல் கொளுந்துவிட்டெரிந்து கொண்டிருக்கிறது. பகைவர்களிடம் பலமான படை பாரசீகர்களாகிய நம்மை நசுக்குவதற்கு தயாராக இருந்துகொண்டிருக்கிறது. கோட்டைகளையும் கொத்தளங்களையும் அரண்களையும் கலகக்காரர்களின் சைனியங்கள் தங்கள் வசப்படுத்திக்கொண்டிருக்கின்றன”

என்றறிவித்தனன். இச்செய்தியைக்கேட்டவுடன் தாராஷாஹ் மெய்மறந்தனன். கோபக்குறிகள் அவனது கண்களில் நன்கு தோன்றின. யுத்த சபையை உடனே கூட்டுவித்து ஆலோசனை செய்தனன். எல்லாச் சைனியங்களும் உடனே அமர்க்களமேக ஆயத்தமாகும்படி அவசர உத்தரவு ஆக்ஞாபித்தனன். கட்டளையைக் கண்டவுடன் கனபடைகளும் யுத்த சன்னதமாயின. பாரசீக மன்னன் பாபிலோ

னுக்கு வெளியில் பரிவாரங்களுடன் பாளைய மிறங்கி இருக்கின்றனன் என்றே பார்த்தவர்கள் நினைத்துக்கொண்டிருந்தனர்.

இரவு கழிந்தது. சூரியனின் செங்கதிர்கள் பாபிலோன் பட்டணத்தின் சுவர்களின்மீது தனது உஷ்ண காந்தியைப்போட ஆரம்பித்தன. பாரசீகர்களின் படைகள் நகரத்தின் நான்கு புறத்திலும் சுவருக்கப்பால் முற்றுகையிட்டுக்கொண்டிருப்பதை பாபிலோன் வாசிகள் கண்டனர். இதனையறிந்த கலகக்காரர்களின் பிரதம உத்தியோகஸ்தன் தனது சைனியங்களனைத்தும் பாரசீகர்களுடன் எதிர்த்துப் போர் புரிவதற்காக ஆயத்தமாகிவிடவேண்டுமென்று கட்டளையிட்டனன். உத்தரவு பிறந்தவுடன் அம்புகளும் விற்களும் அரை நொடியில் தயாராகி கவண்டி கல்லெறிவதற்கான ஆயுதங்கள் ஆங்காங்கு நிறுத்தப்பட்டன. பகைவர்களின் பட்டாளத்தின்மீது நெருப்புகளைப் பொழிவதற்கான யந்திரங்களும் நகரச் சுவரின்மீது ஏற்றப்பட்டன.

பாரசீகர்களை எதிர்த்து யுத்தம் செய்வதற்காக பாபிலோன் வாசிகள் வெளியில் இந்த ஏற்பாடுகளை எல்லாம் செய்துகொண்டிருந்தனர். ஆனால் பாபிலோன் நகருக்குள் பெரும் பிரளயமே உண்டாகி இருந்தது. அதாவது பாரசீகர்கள் செய்திருக்கும் முற்றுகை சீக்கிரத்தில் அகலாமல் நீண்டுகொண்டிருக்குமாயின் நகரத்திலுள்ள தானியங்களும் உணவுப் பொருள்களும் நகரவாசிகளுக்கும் போர்வீரர்களுக்கும் போதாமலாகிவிடும். ஆகவே, பாபிலோனியர்கள் பஞ்சத்தாலும் பட்டினியாலும் அகால மரணத்திற்காளாகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும் என்று பாபிலோன் ராணுவ தளகர்த்தர்கள் உறுதியாக நம்பினர். ஆகவே, தானியங்களையும் உணவுப் பொருள்களையும் மிதமாகச் செலவு செய்வதற்காக, நகரத்திலுள்ள வயோதிகர்கள், சிறுவர்கள், ஸ்திரீகள் ஆகியவர்களை எல்லாம் கொலை செய்துவிடும்படி கட்டளையிட்டனர். இவர்கள் இறந்துபோனால் இவர்கள் அருந்தக்கூடிய உணவுப் பொருள்கள் போர்வீரர்களுக்கு உபயோகப்படும் என்பது இவர்களது அபிப்பிராயம். இதனால் நகரத்திற்குள்பெரும்பிரளயம் ஏற்பட்டு நிலைமையே மாறி இருந்துவந்தது.

பாபிலோனில் அந்தோ! ஆயிரக்கணக்கான வயோதிகர்களும், ஸ்திரீகளும், குற்றமற்ற குழந்தைகளும், கன்னிகைகளும் மரத்தின் இலைகள் பழுத்து உதிருவதுபோல் வாளுக்கிரையாகி வீழ்ந்தனர். ரத்தப்பிரவாகம் ஓடிக்கொண்டிருந்தது. அழுகுரலாலும் பிரலாபத்தாலும் பாபிலோன் நகரமெங்கும் இடிமுழங்கியது.

இளம் வாலிப கன்னிகைகளைக் கொலைசெய்த காட்சி மிகவும் பரிதபிக்கத்தகுந்ததாக இருந்தது. இக்கன்னிகைகளின் முகதாமரையானது சந்திரனைப் பழிக்கும்விதமாகவும், அவர்களுடைய குற்றமற்ற முகமானது ரோஜாபுஷ்பங்களையும்கூட வெட்கித்தலைகுனியும்படியாகவும் செய்துகொண்டிருந்தது.

பாபிலே! நினது அழிவிற்கு அன்றோ! கொலைக்களத்தில் அழகுசௌந்தர்யமுள்ள மங்கைகள் இழுத்துவரப்பட்டனர். அவர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் முயற்சியில் தங்களது மிருதுவான கரங்களால் முரட்டுசிப்பாய்களை விலக்கிக்கொண்டு சென்று விடவிரும்பினர். ஆனாலும், பிரயோஜன மொன்றுமில்லை. இவர்கள் இம்முயற்சியைச் செய்புமுன் அவர்களது கூரிய வாளாயுதங்கள் இவர்களது தலைகளை உடலத்தைவிட்டுத் துண்டித்தன. இவ்வாறு பாபிலோன் நகருக்குள் பெரும்புரளி ஏற்பட்டிருந்தது. பாபமற்ற பல்லாயிரம் ஜீவன்கள் பார்த்துக்கொண்டிருக்கும் போதே மண்ணும் உதிரமும் புரண்ட விரிப்பில்வீழ்ந்து நித்திய நித்திரை செய்யலாயினர். இவர்கள்செய்த குற்றமென்ன? எதற்காக இவர்கள் கொல்லப்பட்டனர்? எந்தப் பாவத்திற்காகவுமன்று. எந்தக் குற்றத்திற்காகவுமன்று. இவர்களருந்தும் ஆகாரம் போர்வீரர்களுக்கு உபயோகமாக வேண்டும் என்பதற்காகவே இவர்கள் கொல்லப்பட்டனர். நீண்டகாலத்திற்கு பாரசீகர்களை எதிர்த்துப்போராடவேண்டும் என்பதற்காகவே படுகொலை புரியப்பட்டனர். போர்வீரர்களுக்கு உணவுப் பதார்த்தங்களைச் சித்தம்செய்வதற்காகவும், யுத்தத்தில் காயமடைந்தவர்களுக்கு உதவிபுரிவதற்காகவுமென்று சில நூறு ஸ்திரீகளும் வயோதிகர்களும் எஞ்சி இருந்தனர். மற்றவர்களனைவரும் மறுஉலகெய்தினர்.

இந்த ரத்தக்களரி முடிந்தவுடன் பாபிலோன் பட்டணத்துக் கலகக்காரர்களின் பிரதம உத்தியோகஸ்தன் பாரஸீக மன்னன் தாராஷாஹ்வுக்குப் "பாபிலோன் ஒருபோதும் தலைகுனியாது; ஒரு சிப்பாய் உயிருடன் இருக்

தும்வரை பாபிலோனைக் கைப்பற்றுவது வெறுங் கனவேயாகும்'' என்று லிகிதம் எழுதித் தூதுவர் வசம் கொடுத்தனுப்பினன்.

பாரசீக மன்னனிடம் தூதுவர் வந்தார். ஆனல், அவர் திரும்பச் செல்ல முடியவில்லை. ஏனெனில், தாராஷாஹ் அத் தூதுவரின் தலையை வாங்கிவிட்டார். இறுதியாக இருதிறத் தாருக்கும் யுத்தம் தொடங்கியது. இருகக்ஷியினரிலும் பல்லாயிரம் வீரர்கள் மடிந்தனர். ரத்தப்பிரவாகம் புரண்டோடிற்று. ஆனல், பாபிலோன் தாராஷாஹ்வின் கையில் வீழ்ச்சியடைவதற்கில்லை. முற்றுகையும் 8 மாத காலமாக நடைபெற்றது. ஆனல், பாபிலோன் வாசிகள் தோல்வி புறுவதற்கான அறிகுறியொன்றும் தோன்றவில்லை. பாரசீகர்களுக்குக் கணக்கற்ற பொருள் நஷ்டமும் உயிர் நஷ்டமுமேற்பட்டது. ஆனல், வெற்றியடைவதற்கான மார்க்கம் கண்டுபிடிக்கப்படவில்லை. இதனல், பாரசீக மன்னன் தாராஷாஹ்வுக்கு நம்பிக்கையின்மை ஏற்பட்டது. தனது எண்ணங்களெல்லாம் நிறைவேறுவதற்கு வழியில்லாமற் போய்விட்டனவே என்ற துக்கமுண்டாயிற்று. தாராவின் வீரர்கள் கோட்டைச் சுவரின் அண்டையில் வந்தால் பாபிலோனியர்கள் சுவரின்மீது உயர இருந்துக்கொண்டு நன்கு குறிவைத்து அம்பாலும் கவண்டி கற்களாலும் பாரசீகர்களைத் தாக்கி அவர்களை விலகிப்போகும்படி செய்துகொண்டிருந்தனர். கோட்டைச்சுவருக்குமேலில் அவர்கள் பத்திரமான இடத்தில் மறைந்துகொண்டிருந்ததால் பாரசீகர்கள் பாபிலோனியரைக் குறிவைத்தடிக்க முடியவில்லை. இதனல், பாரசீகர்கள் தாம் அதிக நஷ்டத்திற்குள்ளாக வேண்டியதிருந்தது.

எனவே, பாரசீகப் போர்வீரர்களின் போர்த்தலைவனன ஜுபைரோஸ் என்பவன் தோல்வியுற்று ஓடவோ வெற்றிக்கொடி நாட்டி வாகை சூடவோ முடியாதவனகி இருந்தனன். எனவே இந்நிலைமையைப் பரிகரிப்பதற்கு யாது வழி என்பதைப்பற்றிச் சிந்திக்கலானன். ஒருநாள் தனக்கென்றேற்படுத்தப் பட்டுள்ள தனி இடத்திற்குச் சென்று வெகு தூரத்திற்கு சிந்தனை செய்தான். வெகு நேரம்வரை அப்புறம் யோசனை செய்தபின் கூரிய வாளை எடுத்தான்.........................

மறுநாள் பாரசீகப் படையின் பிரதம தளகர்த்தனன ஜுபைரோஸ் தனது மன்னன் தாராஷாஹ்வைப் பேட்டி காணுவதற்காகச் சென்றான். சக்கிரவர்த்தியின் கூடாரத்திற்குள் தளகர்த்தன் சென்றவுடன், அவனுடைய முகத்தைப் பார்த்ததும் மன்னன் பயத்தால் துடிதுடித்தான். பேசுவதற்கு நாவெழவுமில்லை கொஞ்ச நேரத்திற்குப்பின்,

தளகர்த்தன் :—சக்கரவர்த்திக்கு க்ஷேமமும் வாழ்வும் உண்டாகுக.

தாரா :—ஜுபைரோஸ்! இதென்ன விபரீதம். காதையும் மூக்கையும் வெட்டி உனது முகத்தைப் பங்கஞ் செய்தது யார்?

தள :—எனது அரசே! யான்தான்...........

தா :—அப்படியா? உனக்கென்ன பயித்தியமா? நீ ஏன் இப்படிச் செய்தாய்?

தள :—இல்லை. அரசே! யான் பயித்தியம் பிடித்தவனன்று.

தா :—அப்படியாயின் உனது முகத்தை நீ ஏன் கெடுத்துக்கொண்டனை?

தள :—ஒரு காரியத்தின் நிமித்தமாக.

தா :—அதென்ன காரியம்?

தள :—தங்களுக்கு ஊழியம் செய்வதும் தங்களது பாதள பாதாரவிந்தத்திற்கு எனது உயிரை அர்ப்பணம் செய்வதும்தான்.

தா :—நமக்கு ஊழியம் செய்யவா? மூக்கையும் காதையும் வெட்டிக்கொள்வதற்கும் நமக்கு ஊழியம் செய்வதற்கும் என்ன சம்மந்தம்?

தள :—ஆம்! எனது தலைவ! தங்களுக்கு ஊழியம் செய்யவேதான். ஆனல், எனது நாவிலிருந்துவரும் ஒரு ஆச்சரியமான கதையைக் கேட்டுக்கொள்ளுங்கள் என்றுகூறி தளகர்த்தன் ஜுபைரோஸ்தாராஷாஹ்விடம் ஏதோ சிலவிஷயங்கள்கூறியதுடன் மூக்கையும் காதையும் வெட்டிக்கொண்டதற்குரிய காரணத்தையும் விபரமாகக் கூறினன்.

ஜபைரோஸ் கூறியவைகளைச் செவிமடுத்த தாராஷாஹ் தனது ஆசனத்தைவிட்டெழுந்து வந்து அவனைக்கட்டித்தழுவி, அவனது நெற்றியில் முத்தமிட்டு அவனது ராஜவிசுவாசத்திற்கு மெச்சினன். ஆயினும் அவன் தனது காதையும் மூக்கையும் வெட்டிக்கொண்டதற்காக வருந்திக் கண்ணீர் வடித்தனன்.

பிறகு, ஜுபைரோஸ் அரச சமூகத்தைவிட்டு அகன்றனன். அரசனைவிட்டுப் பிரியும்போது மறுபடியும் அத்தளகர்த்தன் அரசனைநோக்கி "எனது நெற்றியும் தங்களதுவதனமும்! பிரகா

சத்தின்றப்பின்மீது பிரமாணம் செய்கிறேன். தாங்களளித்த இந்த கௌரவம் இவ்வுலகம் முடியும்வரை இருந்துவரும்" என்றுகூறி மறுபடியும் இரண்டாம் முறையாக ஜுபை ரோஸ் பூமிக்கு முத்தமிட்டு அரசகூடாரத்தை விட்டு வெளியில் வந்தனன்.

இப்பொழுது, ஜுபைரோஸின் முகம் சந் தோஷத்தால் பிரகாசித்துக்கொண்டிருந்தது. மனோ உறுதி, துணிச்சல் ஆகியவைகளுக்குரிய அடையாளங்கள் அவனது முகத்திலிருந்து தோன்றின. ஆனால், பாரசீக மன்னன் தாரா ஷாஹ் தனது அரியணையில் அமர்ந்த வண்ணம் "இவர் உண்மையுள்ள தளகர்த்தர் என்பதிற் சந்தேகமில்லை. யதார்த்தமாகவே நமக்காக வேண்டி இவர் மகத்தான தியாகம் செய்திருக் கிறார். இவ்விதமான தியாகம் வேறெவரும் செய்யவில்லை" என்று தனது மனத்திற்குள் ளாகக் கூறிக்கொண்டிருந்தான்.

ஆதவன் தனது முகத்தை குணதிசையில் போர்வையால் மறைத்துக் கொண்டனன். இருள் பாபிலோன் நகர்முழுவதையும் தனது மடியினுள் எடுத்துக்கொண்டது. குதிரை களின் காலடிச் சப்தங்களெல்லாம் அடங்கி விட்டன. பாபிலோனின் நான்கு சுவர்களி லும் நிசப்தமும் மௌனமும் ஏற்பட்டன. நரி கள் வெளியேறி அன்றுபகற் பொழுதில் யுத் தத்தில் மாண்ட வீரர்களின் சவங்களைத் தின்ன வாரம்பித்தன. எலும்புகளை விட்டு விட்டு சிப்பாய்களின் தசைகளை மட்டிலும் அவைகள் கீரிக்கிளித்தெடுக்கத் தொடங்கின.

ஒருவர் நகரச்சுவரின் தலைவாசலைத் தட்டி "கதவைத் திரங்கள்" என்று சப்தமிட்டுக் கூறினார்.

காவற்காரன் :—தலை வாசலில் யார்?

ஒரு சப்தம் :—அநீதி செய்யப்பட்ட ஒரு வன். கஷ்டப்படுத்தப்பட்ட ஒருவன்.

காவற்காரன் :—எங்கிருந்து வந்தனை? திரும்பச் சென்றுவிடு. இல்லையேல்! நினது நெஞ்சகத்தை எனது அம்பு பிளந்துவிடும்.

சப்தம் :—தலைவாசலைத் திறந்துவிடுங்கள். யான் பாரசீகச் சைனியத்தின் தளகர்த்தன்.

இதுபோழ்து சந்திரன் தனது தண்கதிர் களைப் பரப்பிக்கொண்டெழுந்தனன். அவனது வெண்கலை பூமியின்மீது வெள்ளைப் புடவையை விரித்ததுபோலிருந்தது. கோட்டைச் சுவர்க் காவற்காரன் இப்பிரகாசத்தின் உதவியால் ஒரு மனிதனைக் கண்டனன். அவனது காதும் மூக் கும் அறுபட்டிருந்தன. அவனது முகத்தி லிருந்து ரத்தம் வடிந்துகொண்டிருந்தது. இதனைப் பார்த்தவுடன் காவற்காரன் தனது தலைவனிடம் ஓடோடியும் வந்து ஆச்சரியமான இவ்விருத்தாந்தத்தைக் கூறினன். காவற் படைத் தலைவன் தலைவாயலண்டை வந்து வெளியில் நிற்கும் மனிதனைக் கூர்ந்து கவனித் தனன். உண்மையிலே காதும் மூக்கும் அறு பட்டிருப்பதைப் பார்த்து, கதவைத் திறந்து விட்டனன். தலைவாசலைத் திறந்ததும் அக் காவற் படைத்தலைவன் புதிதாக வந்த மனிதர் மூக்கும் காதும் அறுக்கப்பட்டிருப்பதைப் பார்த்து உண்மையிலேயே அனுதாபம் காட்டி னன்.

காவற்படைத் தலைவன் :—நீர் ஜுபை ரோஸா? பாரசீகப் படையின் பிரதம தள கர்த்தனான ஜுபைரோஸா?

தளகர்த்தன் :—ஆம்! வீர! யான் ஜுபை ரோஸ் தான். ஜுபை ரோஸ்! பாரசீகர் படை யின் தலைவன்.

கா. த :—நீங்கள் இந்த இடத்திற்கு எதற் காக? எப்படி வந்தீர்கள்?

தளகர்த்தன் :—உங்களுடன் சேர்ந்து எஞ் சிய காலத்தைக் கழிக்கலாம் என்று வந்தேன்.

கா. த :—எவ்விதமாக? நீங்கள் எங்களுடன் எவ்விதம் சேர்ந்துக்கொள்ள முடியும்?

தளகர்த்தன் :—ஆம்! வீர! உங்களுடன் சேர்ந்துகொள்வதற்காகவே வந்தனன்.

கா. த :—எப்படி? எதற்காக? இது மிகவும் புதுமையான விஷயம். தெய்வத்தின்மீது பிரமாணமாக, இது மிகவும் ஆச்சரியப்படத் தக்க விஷயமாகும்.

தளகர்த்தன் :—நான் உனது கொடும்பகைவ னிடம் பழிவாங்குவதற்காகவே இங்கு வந்திருக் கிறேன்.

கா. த :—உனது பகைவன் யாவன்? அவன் எங்கிருக்கிறான்.

தளகர்த்தன் :—எனது பகைவன் பார சீக மன்னனான தாராஷாஹ்.

கா. த :—பாரசீக மன்னனா உனது பகை வன்? அவனிடம் பழிவாங்க வேண்டுமென்று நீர் எங்ஙனம் நினைக்கமுடியும்? அவனே உமது சக்கிரவர்த்தியாயிற்றே.

தளகர்த்தன் :—அவன் எனது சக்கிரவர்த்தியாக இருந்திருக்கலாம். அப்படி இருந்தகாலம் சென்றுவிட்டது. இப்பொழுதோ அவன் எனது பகைவன். அதிலும் கொடும்பகைவன். அபாயகரமான பகைவன்.

கா. த :—அவன் உமக்கு என்ன கெடுதல் செய்தான்?

தளகர்த்தன் :—எனது முகத்தைத் தாங்கள் பார்க்கவில்லையா? எவ்விதமாக எனது முகம் அலங்கோலப் படுத்தப்பட்டிருக்கிறது என்பதைக் கவனியுங்கள்?

கா. த :—அவன்தானு? உமது முகத்தைக் கெடுத்தவன்?

தளகர்த்தன் :—ஆம்! பிரகாசத்தின் தேசவன் மீது சத்தியமாக அவன்றான்.

கா. த :—ஏன்?

தளகர்த்தன் :—யான் கோழையன் என்பதாக என்மீது குற்றம் சுமத்தினுன். இன்னும் யான் பகைவர்களுடன் அதாவது உங்களுடன் சேர்ந்துகொண்டேன் என்றும் குற்றஞ் சாட்டினுன்.

கா. த :—அநீதி செய்யப்பட்ட தளகர்த்த! உமக்கு யாங்கள் அபயமளிக்கின்றோம். அபயம் கிடைக்காதவருக்கு பாபிலோன் அபயமளிக்குமிடமாக இருக்கிறது.

தளகர்த்தன் :—ஜுபைரோஸ் இவ்வுத்தரவு பெற்றவுடன் நகருக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனன். அவனை ஓரிடத்தில் அழைத்துக் கொண்டுபோய் அன்ன ஆகார மளித்தனர். சாராய வகைகளும் கொடுக்கப்பட்டன. மது வகைகளையும் மாமிச வகைகளையும் அருந்திய பின் ஒரு வயித்தியர் அத்தளகர்த்தனுடைய புண்களைக் கழுவி ரத்த ஓட்டத்தை நிறுத்திக் காலைவரை நித்திரை செய்துகொள்ளும்படிச் செய்தார்.

பொழுது புலர்ந்தவுடன் பாபிலோன் பட்டணத்து ராணுவப் பிரதம தளகர்த்தன் யுத்த சபையைக் கூட்டி பாரசீகப் படையின் தளகர்த்தனை ஜுபைரோலை ஆஜர் செய்வித்துப் பற்பலவிதமான கேள்விகளைக் கேட்டனன். எல்லாக் கேள்விகளுக்கும் ஜுபைரோஸ் சாவதானமாகவும் திருப்தியளிக்கத் தக்கதாகவும் பதிற் கூறினுன். இவன் உண்மையானவன் என்பதற்கு இவனது மூக்கும் காதும் அறுபட்டிருப்பது பெரும் சாக்ஷிகளாக இருந்தன. அத்துடன் அவன் கொடுத்த மறுமொழிகளும் திருப்தியளிக்கக் கூடியனவாயிருந்தன. ஆகவே, யுத்த சபை பாரசீக தளகர்த்தனை ஜுபைரோஸை ஒற்றன் என்ற குற்றச்சாட்டை விட்டு விடுதலை யளித்ததுடன் அவ்வூரில் குடியிருந்துகொள்ளவும் அனுமதியளித்தது.

இங்ஙனம் சின்னுட் சென்றபின் பாபிலோன் படையின் பிரதம அதிகாரியைப் பேட்டிகாண ஜுபைரோஸ் விரும்பினன். அவனது விருப்பத்திற்கேற்ப பேட்டி கிடைத்தது. இருவருக்கு மிடையில் நடந்த சம்பாஷணையின் போழ்து, பாபிலோன் பிரதம அதிகாரியினிடம்,

ஜுபைரோஸ் :—நாளை இரவு 9 மணிக்கு...

....

பா. தளகர்த்தன் :—நாளை 9 மணிக்கு என்ன நடைபெறும்?

ஜுபைரோஸ் :—பாரசீகப் படையினரில் 10 ஆயிரம் பேர் நகரத்தின் கீழ் வாசலண்டையில் உங்களுடன் யுத்தம் செய்ய வருவார்கள்.

பா. த :—பிறகு என்ன நிகழும்?

ஜுபைரோஸ் :—நீங்கள் அவர்களை எதிர்த்துத் தாக்கினுல், பலமாகப் போர் செய்தால் அவர்கள் திரும்பச் செல்வது அவர்களுக்குக் கஷ்டமாகி விடும். அவர்களனைவரும் உங்கள் கையில் மடிந்து விடுவர்.

பா. த :—(அலக்ஷியத்துடன்) பாரசீகப்பட்டாளத்துடன் கிழக்குத் தலை வாசலுக்கு வெளியில் யுத்தம் நடக்குமென்பது உமக்கு எப்படித் தெரியும்?

ஜுபைரோஸ் :—(கோபத்துடன்) சில நாட்களுக்கு முன்னர் நான் அவர்களுக்குத் தலைவனுகவும் படைத்தளகர்த்தனுகவு மிருக்கவில்லையா? எனது உண்மையிலும் சிநேகத்திலும் தங்களுக்கு இன்னமுமா சந்தேகமிருக்கிறது.

ஜுபைரோஸின் இந்த அபிமானத்திற்காக பாபிலோன் தளகர்த்தன் அவனைப் பாராட்டி அவனுக்கு நன்றியும் செலுத்தினன். குறிப்பிட்ட காலத்தில் பாபிலோனியரின் படை கிழக்குத் தலை வாசலுக்குச் சென்று பாரசீகப் பட்டாளங்கள் வந்திருக்கின்றனவா என்று பார்த்தது. உண்மையாகவே, பாரசீகப்படை அங்கு வந்திருப்பதையும் அவர்களிடம் வாளாயுதங்களைத் தவிர வேறு யுத்தக் கருவிகளில்

லாமலிருப்பதையுங் கண்டனர். ஆகவே, பாபிலோனியர்கள் அவர்களை எதிர்த்து வாள் கொண்டு யுத்தம் செய்தனர். ஏராளமான ஜனங்களை எமலோகத்திற் கனுப்பிவிட்டு எஞ்சியவர்களைக் கைதிகளாகப் பிடித்துக்கொண்டனர்.

இவ்வெற்றிச் செய்தி நகரத்தில் பரவிய போது ஜுபைரோஸின் உண்மையின் பேரில் இருந்த அற்ப சொற்ப சந்தேகம்கூட எல்லோருக்கும் எடுபட்டுவிட்டது. உண்மையில் பாரசீக மன்னனிடம் பழி வாங்கவே ஜுபைரோஸ் விரும்புகிறார் என்று எல்லாரும் உறுதி கொண்டனர். இதனால் ஜுபைரோஸுக்குப் பாபிலோனில் அதிக மதிப்பும் செல்வாக்கும் ஏற்பட்டது. கிழக்கு அரணைப் பாதுகாக்கும் பட்டாளத்திற்கும் அவனைத் தலைவனாகவும் நியமித்தனர்.

ஒருவாரம் கழிந்தது. ஜுபைரோஸ் மறுபடியும் ஒருமுறை பாபிலோனியரின் பிரதம தளகர்த்தரைப் பேட்டி கண்டனன். தனிமையில் இரகசியச் சம்பாஷணை செய்தனன். இன்றிரவு பாரசீகர்கள் தெற்கு அரணிலுள்ள பலஹீனமான பகுதியில் இராக் கொள்ளையடிப்பர். அவர்கள் சுவருக்குப் பக்கத்தில் வந்தால் அவர்களை நீங்கள் எதிர்த்து யுத்தம் செய்ய வேண்டும். எல்லோரையும் வாளுக்கிரையாக்கிவிடல் வேண்டும்" என்று கூறினன்.

இம்முறை ஜுபைரோஸ் கூறுபவைகளைப் பற்றிச் சந்தேகம் உண்டாகுவதற்கும் இடமிருக்குமா? ஒருவருக்கும் ஐயமோ சந்தேகமோ உண்டாகவில்லை. தளகர்த்தர் தமது படையினரை நோக்கி கோட்டையின் தெற்கு வாசலண்டை ஒன்று கூடும்படி கட்டளையிட்டனன். போர்வீரர்கள் உடனே குறித்த இடம் போய்ச் சேர்ந்தனர். பாரசீகர்கள் வரும் சமயத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தனர்.

பாதி இரவு கழிந்தது. பாரசீகப்படை தக்ஷணத்தில் வாயிலினண்டையில் நடமாட்டம் செய்யத் தொடங்கிற்று. இந்த முறையிலும் இவர்களிடம் வாளாயுதத்தைத் தவிர வேறொன்று மிருக்கவில்லை. பாபிலோனியர்களில் ஓராயிரம் வாள்வீரர் முன்சென்று எல்லாப் படையினரையும் சூழ்ந்துகொண்டு வெட்டி அதம் செய்தனர். அவர்களில் ஒரு சிப்பாயைத் தவிர்த்து வேறுயாரும் உயிர் தப்பவில்லை. பக்கத்திலிருந்த பாரசீகப் பட்டாளத்தின் அரணில் ஏராளமான போர்வீரர்களிருந்தும் ஒரு சிறு படையும் கூட பாரசீகர்களுக்கு உதவிக்கு வராதது பெரும் ஆச்சரியமான விஷயமாகும். இதுதான் ஜுபைரோஸும் தாராஷாஹ்வும் அன்று தனிமையில் சந்தித்து பேசியதன் இரகசியமாகும். இதனைப் பற்றி யூகித்துணர்ந்துகொள்ள பாபிலோனியரின் தளகர்த்தருக்கு நினைப்பு வரவில்லை.

விடியற் காலத்திலேயே பாபிலோனியரின் பட்டாளம் வெற்றிக்கொடியை உயர்த்திக் கொண்டு திரும்பவந்தபோது பாபிலோனியருக்கேற்பட்ட ஆனந்தத்திற்கு அளவே இல்லை. ஜுபைரோஸின் உண்மையைப் பற்றியே எங்கும் பேச்சாக இருந்தது. ஜனங்களெல்லோரும் அவரைத் தலைமீது தூக்கிக்கொண்டு கொண்டாடினர். இறுதியாகப்பாபிலோனியப்படைக்கு அவரைப் பிரதம தளகர்த்தராகவும் தெரிந்தெடுத்தனர். இந்த நியமனத்தைச் சிலர் ஆக்ஷேபித்தனராயினும் பெரும்பாலான அபிப்பிராயத்திற்கு முன் சிலரது ஆக்ஷேபனை நிற்க முடியுமா? இறுதியாக ஜுபைரோஸ் பாபிலோனியப்படை தளகர்த்தனாயினன்.

இப்பொழுது பாபிலோனியர்களின் படைகளுக்கு ஜுபைரோஸ் சர்வாதிகாரியாயினன். அவருடைய கண் ஜாடையின்படி ஒவ்வொரு சிப்பாஹியும் தனது உயிரை தத்தம் செய்வதற்குத் தயாராக இருந்தனன். இனியுள்ள யுத்தங்களில் பாரசீகர்களின் சக்தி பாரிலொழிந்துவிடும். ஜுபைரோஸின் உதவியால் பாபிலோனின் முன்னேற்றம் என்ற நக்ஷத்திரம் நன்கு பிரகாசிக்குமென்றும் எல்லோரும் உறுதி கொண்டனர். எனவே ஜுபைரோஸ் நித்தம் நித்தம் புதுப்புது ராணுவ உத்தரவுகளைப் பிறப்பிக்கலாயினன். இறுதி யுத்தம் செய்வதற்காகத் தமது போர்வீரர்களெல்லோரும் தயாராகிவிட வேண்டும் என்று கட்டளையிட்டனன்.

ஒருநாள் ஜுபைரோஸ், தனது பாபிலோனியப்படைகள் அனைத்தும் நாளையத்தினம் தங்களது தலைவிதியை நிர்ணயம் செய்துவிடத்தக்க கடைசியுத்தம் தொடங்கவேண்டியதாக இருக்கிறது. ஆதலின், யாவருக்கும் இன்று விடுமுறை யளிக்கப்படுகிறது. என்றுகூறி அவர்களுக்கு வேண்டிய மதுபானங்களையும் உணவுப் பதார்த்தங்களையும் கொடுக்கும்படி கட்டளையிட்டனன். போர்வீரர்களெல்லோரும் நன்றாய் உண்டுவிட்டு வேடிக்கையிலும், கூத்திலும் மூழ்கிஇருந்தனர். அன்று பாதிஇரவு கழிந்த

வுடன் தளகர்த்தனுன ஜுபைரோஸ் பாபிலோன் பட்டணத்துத் தலைவாசல்களைப் பாரசீகப் போர்வீரர்களுக்காகத் திறந்து விட்டுவிட்டான்.

இனி நடந்ததென்ன ? பாரசிகர்களின் பட்டாளங்கள் கரைபுரண்டோடும் பிரவாகத்தைப் போல் எல்லாத் தலைவாசல்களின்வழியாகவும் மடமடவென்று நகருக்குள் பிரவேசித்தன. வாளாயுதங்கள் பாபிலோனியர்களின் ரத்தத்தால் புரண்டு அவைகளிலிருந்து ரத்த ஒழுக்கெடுத்தவண்ணமிருந்தன. பாபிலோன்நகர் முழுவதிலும் தெருக்கள், பஜார்கள், வீடுகள் முதலிய எல்லா இடங்களிலும் தரை ரத்தத்தால் புரண்டது.

பாபிலுக்கு அந்தோ ! பாபிலோனியர்களுக்கு அச்சோ!! நகரின் நாலுபக்கங்களிலும் கூக்குரல் கிளம்பிற்று. தெருக்கள், சந்துகள், மூலை முடுக்குகள் எங்கும் பிணக்குவியலாகவே இருந்தது.

இரவின் இருள்நீங்க ஆரம்பித்தது, கதிரவன் உதயமாகும் கீழ்த்திசையிலிருந்து பிரகாசத்தின் தேவனுகிய ஞாயிறு தனது வெண்கதிருடன் வெற்றிச்செய்தியைக்கொண்டு வெளிக்கிளம்பினன். பாரசிக சக்கரவர்த்தியான தாரா ஷாஹ் வாகைமாலையுடன் நகருக்குள் பிரவேசித்தனன். அவனது பிரதம தளகர்த்தனுன ஜுபைரோஸ்முன்சென்று வரவேற்று பூமியை முத்தமிட்டனன்.

அரசே! எஜமானே !! யான் உண்மையுடன் தங்களுக்குத் தொண்டுபுரிபவனல்லனே? என்றனன்.

"பாரான்"

ஹிபாஜத்தின் சேவை

இந்தமிழை மொழியாகக் கொண்ட நந்நாட்டில் சில ஆண்டுகளாக இயற்கை மதமான இஸ்லாத்திற்கு கலங்கமேற்படுத்தும் நாட்டங்கொண்டு புறமதஸ்தர்களும், புதிய மதவாதிகளும், நாகரீகம் படைத்த நவீனக் கொள்கையை விரும்பியோருமான, பல கூட்டத்தினர் சந்திரனெளியே என்ன இஸ்லாத்தின் உத்தம கொள்கைகளின்பால், தங்கள் துர்ப்பிரசாரம்,பொய்ப் பிரகடனங்கள் போன்ற அதர்ம பிரயத்தனங்களால், கலங்கமிட, கங்கணங் கட்டிவந்த காலே, சத்திய மத உயர் தத்துவ கொள்கைகளைத் துலக்கி வெளியிடுவான் வேண்டி இற்றைக்கு ஆறு வருடங்களுக்கு முன், பலமத அறிஞர்கள் கூடி அமையப்பெற்ற சென்னை ஹி. இ. சங்கத்தின் பணியும், அதன் "ஆர்கனக" விளங்கும் ஹி. இ. மாசிகையின் ஊழியத்தையும், தென்னடு என்றும் மறக்க முடியாதென்பது மெய்.

மச்சம் வரும் தருணத்தை எதிர்பார்த்திருக்கும் கொக்கைப் போன்று, புறமத வாதிகள் முஸ்லிம்களின் வித்யா குறைவையும், பிரசாரயின்மையையும், அஜாக்கிரதையும், தருணமாகக் கண்டு, தங்கள் கபட சித்தங்களில் மறைத்து வைத்திருந்த ஆபாசக் கொடிய ஆயுதங்களைக்கொண்டு, சத்திய சக்கரவர்த்தியான இஸ்லாத்தையும், அதன் உத்தம மெய்வீரர்களான போதனைகளையும் நீசத்தனமாக எதிர்த்துத் தாக்க எத்தனித்தசமயங்களிலும்,

நவீன கலாவை தெய்வமாகவும், நாகரீகத்தை குருவாகவும், மனத்தை மதமாகவும் கொண்டு, புராதன மதத்தையும், புராதனக்கொள்கைகளையும் எள்ளி நகையாடி, நாகரீக மயமான சில நூதன முஸ்லிம்மாக்கள், இஸ்லாத்தின் மூலமும், புராதனமுமான பல முக்கிய கொள்கைகளை விசுவாசிக்காது தங்கள் மனமிழுத்துச் செல்லும் வழியே, நேர்வழியென ஈமான் கொண்டும், அப்புத்து வழியே விசுவாசிக்கத் தக்க வழியென, தாங்கள் மனங்கொண்டிருக்கும் தவற்று நம்பிக்கையை நிழ்கலங்க மனங்களைப் பூண்டிருந்த பாமர முஸ்லிம்களிடை வெகு ஆடம்பரமாகப் பிரசாரங்களும், பிரகடனங்களும் செய்துவந்த தருணத்திலும்,

ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கமும் இம்மாசிகையும், அத்தகையோருக்கு தக்க ஆப்புகள் கொடுத்தும், அழுக்காறு ததும்பிய, புறமதத்தவரின் ஐம்பங்களும், நவநாகரீகப் பார்ட்டியாரின் நாட்டங்களும், நிறைவேரா வண்ணம், தக்க முறையில் இஸ்லாத்தின் உத்

தம தத்துவங்களேயும், சத்திய சித்தாந்தங்களே யும் பாமர மக்களிடை நேர்மையான முறை யில் வெளியிட்டும், உயர்திரு இஸ்லாத்தின், புராதன உத்தமக் கொள்கைகள் உலகோருக்கு என்றும் எக்காலமும் தகுந்த அனுஷ்டானப் பூஷணமேயென மதிக்கத்தக்க விதமாக அஃதை பிரகடனப்படுத்தியும்,

உலகமக்கள் மோட்ச மெய்வான் வேண்டி இப்பூவுலகின்கண் மதம் ஒன்று உண்டா வெனில், அஃது "இஸ்லாம்" என்னும் சத்திய மதமே என நிரூபித்தும், சத்திய சேவை செய்துவரும் ஹி. இ. மாசிகை என்றும் போற்றத்தக்கதாகும்.

தென்னுட்டில் தோன்றுதொட்டு இற்றை வரை, உயரிய தத்துவங்களோடு இஸ்லாத்தின் சத்திய சித்தாந்தங்களே தகுந்த முறையில், நேர் மையாய்ப் பிரகடனப்படுத்தி வந்த மாசிகை களில், ஹி. இ. மாசிகையானது முதற்றரமான தென்பது கரஆவுலிங்கமாம்.

ஹி. இ. மாசிகையானது, முதற்றர முஸ் லிம் மாசிகையாக இருப்பதோடு, அதன் அனந்த கட்டுரைகள், சிறந்த மதக் கலா வல்லு நர்களான உலமாக்களால் எழுதப்பட்டும், உயர் தத்துவ சத்திய மதப் பிரகடனங்கள் ததும்பியதாயுமிருப்பதால், அவை மிக்க உயர் ஸ்திதியைப் பெற்றிருக்கின்ற தென்பதும் வெளிப்படை.

தென்னுட்டில் ஹி. இ. சங்கமும், அதன் மாசிகையும், துலங்க ஆரம்பித்தது முதல், பிற மத சூழ்ச்சிப் பிரசாரகர்களும், நவீன கொள்கை பூண்ட நூதனப் பிரகடர்களும் பீதிகொண்டு ஒடுங்கி, தங்கள் "ஜம்பங்கள்" பலியாதென, பதுங்கி விட்டார்களென்னும் உண்மையை பல வருடங்களாக தென்னுட்டின் நிலைமைகளே நன்கு ஆராய்ந்து வந்த, கனவான் கள் உணர்ந்து கொள்வார்களென்பது உறுதி.

ஒவ்வொரு காலத்திலும், சத்தியமத வந்தர் களுக்கு புளுக்கங் கொண்ட, புறமதவாதிகளா லும், சிற்றறிவு நவீனர்களாலும், அனந்தவித சங்கடங்கள் ஏற்படுவது சகஜம்.

ஆனல் அத்தருணத்தில் அவைகளுக்குத் தக்க வைரியும் ஒன்று ஏற்பட்டு, அவ்வதர்ம சங்கடங்களேயகற்றி, கடாசப்பட்டு, சத்தியமத மும், சத்திய மதவாதிகளுமே, உலகில் ஓங் கித்துலங்கி உச்சத்தில் நின்றிலங்கி வருவார்கள் என்பதும் உண்மை.

இவ்வண்ணமே நமது நாட்டில், புறமதப் பொய்ப் பிரசாரர்கள் மலிந்தும், நாகரீக நவீனி கள், மனமதக்காரர்கள் மிளிர்ந்தும், அதர்மப் பிரசாரம் புரிந்துவரும் இக்கால் தெய்வாரு ளால், மதக்கலா வல்லுனர் கூட்டத்தினரால் நடத்தப்பட்டுவரும் இம்மாசிகையானது, நமது நாட்டிற்கோர் மணிவிளக்கே என்ன, இலங்கி வருவது நமது நாட்டு முஸ்லிம்களின் பாக்கி யமே எனலாம்.

அருந்தருணத்தில் இஸ்லாத்தின் சேவையை யும், முஸ்லிம்களின் ஊழியத்தையும் சிரமேற் கொண்டு, ஹி. இ. சங்கத்தை நடாத்திவரும் பொது ஊழிய பெருந்தகை, உலமாக்கள் குழாத்தினருக்கு நந் தென்னுட்டு முஸ்லிம்கள் நன்றிசெலுத்த கடமைப்பட்டிருப்பதோடு, ஹி. இ. மாசிகை அபிவிருத்தியடைந்து வாரப் பத்திரிகையாய்த் துலங்கி நிற்கும் விதமாய் அஃதை ஆதரித்து உதவுவது நங்காட்டு முஸ் லிம்கள் ஒவ்வொருவரின் கடமையுமாகும்.

முஸ்லிமாக அவதரித்த ஒவ்வொருவருக்கும் இஸ்லாத்திற்கு ஊழியம் செய்வது கடமையான தால், தனிமையாய் ஊழியஞ் செய்யத் தகுதி யில்லாது போனுலும் ஊழியஞ்செய்வோரை ஆதரித்து உதவிபுரிவதும் தக்க ஊழியமாகும்.

இக்கால், உலகின்கண் பொறுமையற்று, மெய்மனம் படைத்த அனந்த அறிஞர்கள் உலகமாந்தர்கள் உய்த்தெழுந்து, மோட்சகதி பெறும் சத்தியமதம் இஸ்லாம் என்னும் ஒரே மதந்தான் என தீர்மானித்து அதன் தாசர்க ளாக ஆகியும், ஆகிக்கொண்டும், ஆகவும் தயா ராக இருந்துவரும் இந்நற்றருணத்தில் நமது நாட்டில் இஷா அத்தே இஸ்லாம் தொண்டு புரிய, ஹி. இ. சங்கத்தைவிட வேறொரு இஸ் லாம் ஊழியசங்கத்தை நாம் காணமுடியாது.

இச்சங்கத்தில் இஸ்லாமிய உயர்ந்த தத்துவங் களே தகுந்தமுறையில் 'பிரகடனப்படுத்தும் அனந்த உலமாக்கள் சேர்ந்திருப்பதால் இது போதிய வலுவும் பெற்றிருக்கிற தென்பது இயம்புதற்பாலன்று.

கீழ்ஜாதிமக்கள் தீண்டக்கூடாது என ஹிந் துக்களால் ஒதுக்கித்தள்ளி வைக்கப்பட்டிருக் கும் நமதுநாட்டு எளிய பஞ்சமர்களுக்கு, சமத் துவமும், சகோதரத்துவமும், உயர்பதவியை யும், அளிக்கும் இஸ்லாம் மதமே சத்தியமத மெனவும், மனுக்கள் மோட்சமடையுஞ் சர்வ சாதனங்களும் இஸ்லாமதத்திலேயே அமைந்

திருக்கின்றதென்னும் உண்மையையும், எடுத்துப்போதித்து தாழ்த்தப்பட்டுக்கிடக்கும் அக்குழாத்தினரை உயர்நிலையில் தூக்கிவிடுவது நமதுநாட்டு ஒவ்வொரு முஸ்லிம்களின் முதற் கடமையானதால் அச்சேவையைத் தொழிலாகக் கொண்ட, ஹி.இ. சங்கத்திற்கு, பொருள், தொண்டர்களால் உதவியளித்து ஆதரித்து அஃதை உற்சாகமூட்டி தொண்டுசெய்ய ஊக்கமூட்டுவது நமது பிரதானப் பணியாகும்.

முக்கியமாய் 8 கோடி தீண்டாதாரின் தலைவர்கள் அயோலாக் கான்பரன்ஸில் ஹிந்து மதத்தைத் துறந்துவிடுவதெனத் தீர்மானித்து அவ்வகுப்பினர் உலகில் சத்தியமான வேறொரு மதத்தைத்தேடிவரும் இப்போது, இந்தியாவின் பலநாட்டாரும் தத்தந்நாட்டில் இஷாஅத்தே இஸ்லாம் தொண்டை வெகு மும்மரமாகச் செய்துவருகின்றனர் என்பது கண்கூடு

அவ்வாறு நமதுநாட்டு முஸ்லிம்களும், அஜாக்கிரதையாயிராமல் இஸ்லாத்திற்கு ஊழியஞ் செய்யமுன்வந்து கங்கணங் கட்டிக்கொண்டு, இஷாஅத் வேலையில் ஈடுபட்டுழைக்கும் சங்கங்களுடன் ஒற்றுமைத்தும் உதவிகள் புரிதல் மிகமுக்கியமாகும்.

பொற்போன்ற இந்நற்றருணத்தை சமயமாகக்கண்டு ஹி. இ. சங்கத்தார்கள் இஸ்லாம் பிரசாரம் செய்ய கங்கணங் கட்டிக்கொண்டு, தீவிரச் சேவைசெய்துவரவேண்டுமெனவும், முஸ்லிம்கள் இச்சங்கத்தை முழுதும் ஆதரித்து உதவிபுரிந்தும், இஸ்லாம் ஊழியம் செய்ய ஆர்வங்கொள்ள வேண்டு மென்பதும் எமது கோரிக்கை.

மனுக்கோடிகள் மோட்சமடைவான்வேண்டி, உத்தம சாதனமாக சத்திய இஸ்லாம்மதத்தை அருளிய சாட்சாத் பரனும், கருணாகரனுமான அல்லாஹ் (ஜல்) ஹி. இ. சங்கத்திற்கும், மாசிகைக்கும் சத்தியபிரசாரஞ்செய்யும் ஆற்றலையும் வல்லமையும்கொடுத்து, இவைகளின் சேவையின் பொருட்டால் தென்னாட்டில் இஸ்லாம் வளம்பெறுமாறு தனது திருஅருள் பாலித்தல்வேண்டும். ஆமீன்.

இஸ்லாத்தின் உண்மை தாசன்

தப்ஸீர் பிர் ராய்

(நஸ்ருல்லாகான், B. A.)

லாகூர் அஹ்மதியா சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் பஷாரத் அஹ்மது சாகிப் "அன்வாருல் குர்ஆன்" என்னும் பெயரால் வெளியிட்டிருக்கிற நூல் தற்போது எனது பார்வையில் இருந்து வருகிறது. இந்த நூலைப்பற்றிய எனது அபிப்பிராயத்தை "மதீனா" பத்திரிகையின் மதிப்புரைப் பகுதியில் வெளியிட வேண்டும் என நான் எண்ணி இருந்தேன். ஆனால், "பாரான்" பத்திரிகையில் நான் வியாசம் எழுதவேண்டும் என அதன் ஆசிரியர் எனக்குக் கட்டளையிட்டிருப்பதாலும், மதீனா பத்திரிகையில் விரிவாக எழுத இடமில்லாததாலும் அந்த நூலைப்பற்றிய எனது அபிப்பிராயத்தை "பாரானி"ல் எழுதி வெளியிட முடிவு செய்துளேன்.

புற அழகைப் பொருத்தவரை லாகூரிலுள்ள நேர்த்தியான அச்சு வேலைக்கு "அன்வாருல் குர்ஆன்" என்ற இக்கிரந்தம் நல்லதொரு முன் மாதிரியாக இருக்கிறது. அழகிய கில்ட் போடப்பட்டு பைண்டு செய்யப்பட்டுள்ளது. எழுத்தும் அச்சும் நேர்த்தியாக இருக்கின்றன. 225 பக்கங்களுக்கு அதிகமாகவுள்ளது. கிரயம் ரூ. 2. இத்தக் கிரயம் குறைவானதென்றுஞ் சொல்லமுடியாது, அதிகமான தென்றுஞ் சொல்லமுடியாது. ஆனால், ஒரு கிரந்தம் நல்லது கெட்டது என்பதை நிர்த்தாரணம் செய்வது அதனுடைய புறஅழகைப் பொருத்த விஷயமன்று. அதனுடைய அகத்தினுள் அதாவது அந்த கிரந்தத்தில் சொல்லப்பட்ட விஷயங்களுள் பிரயோஜனகரமான நன்மைகள் இருக்கின்றனவா அல்லவா என்று பார்க்க வேண்டும். அந்தோ! யான் அக்கிரந்தத்தில் 60 பக்கங்களுக்கு அதிகமாக படித்துப் பார்த்த பின்னருங்கூட இந்தக் கிரந்தத்தை எழுதி வெளியிட்டதற்காக டாக்டர் சாகிபுக்கு வாழ்த்துக் கூறுவதா அல்லது வருத்தம் தெரி

வித்துக் கொள்வதா? என்ற விஷயத்தை நிர்ணயஞ் செய்யமுடியவில்லை.

"அன்வாருல் குர்ஆன்" என்பது 30-வது ஜுஸ்உவினுடைய வியாக்யான உரை. டாக்டருடைய ஜீவியம் பொதுவாக இரண்டு அம்சங்களுள்ளதாக இருக்கிறது. ஒன்று சர்க்கார் ஊழியம். மற்றொன்று திருகுர்ஆன் ஆராய்ச்சி. 30-வது ஜுஸ்உக்கு செய்திருக்கிற அவரது இந்த வியாக்யானம் அவருடைய வாணாள் முழுவதிலும் அவர் செய்த ஆராய்ச்சியின் பலனேயாகும். இந்தக் கிரந்தத்தை ஆழ்ந்து நோக்குங்கால் இதில் "தப்ஸீர் பிர்ராய்" (தன் சுயஅபிப்பிராயத்தைக் கொண்டு வியாக்யானம் செய்தல்) என்ற விஷயத்தைத் தவிர வேறொன்றும் இதில் முக்கிய அம்சமாயில்லை.

நான் இந்தக் கிரந்தத்தில் 62 பக்கங்களையே பார்த்துள்ளேன் என்பதாகக் கூறி இருக்கின்றனன். வேத வியாக்யானி ஒருவருடைய வியாக்யானத்தின் தன்மையை உணர்ந்து கொள்வதற்கு இந்த அளவு பார்ப்பது போதுமானது. ஆகவே, டாக்டருடைய கிரந்தத்தைப்பற்றி யாம் கீழே எழுதுவது அவசரப்பட்டுச் செய்யும் வேலையாக மாட்டாது.

இந்தக் கிரந்தம் வெளியிடப்பட்ட காலத்தில் அஹ்மதியர்களின் வட்டத்தில் இதனைப் பற்றி வெகு படோடாபம் செய்யப்பட்டது. "பைகாமேஸுல்ஹு" என்ற பத்திரிகை இதனைப்பற்றி வெளியிட்ட வியாசங்களைப் பார்த்தால் திருக்குர்ஆனிலிருந்து படிப்பினைகளைத் தெரிந்துகொள்வதற்கும் திருகுர்ஆனின் அறிவுரைகளுக்கும் இந்தக் கிரந்தம் பெரும் பலம் பொருந்திய சமுத்திரம் என்ற நினைப்பும், இந்தக் கிரந்தம் திருகுர்ஆனில் சொல்லப்பட்ட இரகசியங்கள், ஆழ்ந்த கருத்துகள் ஆகியவைகளின் நதிகளை ஓடச் செய்திருக்கிறது என்ற எண்ணமும் உண்டாகும். இவ்விதமான நினைப்பின் பலனாகவே எனக்கு இந்த கிரந்தத்தைப் படிக்கவேண்டுமென்ற அவா உண்டாயிற்று. ஆனால், இதனைப் படித்துப் பார்த்தபின் எனக்கு அளவற்ற வருத்தமுண்டாயிற்று.

இந்த நூலின் ஆசிரியர் திருகுர்ஆனின் வேத வசனங்களை தற்கால நிலைமைக்கு தக்கவாறு இருப்பதாக ஒப்பிட்டுக் காண்பிப்பதற்காக அதிகப் பிரயாசை எடுத்துக்கொண்டிருப்பதே எனது வருத்தத்திற்கும் அவநம்பிக்கைக்கும் மிகவும் அதிகமான காரணமாகும். திருகுர்ஆனிலுள்ள சில வசனங்களின் கருத்துக்களைப் புரட்டியும் திரித்தும் கூறி தனது கருத்துக்களையும் நோக்கங்களையும் அடைவதில் அவர் வெற்றி பெற்றுவிட்டபோதினும், இவ்வாறு இழுத்தும் திரித்தும் கூறுவது ஒன்றே திருகுர்ஆனை அதன் அசல் நிலைமையின்மீது வைக்க வேண்டும் என்பதைத் தெளிவாக அறிவித்துக் கொண்டிருக்கிறது. திருகுர்ஆனின் முன்னறிவிப்புகளின் உருவங்களைச் சமர்ப்பிக்கும் விஷயத்தில் டாக்டர் சாகிப் சில இடங்களில் அவசியத்திற்கதிகமான பலத்தை உபயோகிக்க வேண்டியதேற்பட்டிருக்கிறது. இவ்வித பலப் பிரயோகத்தை உபயோகிப்பதை திருகுர்ஆன் வசனங்கள் அங்கீகரிக்காதபோது, அத்தகைய இடங்களில் மெதுவாக நழுவி விடுவதிலேயே தமக்குச் சௌகரியம் இருப்பதாக டாக்டர் சாகிப் கருதி இருக்கிறார்.

சில இடங்களில் டாக்டர் சாகிப் கூறியுள்ள விஷயங்கள் தவறு என்று அவைகளை நிராகரிப்பதற்கு திருகுர்ஆனிலேயே இதர இடங்களில் பிரத்தியேகமான வேத வசனங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. இக்காலத்திலுள்ள பாதிரிமார்களும் ஆரிய சமாஜிகளும் திருகுர்ஆனைப் பற்றிக் கேட்கும் ஆக்ஷேபனைகளை விட்டுத் தப்பிக்கொள்வதற்காக இவர் தாமாகவே சில விஷயங்களை உற்பத்தி செய்து கூறி இருக்கிறார். ஆனால், கிறிஸ்துவப் பாதிரிமார்களும் ஆரியசமாஜிகளும் செய்யும் ஆக்ஷேபனைகளுக்கு வேறு விதமான தோரணையில் தக்க பதில் கொடுக்கமுடியும்.

உயிருக்கு அதிக வருத்தத்தைத் தந்த மூன்றாவது விஷயம் டாக்டர் சாகிப் மிர்ஜா குலாம்அஹ்மது காதியானி ஹுஜூர் அக்ரம் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களைப் பார்க்கினும் அதிக மரியாதையும் கௌரவமும் கொடுக்கத் தகுந்தவர் என்று கருதி இருக்கிறார் என்ற முறையில் எழுதி இருப்பதேயாகும். மிர்ஜாவினுடைய பெயரை அந்தக் கிரந்தத்தில் கூறி இருக்கிற இடத்திலெல்லாம் "ஹஜ்ரத் முஜத்திதேவக்து, மிர்ஜா குலாம் அஹ்மது சாகிப் றஹ்மத்துல்லாஹி அலைஹி" என்று எழுதி இருக்கிறார். ஆனால், ஹுஜூரே அக்ரம் (ஸல்.) அவர்களது திருநாமம் எழுதப்பட்ட இடத்தில் "ஹஜ்

றத்'' என்ற பதத்தைக் கூட அதிகமாகச் சேர்க்காமல் விடப்பட்டிருக்கிறது. முஹம்மதுர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் என்று மட்டிலுமே எழுதப்பட்டிருக்கிறது. ஆனால், றஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் என்று எழுதி இருக்கிற இடத்தில் மட்டிலும் "ஹஜ்றத்'' என்ற பதம் அவசியமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. மிர்ஜாசாகிபை முஜத்தித் முஹத்தித் என்பதாகவும் ஹுஜூர்அக்ரம் (ஸல்.) அவர்களைக் கடைசி நபியென்பதாகவும் கருதுவதாக அஹ்மதியர்கள் கூறிக்கொள்கின்றனர். ஆதலின், டாக்டர் சாகிப் அடுத்த பதிப்பிலேனும் இந்தக் குறையை நிவர்த்திசெய்வார் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

நான்காவதாக டாக்டர் சாகிப் இடையிடையே சமய சந்தர்ப்பத்தையும் கூடக் கவனிக்காமல் இஸ்லாமிய உலமாக்களைத் தூற்றுவதிலும், இந்தியாவிலுள்ள தேசாபிமானிகளையும் தேசிய தலைவர்களையும் ஏளனம்செய்வதிலும் முயற்சி செய்திருக்கிறார். இது அவருடைய அந்தஸ்துகளுக்குத் தகுதியாகவுமில்லை; திருகுர்ஆனின் வியாக்யானத்திற்குச் சம்மந்தப்பட்டதுமன்று. மேலும், அவர்களைப்பற்றி அவர் கூறியுள்ள கணிப்புரைகள் உண்மையின்பேரில் அஸ்திவாரமாகவுள்ளவைகளுமன்று. இக்கிரந்தத்திலுள்ள அநேகம்குறைகளில் அவருடைய வாசகநடையும் ஒன்றாகும். அதாவது நேர்மையான உணர்ச்சியுள்ள ஒருவர் இந்தக்கிரந்தத்தைப் படிப்பாராயின் அது அவருக்குச் சுவையற்றதாகவே இருக்கும். இரண்டாம்பதிப்பில் இவைகளைச் சீர்திருத்திக்கொள்வார் என்று நம்புகிறேன்.

அன்வாருல் குர்ஆனிலுள்ள சில தவறுகள்

நான் கூறிய இவ்விஷயங்களுக்குச் சில உதாரணங்களைச் சமர்ப்பிக்கின்றேன். தப்ஸீர்பிர்ராய் அதாவது தனது சுய அபிப்பிராயத்தின்படி வியாக்யானம்செய்தல் என்பது சம்பந்தமாக எல்லாவற்றிலும் மிகவும் தெளிவாக இந்நூலாசிரியர் ஸூரத்துத்தப்ஸீருக்கு வியாக்யானம் செய்திருக்கிறார். இதில்தான் அவர் தமது சுய அபிப்பிராயத்தின் திறமையையும் வலிந்து பொருள்செய்யும் சக்தியையும் காண்பித்திருக்கிறார்.

"சூரியன்சுருட்டப்பட்டபோது, நக்ஷத்திரங்கள் மங்கியபோது, மலைகள் (அடித்துக்) கொண்டுபோகப்படும்போது, பெண்ஒட்டகைகள் (கவனிப்பாரில்லாமல்) விடப்பட்டபோது, இன்னும் (காட்டில்வாழும்) பிராணிகள் ஒன்று சேர்க்கப்படும்போது, இன்னும் சமுத்திரங்கள் (நெருப்பைப்போல்) கொதிக்கவைக்கப்பட்டபோது, இன்னும் உயிர்கள் (உடலங்களுடன்) இணைக்கப்பட்டபோது, இன்னும், இன்னும் (உயிருடன் பூமிக்குள்) புதைக்கப்பட்டவர் (களான பெண்குழந்தை)கள் "எந்தக்குற்றத்திற்காக (இம்மாதிரி) கொல்லப்பட்டார்கள் என்று கேட்கப்பட்டபோது, இன்னும் (சிரியைகள் எழுதப்பட்ட) பட்டோலை விரிக்கப்பட்டபோது, இன்னும், இன்னும் வானம் உரிக்கப்பட்டபோது, இன்னும் நரகம் (பாவிகளுக்காக) கொழுத்தப்பட்டபோது (அதாவது நெருப்பு அதிகமாக உண்டாகும்படி மூட்டப்பட்டபோது) இன்னும் சுவர்க்கம் நல்லோர்களுக்கு) சமீபத்திலாக்கப்பட்டபோது, ஒவ்வொரு நப்ஸும் சமர்ப்பித்ததை அறிந்துகொள்ளும். ஆகவே, பின்வாங்கி, முன்னேறி, (சிலசமயங்களில்) மறையும்படியான நக்ஷத்திரங்களைக் கொண்டு நான் பிரமாணம்செய்கிறேன். இன்னும் இரவின்மீது அது சென்றுவிடும்போது (பிரமாணம் செய்கிறேன்). இன்னும் காலைவேளையின்மீது—அது வரும்போது) பிரமாணம்செய்கிறேன். நிச்சயமாக இது (திருகுர்ஆன்) சங்கையான ஒரு தூதருடைய சொல்லாக இருக்கிறது.''

இந்த ஆயத்துகளுக்கு அவர் வியாக்யானம் செய்திருப்பதில் பின்வருமாறு கூறி இருக்கிறார் :—

இவை பன்னிரண்டு முன்னறிவிப்புகளாகும். இப்பன்னிரண்டு காரியங்களும் நடைபெறுவதால் இந்தத் திருகுர்ஆன் றஸூலே கரீம் (ஸல்.) அவர்களுக்கு அல்லாஹு தஆலாவினிடமிருந்து அருளப்பட்டிருக்கிறது என்பதை ருஜூப்படுத்துவதுதான் நோக்கமாகும். இப்பன்னிரு முன்னறிவிப்புகளும் பின்வருமாறு எடுத்துக் காண்பிக்கப்பட்டிருக்கின்றன :

இனிமேல் ஒரு காலம் வரும். அந்தக் காலத்தில் சூரியனின் அந்தஸ்திலுள்ள திருகுர்ஆனின் கல்வியும் கிரியையும் எடுபட்டுவிடும். அதாவது உலமாக்களும் ஸாலிஹீன்களும் உலகத்தை விட்டுச்சென்றுவிடுவார்கள். அல்லது

அவர்கள் இருந்தாலும் அவர்களிடம் தெய்வீக சம்மந்தமான அந்தப்பிரகாசம் இருக்கமாட்டாது. அல்லது அவ்வாறிருந்தாலும் அது மிகவும் மங்கலானமுறையில் இருக்கும். மத சம்மந்தமானதும் ஆத்ம சம்பந்தமானதும் விழ்ச்சி யடைந்துள்ள இக்காலத்தில் நாகரீக முன்னேற்றம் அதன் உச்சஸ்தானத்தை அடைந்துவிடும். எதுவரையிலென்றால், மலைச் சிகரங்களில் ஐரோப்பாவினுடைய மலைப் பிரங்கிகள் ஏற்றிவைக்கப்பட்டுவிடும். மௌன்ட் எவரஸ்ட், கிஞ்சின்சங்கா ஆகிய சிகரங்கள் வரையில் ஜெர்மன் இஞ்ஜினீயர்களும், பிரிட்டிஷ் இஞ்ஜினீயர்களும் வந்துவிடுவர். மலைகளின் தடை தடையாக இருக்காது. அவைகளில் ரஸ்தாக்கள் போடப்பட்டுவிடும், சுரங்கங்கள் வைக்கப்பட்டுவிடும், மலைச் சிகரங்கள் ஜனங்கள் உலாவச் செல்லும் உல்லாசவனங்களாகிவிடும். இப்படிப்பட்ட காலத்தில் ஒரு இடத்திற்கும் மற்றொரு இடத்திற்கு மிடையிலுள்ள தொலைதூரம் கவனிக்கத்தக்கதாக இருக்கமாட்டாது. மோட்டார் ரயில் ஆகாய விமானம் ஆகியவைகளெல்லாம் உற்பத்தியாகி குதிரையைப்போல் சவாரிக்கு உதவும். நீங்கள் பகற் சாப்பாடு டில்லியில் அருந்தினுல் லண்டனில் டிப்பன் அருந்துவீர்கள். காட்டுமிராண்டியாகவுள்ள ஜனங்கள் நாடோடிகளாக அலைவது எடுபட்டுவிடும். அவர்கள் நகரங்களில் நிரந்தரமாக வசிக்க ஆரம்பித்து விடுவார்கள். பிறகு, சமுத்திரங்களில் மூழ்கிவிடுவோம் என்ற பயங்கரமும் நீங்கிவிடும். நிலத்தில் புகைரதம் ஓடுவதுபோல புகைக்கப்பல்கள் சமுத்திரங்களில் செல்லும். நிலத்தில் பிரயாணம் செல்வது சுலபமாக இருப்பது போல அவ்வளவு சுலபமாக நீர்ப்பிரயாணம் ஏற்பட்டுவிடும். கீழ்நாட்டினரும் மேல் நாட்டினரும் ஒருவரோடொருவர் கலந்துகொள்வர். சிசுஹத்திசெய்யும் வழக்கம் எடுபட்டுவிடும். ஸ்திரீகளின் பாத்தியதைகள் பாதுகாக்கப்படும். பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் ஏராளமாகப் பிரசுரிக்கப்படும். லாகூரிலிருந்து "பைகாமேஸுல்ஹு", "லைட்", "எங் இஸ்லாம்" காதியானிலிருந்து "அல்பஜ்லு", "பாரூக்", 'அல்ஹக்கம்", பிஜ்னூரிலிருந்து "மதீனு", "பாரான்", "குன்ச்சா" லாகூரிலிருந்து "ஜமீன்தார்", "இன்கிலாப்", "இஹ்ஸான்", "முஜாஹித்" ஆகியவைகள் பதிப்பிக்கப்பட்டு தேசமெங்கும் பரவும்.

இதுதான் அப்படிப்பட்ட காலமாக இருக்கும். அதுபோழ்து மிர்ஜாகுலாம் அஹ்மது அனுப்பப்பட்டு வானத்தின் திரையை அகற்றிவிடுவார். அதாவது தெய்வீக சம்மந்தமான கல்விகளையும் அகமிய இரகசியங்களையும் மறைவில்லாதனவாக ஆக்கி விடுவார். ஆயினும், பிரகிருதியின் வளர்ச்சியின் காரணமாக மன இச்சை, மிருக உணர்ச்சி என்ற நரகம் குதித்தெழும்பும்.

ஆனுல், இதுதான் சரியான சமயம். இந்தச் சமயத்தில் செய்யும் நன்மையும், மார்க்க ஊழியமும் மதிக்கத்தக்கதாக இருக்கும். "இன்னும் சுவர்க்கம் (நல்லோர்களுக்குச்) சமீபத்தில் ஆக்கப்பட்டபோது" என்ற வேத வசனத்திற்கு இதுதான் கருத்து. அதாவது இந்தச் சமயத்தில் சுவர்க்கம் மிகவும் நெருங்கியதாக ஏற்படுத்தப்படும். சொற்ப மார்க்க ஊழியம் செய்பவரும் அதாவது "அன்வாருல் குர்ஆனை" எழுதி விடுபவரும், "பைகாமே ஸுல்ஹில்" வியாசம் பிரசுரிக்கச் செய்பவரும் நேரடியாகச் சுவர்க்கத்திற்குச் சென்றுவிடுவர். மார்க்கப்பற்றில்லாத காலத்தில் மார்க்கப்பற்றுடனிருப்பது மிகவும் மதிக்கத்தக்கதாக இருக்கிறது.

இன்னும், இந்தப் பன்னிரண்டு முன்னறிவிப்புகளும் பூர்த்தியாகி, அவைகளை டாக்டர் சாகிப் (அன்வாருல் குர்ஆன் என்ற இந்த நூலின் ஆசிரியர்), மௌலவி முஹம்மது அலி சாகிப், மிர்ஜா மஹ்மூது அஹ்மது சாகிப், இவ்வியாசத்தை எழுதுபவர் (மதீனு பத்திரிகையின் ஆசிரியரான ஜனுப்மலிக் நஸ்ருல்லாகான், பி. ஏ.) ஆகியவர்கள் பிரத்தியக்ஷமாகப் பார்த்துவிடும்போது "ஒவ்வொருவரும் தாங்கள் சமர்ப்பித்ததை அறிவார்கள்" என்ற முன்னறிவிப்பு அவர்களுக்கு உறுதியாகிவிடும். இன்னும் இந்த அக்கீதாவும் சரியாக் இருக்கிறது. அதாவது கியாமத்தெனும் நியாயத்தீர்ப்பின் நாள் உண்மையாக இருக்கிறது. நன்மை தீமைகளுக்குச் சன்மான தண்டனையின் நாளைப்பற்றிய வாக்குறுதி சரியானதுதான் என்பதை உணர்ந்து கொள்வார்கள்.

பிறகு, இதுமட்டுமல்ல. குன்னஸ் - ஜவாரில் குன்னஸ் (பின்வாங்கி முன்னேறி சில சமயங்களில் மறையும்படியான நக்ஷத்திரம்) என்பதற்கும் பலவகைகளிருக்கின்றன. அதாவது பாதிரிகள் மிஷனரி (மதப் பிரசாரகர்) களின்

வகைகள். இவர்கள் அல்லாஹு தஆலாவின் மார்க்க சம்மந்தமாக ஜனங்களின் இருதயத்தில் வஸ்வாஸை (குழப்பத்தை - குதர்க்கமான எண்ணத்தை) உண்டுபண்ணிவிட்டு பின்னல் விலகிக்கொள்கிறார்கள். உலகம் முழுவதும் பரவி வழி கேட்டைப் பரப்பிவிட்டு மறைந்து விடுகிறார்கள். ஏனெனில், வழிகேடு என்ற இரவு இருக்கும்வரையில்தான் இவர்கள் தீமைகளை யுண்டாக்க முடியும். ஆதலின் இவர்கள் வழிகேட்டைப் பரப்பிவிட்டு விலகிக்கொள்கின்றனர். ஆனால், மேனாடு என்ற சூரியோதய திசையிலிருந்து பிரகாசமான காலை வேளையானது உதயமாகும்போது அதாவது இங்கிலாந்தில் வோக்கிங் மஸ்ஜிதும், பர்லினில் ஜெர்மன் மிஷனும் (பிரசாரசபையும்) ஏற்படுத்தப்படும் போது இந்தப் பாதிரிகளின் செல்வாக்கு நீங்கி விடும். இந்த விஷயங்களெல்லாம் "நிச்சயமாக இதுவானது சங்கை பொருந்திய தூதரின் சொல்லாகும்" என்பதற்கு சாக்ஷியாக இருக்கிறது."

மேலே எடுத்து எழுதப்பட்ட விஷயங்கள் டாக்டர் சாகிபின் வியாக்யானம். இந்த விஷயங்கள் வலிந்து பொருள் செய்யப்பட்டவை என்பது ஒருபுறமிருக்கட்டும். இப்பொழுது கவனிக்கவேண்டிய விஷயம் யாதெனில், திருகுர்ஆன் மக்காமு அல்லமாவில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கு அருளப்பட்டபோது இந்த "ஸூரத்துல் கௌதர்" அருளப்பட்டது. அப்பொழுது அங்கிருந்த முஸ்லிம்களும் மக்கத்துக் காபிர்களும் இந்த அத்தியாயத்திற்கு என்ன கருத்துக்கொண்டார்கள் என்பதேயாகும். அங்குள்ள முஸ்லிம்கள் காபிர்கள் ஆகியவர்களின் கவனத்திலும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது முபாரக்கான இருதயத்திலும் டாக்டர் சாகிப் மேலே கூறியுள்ள இரகசியங்களும் அறிவுகளும் மறைந்திருந்தனவென்றால், இந்த அத்தியாயம் முழுவதையும் அருளியது பிரயோஜன மற்றதாக இருக்கிறதா? இல்லையா? என்பதே இங்கு எழும் வினவாக இருக்கிறது.

போகட்டும், திருகுர்ஆன் உண்மையானது தான் என்பதற்கு 12 முன்னறிவிப்புகள் சாக்ஷிகளாக இருக்கின்றன என்று டாக்டர் கூறி இருக்கிறார். இந்தப் பன்னிரண்டு முன்னறிவிப்புகளில் ஒன்று கூட இன்னமும் நிகழவில்லையெனின் எதிரிகள் திருகுர்ஆனைப்பற்றி என்ன நினைப்பார்கள்? இந்தப் பன்னிரண்டு சாக்ஷியங்களும் ஆதாரமற்றவைகள் என்று கூறி "நிச்சயமாக இது சங்கை பொருந்திய தூதரின் சொல்லாகும்" என்பதை மறுத்து விடமாட்டார்களா? கிரியைகளின் பலன்கள் நிகழ்வதைப்பற்றிய சமாச்சாரம் உண்மையானவைகள் என்று டாக்டர் சாகிப் தாவாச் செய்திருக்கிறார். ஆனால், 14 நூற்றாண்டுகளுக்குப் பிறகு அவைகளிற் சில நிறைவேறும் என்று ருஜுக் கொடுக்கப்படுகின்றது. ஆகவே, இவ்விதமான முறையில் திருகுர்ஆனுக்கு ஆதாரம் காண்பிப்பது எவ்வளவு தூரத்திற்குச் சரியானது என்பதை டாக்டர் சாகிப் சிந்தித்துப் பார்க்கட்டும்.

இவ்விதம் வியாக்யானம்செய்ததற்கு அசல் காரணம் என்னவெனில், "நிச்சயமாக இது சங்கையான ஒரு றஸூலின் சொல்லாக இருக்கிறது." என்ற இந்த ஆயத்தைத் தம் விஷயத்தில் உபயோகப்படுத்திக் கொள்வதற்காக மிர்ஜாகுலாம் அஹ்மது காதியானி இக்காலத்திலுள்ள 12 திருஷ்டாந்தங்களுடன் இந்த முன்னறிவிப்புகளைப் பொருத்தப் படுத்திக் காண்பித்தார். இதில் அவர் செய்த காரியத்திற்கு (தன்னைப் பற்றியசுயநலமான) ஒரு கருத்து இருந்தது என்று கூறலாம். ஆனால், டாக்டர் சாகிப் செய்த இந்த வியாக்யானத்தின் போக்கு என்ன பலனை அளிக்கிறது என்பதை அவரே சிந்தித்துப் பார்க்கட்டும். டாக்டர் சாகிப் தமது வியாக்யானத்தில் இந்த ஆயத்துகளுக்குரிய காரியங்கள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது காலத்திலேயே நிகழ்ந்தவைகளுடன் ஒப்பிட்டுக் காண்பித்திருப்பாராயின் அது மிகவும் பொருத்தமாக இருந்திருக்கும்............ அசல் விஷயம் என்னவெனில், அஹ்மதியர்கள் தங்களது மனத்தினுள் முற்கூட்டியே ஒரு எண்ணத்தை உண்டாக்கிக்கொண்டிருக்கிறார்கள். உலகம் முடியும் காலம், அப்பொழுது நிகழக் கூடிய சில காரியங்கள் ஆகியவைகள் சம்மந்தமாக திருகுர்ஆனில் சொல்லப்பட்டுள்ள ஆயத்துகளில் சிலவற்றை நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது பரிசுத்த காலத்துடன் சம்மந்தப்பட்டனவாகவும், பெரும்பாலான ஆயத்துகளை மிர்ஜாகுலாம் அஹ்மது சாகிப் காதியானியின் காலத்துக்குச் சம்மந்தப்பட்டனவாகவும் அவர்கள் கருதிக்கொண்டிருக்கின்றனர். இதனால்தான் அவர்கள் தங்களுடைய கருத்துப்படி வலிந்து பொருள் செய்யும்

முறையைக் கையாண்டு வருகிறார்கள். முஹம்மது அலி எம். ஏ. எல். எல். பி. யின் திருகுர்ஆன் மொழிபெயர்ப்பிலும் இவ்விஷயம் காணப்படுகிறது. (இந்தத் தப்ஸீரைத்தான் நமது தென்னாட்டிலுள்ள பா. தாவூத்ஷா என்பவர் மொழிபெயர்க்க முடிவுசெய்து முஹம்மது அலியால் எழுதப்பட்ட ஆங்கிலம் உருது தர்ஜுமாக்களை தமிழில் மொழிபெயர்த்து "ஜவாஹிருல் புர்க்கான்" என்று பெயரிட்டு வெளியிட்டிருக்கிறார். இதில் அவர் வெளியிட்ட பிரசுரங்களில் "அம்மயத்" என்று 30-வது ஜுஸ்உவுக்கு வெளியிட்டுள்ள தமிழ் மொழி பெயர்ப்பில்மேலே சொல்லப்பட்ட அம்சங்கள் முற்றிலும் நிறைந்திருப்பதைக் காணலாம். சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தார் ஜவாஹிருல் புர்க்கானிலும் தாவுத்ஷா மொழி பெயர்த்துப் பிரசுரித்த இதர புத்தகங்களிலுமிருந்து எடுத்துக்காட்டிய குற்றச்சாட்டுகளில் இவ்விஷயத்தையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். (ப. ர்)

களங்கமற்ற மனத்துடன் திருகுர்ஆனைப் படித்து அதிலுள்ள விஷயங்களை உணர்ந்து கொள்ளவேண்டும் என்று விரும்புபவர்களுக்கு டாக்டர் சாகிப் செய்திருக்கும் வலிந்து பொருள் செய்யும் வேலை மிகுந்த வருத்தத்தைக் கொடுக்கிறது. இந்த முஸீபத்துகளெல்லாம் காதியானி ஊற்றிலிருந்து உண்டானவைகளாகும். இவர்கள் திருகுர்ஆனுக்கு வியாக்யானம் செய்வதற்காக தாங்களாக சுயமே ஏற்படுத்திக்கொண்டதும், தற்காலிகமானதுமான சில முறைகளைத் தயார்செய்து கொள்கிறார்கள். அதற்குப் பின் திருகுர்ஆன் முழுவதிலும் அவைகளைப் பிரயோகிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள்.

இத்தியாதி காரணங்களால் "அன்வாருல் குர்ஆன்" என்ற இந்தப் புத்தகம் பிரிட்டிஷ் ஹாஸ்பிட்டல்களில் "பாஷாணம்" என்று எழுதப்பட்ட லேபிள்களுள்ள போத்தல்கள் வைக்கப்பட்ட அலமாரியின் அந்தஸ்திலிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆகவே, அந்தப் பாஷாணத்தை அறிந்த ஜனங்கள் அதிலிருந்து பிரயோஜனத்தை அடைய முடியும். தெரியாதவர்கள் அதனால் உயிரிழக்கவேண்டிய நேற்படும். அன்வாருல் குர்ஆனுக்குச் செய்யப்பட்டுள்ள நீல நிறமான பைண்டும்கூட இந்தக்கருத்தை மிக நுட்பமாகச் சுட்டிக் காட்டிக்கொண்டிருக்கிறது.

"பாரான்"

இது நமது நாட்டுக் காதியானிகளால் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்படாத ஒரு காதியானிப் புத்தகத்தைப்பற்றி வட இந்தியாவிலுள்ள ஒருவரால் எழுதப்பட்டுள்ள மதிப்புரையாகும். இதனை இங்கு எடுத்து எழுதவேண்டிய அவசியமில்லை என்று சிலர் நினைக்கலாம். அப்படி நினைப்பது தவறு. தென்னாட்டிலுள்ள காதியானிகளுக்கு சுயமே ஒரு புத்தகம் எழுதி விடுவதற்குச் சக்திகிடையாது. காப்பியடித்துப் புத்தகம் எழுதி தாங்கள் பெயரைப் பிரசுரித்துக் கொள்வதில் வெகு சமர்த்தர்கள். அகப்பட்டுக்கொண்டால் அபராதமும் கொடுத்துவிடுவார்கள். இந்தக் கிரந்தத்தை இவர்கள் தமிழில் மொழி பெயர்த்துப் பிரசுரிப்பது முடியாதகாரியம் அன்று. அவர்கள் தமிழில் மொழி பெயர்த்துப் பிரசுரித்தபின் அதனைப்பற்றி நாம் குற்றம் கூறிக்கொண்டிருப்பதைப் பார்க்கினும் அந்த நூலைப் பற்றிப் பிறர் என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் என்ற விஷயத்தைமுற்கூட்டியே நமது வாசக நேயர்களுக்கு அறிமுகப் படுத்தி வைப்பது அதிக நன்மையைத்தரும் என்று இவ் வியாசத்தை ஈண்டு மொழி பெயர்க்கலானோம். (பர்.)

சந்தா நேயர்கட்கு!

நிகழும் 1936-ம் ஆண்டுக்குரிய சந்தாவை முன்பணமாக அனுப்பாதிருக்கும் நண்பர்கள் தாமதியாது தங்கள் சந்தா பணத்தை அனுப்பி வைப்பார்களென எதிர்பார்க்கிறோம்.

ஜெர்மனியில் காதியானிகளின் குட்டு வெளிப்பட்டுவிட்டது.

பேர்லின் இஸ்லாமியா அஞ்சுமனின் பொதுக்கூட்டம்.

(பெர்லின் இஸ்லாமியா ஜமாஅத்து காரியதரிசி ஜனுப் ஹபீபுர்ரஹ்மான் சாகிப்கர்ஷீ)

"இஷா அத்தே இஸ்லாம்" (இஸ்லாமியப் பிரசாரம் என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு அஹ்மதியா வகுப்பினர் ஜெர்மனிக்கு வந்ததிலிருந்து பேர்லினிலுள்ள முஸ்லிம்களுக்குள் ஒற்றுமைக்குறைவை உண்டு பண்ணுவதுதான் அவ்வகுப்பாரின் மிக முக்கிய வேலையாக இருந்து வருகிறது. இன்னும் இவர்கள் ஜெர்மனியில் "இஷா அத்துல் இஸ்லாம்" செய்வதாக இந்தியாவில் பொய்ப்பிரசாரம் செய்து தங்களது வயிற்றினை வளர்த்து வருகிறார்கள். இப்படி இவர்கள் வயிறு வளர்ப்பது மட்டுமில்லாமல் சுக போக வாழ்க்கையிலும் ஈடுபட்டிருக்கின்றனர். சென்ற 1922-ம் வருஷத்திலிருந்து பேர்லினில் மிகவும் வெற்றிகரமாகத் தொண்டாற்றி வருகிற இஸ்லாமியா ஜமா அத்தானது தனது இஸ்லாமியக் கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து, பொய்யானதும் வீணானதுமான பிரசாரம் செய்து உலக முஸ்லிம்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தை வசூல் செய்து இவ்வண்ணம் அழிக்கக் கூடாது என்று இந்தக் காதியானிக் கூட்டத்தாரிடம் வேண்டுதல் செய்துகொண்டே இருந்தது. ஆனால், இந்த அஹ்மதிக் காதியானிகள் ஒருபோதும் இவ்வேண்டுகோளை லக்ஷியம் செய்யவே இல்லை. ஆகவே, அஹ்மதியர்கள் இவ்வாறு செய்வதைக் கண்டித்துத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வது பேர்லின் இஸ்லாமியா ஜமாஅத்தின் கடமையாகிவிட்டது. எனவே, இக்கடமையை உத்தேசித்து சென்ற நவம்பர்மீ 8௳ பேர்லினிலுள்ள முஸ்லிம்களின் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

காதியானி முத்தவல்லிக்கு அழைப்பு

(1) பலஸ்தீன் பிரசினை, (2) அஹ்மதியர்களின் பிரசினை ஆகியவைகளிரண்டும்தான் இந்தப் பொதுக்கூட்டத்தில் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயங்களாக இருந்தன.

"பேர்லின் மஸ்ஜிது காதியானிகளின் சொந்த ஐவேஜாக ஆக்கிக்கொள்ளப்பட்டு 16 ஆயிரம் மார்க்கு (ஜெர்மன் நாணயம்) களுக்கு அடமானம் வைக்கப்பட்டிருந்தது" என்ற விபரமும் இப்பொதுக் கூட்டம் கூட்டுவதற்காகப் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் சொல்லப்பட்டிருந்தது. மேலும், பேர்லினில் இஷாஅத்தே இஸ்லாம் சம்மந்தமாக மிகவும் தவறான முறையில் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது; முஸ்லிம்கள் மஸ்ஜிதிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்பன போன்ற குற்றச்சாட்டுகளும் அந்த விளம்பரத்தில்கூறப்பட்டிருந்தன.

பேர்லினிலுள்ள அஹ்மதிமஸ்ஜிதின் முத்தவல்லியாகிய அப்துல்லா சாகிபுக்கு இவ்விளம்பரமும், அழைப்புக் கடிதமும் அனுப்பிவைக்கப்பட்டதுடன், தனியே பிரத்தியேகமாக ரிஜிஸ்டர் லெட்டரும் அனுப்பிவைக்கப்பட்டது. ஏனெனில், ஷை யார் இம்மகாநாட்டிற்கு வந்து தனது நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டும் என்பதும், பேர்லின் ஜமாஅத்தே இஸ்லாமியா கூறும் குற்றச் சாட்டு மெய்யா, பொய்யா என்பதை அவர் அறிவிக்க வேண்டும் என்பதும்தான் இவ்வழைப்புக் கடிதம் அனுப்பியதன் நோக்கம். மாலை 6-மணிக்கு மகாநாடு கூடுவதாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட வேளையில் அஹ்மதி முத்தவல்லியான அப்துல்லா சாகிபும் அவரது ஹவாரியான டாக்டர் மார்க்ஸும் வந்தார்கள்.

பலஸ்தீன் பிரசினை

இம்மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் ஊழியத்தை இவ்வடியேன் (இவ்வியாசக் கர்த்தாவாகிய ஜனுப் ஹபீபுர் ரஹ்மான் சாகிப் கர்ஷீ)

ஏற்றுக்கொண்டேன். நடவடிக்கை ஆரம்பமானவுடன் அஹ்மதி முத்தவல்லி தமக்கு அதிக சாவகாசமில்லாததால் பலஸ்தீனிலுள்ள முஸ்லிம்களது சமாச்சாரங்களையும், யூதர்கள் அறபியர்களுக்கு அநீதி செய்கிறார்கள் என்ற கதையையும் பின்னால் முடிவு செய்துகொள்ளலாம் என்றும், மஸ்ஜிது சம்பந்தமான விஷயங்களை முதலில் முடிவு செய்யவேண்டுமென்றும் கூறினார். இதன்மீது அங்குள்ள முஸ்லிம்களுக்குப் பரபரப்பேற்பட்டது. உலக முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களைப் பற்றி எவ்விதச் சிரத்தையும் கொள்ளாத இந்த இமாம் எப்படிப்பட்ட இமாமாக இருக்க வேண்டும் என்று எல்லோரும் அவர்மீது ஆத்திரமடைந்தனர். கடைசியாக புரோகிராம் எப்படி ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அதேவிதமாகவே மகாநாட்டின் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

எனவே, யான் மகாநாட்டுத் தலைவன் என்ற முறையில் பலஸ்தீன் பிரசினையைப்பற்றிப் பிரசங்கம் செய்யும்படி ஆபிதீன்பே என்பவரைக் கேட்டுக்கொண்டேன். அவர் பலஸ்தீனிலுள்ள அறபியர்களுக்கு யூதர்கள் இழைத்துவரும் அநீதிகளைப்பற்றியும், யூதர்கள் யுத்தக்கருவிகளைத் தருவித்து வைத்துக்கொண்டு அறபியர்களைத் தாக்கிவருகின்றனர் என்பதைப்பற்றியும் பேசினார். பின்னர், யூதர்களைப் பகிஷ்கரிக்கவேண்டும் என்று உலக முஸ்லிம்களைக் கேட்டுக்கொள்வதாகவும், பர்லினிலுள்ள எந்த முஸ்லிமும் எந்த யூதரிடமும் தங்கி இருக்கக்கூடாதென்றும், யூதர்கள் கடைகளை எல்லாம் பகிஷ்கரித்துவிடவேண்டும் என்றும் இஸ்லாமிய ஜமாஅத்து தீர்மானங்களை நிறைவேற்றியது.

காதியானீ பிரசினை

இத்தீர்மானங்கள் நிறைவேறிய பின்னர் ஏழை முஸ்லிம்களுக்கு உதவி செய்வதற்காக சந்தா வசூல் செய்யவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. இறுதியாக அஹ்மதியப் பிரசினை நடவடிக்கைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. உடனே, அப்துல்லா சாகிப் "என்னைப்பற்றி ஏதேனும் கேள்விகள் கேட்பதாயின் உடனே அவைகளுக்கு பதில் கூறத் தயாராக இருக்கிறேன். ஏனெனில், யான் இங்கு அதிக நேரம் தங்கி இருப்பதற்கான சாவகாசம் எனக்குக் கிடையாது" என்று கூறினார்.

அதற்கு சபையினர், "தற்போது இவ்விடத்தில் ஜெர்மனியிலுள்ள முஸ்லிம்களின் தலைவிதியைப்பற்றிய தீர்மானம் பேசப்படுவதால் அப்துல்லாசாகிப் போகாமல் இருக்க வேண்டும் என்றும், இஸ்லாத்தைப் பார்க்கினும் அதிக முக்கியமான அலுவல் முஸ்லிமாக இருப்பவருக்கு வேறு ஒன்றுமில்லை என்றும்" கூறினர். ஆனால், அப்துல்லா சாகிப் எதையும் லக்ஷியம் செய்யாமல் மகாநாட்டைவிட்டு வெளியேறிவிட்டார். இதன்பேரில் சபையினர் "வெட்கம், வெட்கம்" என்று கோஷித்தனர்.

முஸ்லிம் உலமாக்களின் பத்வா

அந்நியநாடுகளில் இஷாஅத்தே இஸ்லாம் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதனை நடத்திவருவதாகக் கூறிக்கொள்பவர்கள் அந்நிய நாடுகளுக்குவந்து என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பது இந்தியாவிலுள்ள முஸ்லிம்களுக்கு இவ்விபரத்திலிருந்து நன்கு தெரியவரும். ஐரோப்பாவில் இத்தனைபேரை இஸ்லாத்தில் சேர்த்துவிட்டோம், அத்தனைபேரைச் சேர்த்துவிட்டோம் என்றுகூறிவரும் அஹ்மதி காதியானிகளின் வேலை இதுவேயாகும்.

இறுதியாக (ஜெர்மன் நௌமுஸ்லிமான) ஹஸன்ஹாஃபமன் என்பவர் உலகத்திலுள்ள முஸ்லிம் உலமாக்களின் பத்வாவைச் சபையினருக்குப் படித்துக்காட்டி, "அஹ்மதி காதியானிகள் காபிர்கள் முர்த்தத்துகளாக இருக்கிறார்கள் என்றும், முஸ்லிம்களுக்கு அபகீர்த்தியுண்டாக்குவதுதான் இவர்களது போதனையாக இருந்து வருகிறதென்றும் முஸ்லிம் உலகம்முழுவதும் முடிவு செய்திருக்கிற"தென்பதை அறிவித்துவிட்டு மேலும்கூறியதாவது:—

"காதியானிகள் இஸ்லாத்திற்கு மிகவும் அதிகமான நஷ்டம் விளைவித்திருக்கிறார்கள்; இஸ்லாத்தின் வேரை அறுக்கும்படியான கரையான்களைப் போல் ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள்; ஆகவே இப்பொழுது இந்த பித்னாவை அடியுடன் ஒழித்துவிடவேண்டும் என்று பெர்லினில் குடியேறி இருக்கும் முஸ்லிம்கள் முடிவு செய்திருக்கின்றனர். இந்த அஹ்மதிகாதியானிகள் பெர்லின் மஸ்ஜிதைத் தங்களுடைய சொந்தச் சொத்தாக ஏற்படுத்திவைத்திருக்கிறார்கள். அதனை அவர்

கள் தான் சுவாதீனப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இஷ்டப்பட்ட முஸ்லிம்களை அம்மஸ்ஜிதிலிருந்து வெளியேற்றி விடுகின்றனர். ஜெர்மன் நௌமுஸ்லிமான முஸ்தபா என்பவரை அவ்வஹ்மதியர்கள் மஸ்ஜிதை விட்டு வெளியேற்றி விட்டனர். பெர்லின் மஸ்ஜிதை 16 ஆயிரம் மார்க்கு (ஜெர்மன் நாணயம்)களுக்கு அடமானம்வைத்து உலக முஸ்லிம்களின் கண்ணியத்தையும், இஸ்லாத்தின் பெருமையையும் அழித்து விட்டனர். ஜெர்மனியில் இஸ்லாத்தைத் தழுவி இருக்கிற எல்லா நவ்முஸ்லிம்களும் அஹ்மதியர்கள் தாம் என்றும் அதற்கான ரிக்கார்டுகள் தங்களிடம் இருக்கின்றனவென்றும் அந்த அஹ்மதியர்கள் கூறி வருகின்றனர்."

பிறகு, பிரசங்கியார் கூறிய இக்கடைசி வார்த்தையை ஆக்ஷேபித்து டாக்டர் மார்க்கஸ் (அஹ்மதி முத்தவல்லியின் சிஷ்யரான நௌமுஸ்லிம்) "தாம் அஹ்மதியல்ல" வென்று கூறினார். அதன்பேரில் சபையினர் அவரை நோக்கி "நீங்கள் அஹ்மதியல்ல வென்று எழுதிக் கையொப்பமிட்டு கொடுங்கள்" என்று கேட்டனர். அதற்கு அவர் சம்மதித்து எழுதிக் கையொப்பமிட்டார். ஆயினும், அதை அவ்விடத்திலேயே கிழித்துப் போட்டு விட்டார்.

பிறகு, ஜெர்மன் நௌமுஸ்லிமான பாறாக் பஷர்சாகிப் என்பவர் தமக்கு குலாம் அஹ்மதைப்பற்றி எவ்விபரமும் கொஞ்சம் கூடத் தெரியாதென்றும், தாம் அஹ்மதியாக இருக்க விரும்பவில்லை என்றும், முஸ்லிமாக இருக்கத்தான் தாம் விரும்புவதாகவும், இஸ்லாம் மதத்தின் பாலுள்ள பற்றுதலினாலேயே தாம் அந்த மஸ்ஜிதுக்குச் சென்று வருவதாகவும், இப்பொழுது விஷயங்களை உணர்ந்து கொண்டதால் இனிமேல் அஹ்மதியத்தை விட்டுத் தமது சம்மந்தத்தை முற்றிலும் அகற்றிக் கொள்வதாகவும் கூறினார்.

ஏகமனதான தீர்மானம்

இவரது பிரசங்கத்திற்குப்பின் அடியிற் கண்டதீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

"இந்த அஹ்மதியர்கள் இஸ்லாம் மதத்திற்கு ஊழியம் செய்யவில்லை; தங்களுடையபெயரைத் தான் அவர்கள் பிரசாரம் செய்துவருகிறார்கள்; மஸ்ஜிது முத்தவல்லியான அப்துல்லா என்ற அஹ்மதி காதியானிக்கு ஒரு வாரம் தவணை கொடுத்து நோட்டீஸ் கொடுக்கவேண்டும். இந்த ஒரு வார காலத்திற்குள் அவர் மஸ்ஜிது சம்பந்தமாகத் தமது முடிவைத் தெரிவித்துவிட வேண்டுமென்று அதில் குறிப்பிடவேண்டும். ஒருவார காலத்திற்குள் அவர் தெரிவிக்கவில்லையாயின், அஹ்மதி காதியானிகள் இஸ்லாம் என்ற பெயரை உபயோகப் படுத்திக்கொள்ள அவர்களுக்கு உரிமை இல்லை என்றும், அஹ்மதி என்றும் காதியானி என்றும் அவர்கள் தங்களை அழைத்துக் கொள்வதிலும், அவ்வகுப்பைப் பற்றிப் பிரசாரம் செய்து கொள்வதிலும் அவர்களுக்கு உரிமை இருக்கிறதென்றும், தங்கள் வகுப்புக்கொள்கைகளை இஸ்லாம் மதத்தின் பெயரால் பிரசாரம் செய்ய அவர்களுக்கு உரிமை இல்லையென்றும் ஜெர்மனியிலும், இஸ்லாமிய உலகிலும் அடியிற்கண்ட வேண்டுகோளை பிரசுரம் செய்வதென்றும் ஏக மனதாக முடிவு செய்யப்பட்டது.

இவ்வேண்டுகோளில் பெர்லினிலுள்ள எல்லா முஸ்லிம்களும் கையொப்பமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். மஸ்ஜிது சம்மந்தான முடிவு ஏற்படவில்லையாயின் அவ்வேண்டுகோள் உடனே பத்திரிகைகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.

உலக முஸ்லிம்களுக்கு விடுத்துள்ள அறிக்கை.

பெர்லினிலுள்ள இஸ்லாமிய ஜமாஅத்தின் ஆதரவின்கீழ் பெர்லினில் வசிக்கும் முஸ்லிம்களின் மாபெரும் பொதுக்கூட்டம் சென்ற 8-11-1935-ல் நடைபெற்றது. மகாநாட்டின் நடவடிக்கைகள் சரியாக மாலை 6 மணியிலிருந்து இரவு 11 மணி வரை நடைபெற்றன. பெர்லினில் வசிக்கும் உலக முஸ்லிம்கள் இந்த நடவடிக்கைகளில் பூரணமாகக் கலந்து கொண்டனர். லாகூரிலுள்ள அஹ்மதியா அஞ்சுமனே இஷாஅத்துல் இஸ்லாம் சங்கத்தார் இங்கு பெர்லினில் தங்களது மாய வலையை வீசி இருப்பதன் அந்தரங்கத்தையும், இஸ்லாத்தின் திரைமறைவில் அஹ்மதி வகுப்புப் பிரசாரத்தைத்செய்து வருகிறார்களென்பதையும் உணர்ந்து கொண்டனர். அஹ்மதியர்கள் செய்யும் பிரசாரம் எவ்விதப் பிரயோஜனமும் கொடுப்பதாக இல்லையென்றும், அவர்களுடைய

தமிழ்நாடு

பிரசாரத்தால் இஸ்லாம் மதத்தின் கண்ணியம் அதிகப்படுவதில்லை என்றும், இவர்களால் இஸ்லாம் மதத்திற்கு மிகவும் அதிகமான நஷ்டமேற்பட்டிருக்கிறதென்றும், பொய்யையும், வீணான விஷயங்களையும் பிரசாரம் செய்து இதுவரை அவர்கள் இஸ்லாத்திற்குச் செய்திருக்கும் ஊழியத்தையும், இப்பொழுது செய்துகொண்டிருப்பதையும் முஸ்லிம்கள் இம்மகாநாட்டில் நன்கு ருஜுப்படுத்தி விட்டார்கள். காபிர் என்றும், முர்த்தத்து என்றும் உலகத்திலுள்ள எல்லா உலமாக்களும்பத்வாக் கொடுத்திருக்கிற ஒரு மனிதரை (மிர்ஜா குலாம் அஹ்மதுவை) இந்த வழி கெட்ட அஹ்மதிக் கூட்டத்தார்கள் முஜத்தித் என்று கருதி வருவதை உலகத்தாருக்கு மறைத்துவிட வேண்டும் என்று அவர்கள் இதன் மூலம் (இஷாஅத்துல் இஸ்லாம் செய்வதாகக் கூறிக் கொள்வதன் மூலம்) முயற்சி செய்கிறார்கள்.

அஹ்மதிப் பிரசாரம் செய்வதற்காக இந்த அஹ்மதிக்கூட்டத்தார்கள் பேர்லினிலுள்ள மஸ்ஜிதின் மூலமாக மிர்ஜாகுலாம் அஹ்மது காதியானியின் போதனைகளைப் பரவச் செய்வது தான் சிறந்த முறை என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆதலால் தான், பர்லினிலுள்ள மஸ்ஜிதை வக்புச் செய்துவிட வேண்டும் என்று பேர்லினிலுள்ள முஸ்லிம்கள் கேட்கக்கூடாதென்பதற்காகவும், இஸ்லாமிய உலகமெங்கும் இருந்துவரும் பொதுவான வழக்கத்திற்கேற்ப பேர்லின் முஸ்லிம்களும் இந்த மஸ்ஜிதைத் தங்களது உபயோகத்தில் கொண்டுவர விடக் கூடாதென்றும் சூழ்ச்சி செய்திருக்கின்றனர். மேலும் பொய்யானதும் தவறானதுமான பிரசாரத்திற்காக மஸ்ஜிதை உபயோகப்படுத்துவதற்காகவும் இக்கூட்டத்தினர் ஆரம்ப முதற்கொண்டே தங்களிலுள்ள ஒரு அஹ்மதியரின் பெயரில் சொந்தச் சொத்தாக ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

ஆகவே, இந்தப் பொய்யான பிரசாரகர்களை ஒழித்துவிட வேண்டும் என்றும், இவர்களது அந்தரங்கத்தை அதாவது இவர்கள் முஸ்லிம்களன்று; இவர்கள் அஹ்மதியர்கள் என்ற உண்மையை இஸ்லாமிய உலகினுக்கு அறிவித்துவிட வேண்டும் என்றும் நாங்கள் உலக முஸ்லிம்களைக் கேட்டுக்கொள்கிறோம். "முஸ்லிம்கள் அஹ்மதியர்களன்று என்பதையும், அஹ்மதியர்கள் தங்களை முஸ்லிம்களென்று கூறிக்கொள்ள எவ்வித பாத்தியமில்லை என்று அறிவித்துவிட வேண்டும் என்றும் இஸ்லாமிய உலகத்தை வேண்டிக்கொள்கிறோம்.

(ஒப்பம்)

பேர்லினில் வசிக்கும் முஸ்லிம்கள்.

1. டாக்டர் ஹாஷிமி (அறபி), 2. அப்துல் அஜீஸ் ஹப்பாஷீ (அறபி), 3. காலித் ஜாயிலர் (ஜெர்மன் நௌமுஸ்லிம்), 4. முஹம்மது இஸ்மாயில் (மிஸ்ரீ), 5. முஹம்மது காஜாகோப் (தாத்தாரி), 6. டாக்டர் ஆபிதீன் நஜாத்திபே (அறபி), 7. மீர்முஹ்ஸின் மூஷாபியான் (ஈரானி), 8. அன்வர் அலிஜாதா (ஈரானி), 9. ரியாஜ் அஹ்மது முஹம்மது, பேர்லின் இஸ்லாமியா ஜமாஅத்து தலைவர் (மிஸ்ரி), 10. ஷாக்கிர் முஹம்மது ஜான் (தாத்தாரீ), 11. நார்தன் பீஷா (ஜெர்மன் நௌமுஸ்லிம்), 12. பக்ருத்தீன் ஷுக்ரி இமாம், துருக்கி கௌன்சில் பேர்லின் (துருக்கி), 13. முஹம்மதுல்ஹாஜ் (ஜஸாயிரி), 14. முஹம்மது ஹஸன் ஹுப்மன் (ஜெர்மன் நௌமுஸ்லிம்), 15. உமர் ஷுபர்ட் (ஜெர்மன் நௌமுஸ்லிம்), 16. முஸ்தபா கின்ச்னீ (ஜெர்மன் நௌமுஸ்லிம்), 17. புஆத் ஷீரின்பே (எகிப்துக் கல்விக் கழகத்தாரின் தலைவர்-பேர்லின்), 18. முஹம்மது சுலைமானுஸ்ஸிப்தீ (மிஸ்ரீ-எகிப்து ஜாமி ஆஅஸ்ஹர் அறிஞர்), 19. அப்துல்ஹலீம் அலி முஹம்மதுத் அஜ்ஜார் (மிஸ்ரி-ஜாமிஅ அஜ்ஹர் அறிஞர்), 20. முஹம்மதுல்வலா ஷுக்ரி (மிஸ்ரி), 21. அஹ்மது உத்லா (மிஸ்ரீ), 22. அப்துல் பத்தாஹ் உத்லா (மீஸ்ரீ), 21. ஜக்கரிய்யா மஹ்ழூம்பே, புரபஸர் வக்கீல் (துருக்கி), 23. டாக்டர் புவாத்ஹஸன் அலி (மிஸ்ரி), 24. அபூஜைத் ஸித்கி (மிஸ்ரீ), 25. அப்துல்அலீம் யூசுப் அபூபக்கர் (மிஸ்ரீ), 26. டாக்டர் முஹம்மது ஹிலால்காஸிம் (மிஸ்ரீ), 27. ஷபீக்குத்தீப் (மிஸ்ரீ), 28. அஜீஸ் முஹம்மது நஸ்ரு (மிஸ்ரீ), 29. ஹஸன் முஹம்மது ஈஷாரீ (மிஸ்ரி), 30. அஹ்மது முஹம்மது பத்வீ (மிஸ்ரீ), 31. ஹஸன் ஹுஸ்னு அஹ்மது (மிஸ்ரீ), 32. முஹம்மது நயீப்ஷாஹ், (மிஸ்ரீ), 33. முஹம்மதுப்னுஅஹ்மது (மொரோக்கோ), 34. முஹம்மதுப்னு ஹாயிஷ் (மொரோக்கோ), 35. உமர் முஹம்மது (மொரோக்கோ), 36. உமர் சாகிப் (மொரோக்கோ), 37. ஜின்பஹாதீ (மிஸ்ரீ), 38. ஹஸன் ஹஸனுல் ஸர்

ஸீகூ (மிஸ்ரீ), 39. அப்துல் பத்தாஹ் முஹம்மது (மிஸ்ரீ), 40. டாக்டர் ஹுஸைன் அப்துர் ரஜ்ஜாக் (மிஸ்ரீ), 41. அப்துல்முன்இம் இப்ராஹீ ஜிஸ்ஸியாத் (மிஸ்ரீ), 42. ஹஸன் அலி (மிஸ்ரீ), 43. அஹமது ஜுூம்ஆ (மிஸ்ரீ), 44. இப்ராஹீம் ஜாதா (மிஸ்ரீ), 45. உமறுப்னு அப்திர் ரஹ்மான் (மொரோக்கோ, 46. அப்துல்லாஹிப்னு அஹ்மது (மொரோக்கோ), 47. தாஜாகான் (அப்கானி), 48. அப்துல் காதிர் கித்தாப் (ஜஸாயிரி), 49. உவைஸுப்னு ஸமூத் (மொரோக்கோ), 50. ஹஸன் முஹம்மது (டுனிஸ்), 51. ஹாமித் பர்ராக் (டுனிஸ்), 52. முஹம்மது ஜக்கரிய்யா ஹாஷிமீ (அறபி), 53. இத்ரீஸ் ஈஸா (மொரோக்கோ), 54. அப்துல்லத்தீப் அப்துல்வஹ்ஹாப் (மொரோக்கோ) 55. ஹபீபுர் ரஹ்மான் குறைஷி (இந்தியா), 56. உமர்பாறூக் (அறபி), 57. முஹம்மது குத்தூஸி பாறூக்கி (இந்தியா), 58. டாக்டர் முஹம்மது ஸப்ரீ (மிஸ்ரீ), 59. முஹம்மது காமில் தன்தாவீ (மிஸ்ரீ).

காதியானிகளுக்கு பெரும் தோல்வி.

அமீரே ஷரீஅத் மௌலானா ஸெய்யித் அத்தாவுல்லா ஷாஹ்புகாரி அவர்களின் வழக்கு குர்தாஸ்பூர் கோர்ட்டில் நடைபெற்ற விவரங்களிலிருந்து காதியானிகளின் தவறான கொள்கைகளும், நடைமுறைகளும் முஸ்லிம் உலகிற்கு நன்கு தெரிந்து விட்டபடியால், காதியானீ மதத்தின் அஸ்திவாரத்திற்கே அசைவு கொடுத்து, அக்கோஷ்டி நசித்துப் போகும் நிலையை யடைந்துவிட்டது. இக் கேவல நிலையை எவ்வாறாயினும் நிவர்த்தித்துக் கொள்ள வேண்டுமென எண்ணங்கொண்ட, காதியானிக் கோஷ்டியினர் பலவேறு சூழ்ச்சிப் பிரசாரங்கள் செய்துவருகின்றன ரென்பதைப் பத்திரிகை பார்க்கும் நண்பர்கள் நன்கறிவர்.

காதியானீகள் செய்துவரும் சூழ்ச்சிப் பிரசாரங்களில் கீழ்காணும் விஷயமும் ஒன்றாகும்:-

காதியானி கலீபாவாகிய பஷீருத்தின் மஹ்மூது அஹ்மத் லாகூர் அஹ்ரார் சங்கத்தலைவரை சமீபத்தில் முபாஹலாவிற்கு (சத்திய பிரமாணம் செய்வதற்கு) அழைத்தார்.

அம்முபாஹலா காதியானியிலுள்ள ஜாமிஆ மஸ்ஜித்தாகிய மஹ்முதியாவில் ஜுூம்ஆத் தொழுகைக்குப்பின் நடைபெற வேண்டுமென்றும் அக்கூட்டத்திற்கு அஹ்ரார் சபையினரில் 500 பேர்கள் வரலாமென்றும், தங்கள் சார்பாக 500 பேர்கள் ஹாஜராயிருப்பார்களென்றும் காதியானித் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், அஹ்ரார் சபைத்தலைவர் இதை ஏற்றுக்கொள்ள மாட்டாரென்ற எண்ணத்தின் மீதே அவர் இவ்வாறு அழைத்தாரெனத் தெரிகிறது.

காதியானிக் கலீபா ஏற்படுத்திய முபாஹலாவை அஹ்ரார் தலைவர் உடனே ஒப்புக்கொண்டு குறித்த காலத்திற்குக் காதியானிக்கு வருவதாக அறிவித்துவிட்டார். இதையறிந்த காதியானிகலீபாவிற்கு திடுக்கமும், நடுக்கமும் ஏற்பட்டுவிட்டது. அதன்பேரில் இம் முபாஹலா நடைபெறாமல் தடைபட்டுப் போவதற்குரிய சூழ்ச்சிகளை அவர் செய்ய ஆரம்பித்தார்.

முபாஹலா என்பது சத்தியப் பிரமாண வாதமாகும். அதாவது :—

சத்தியப் பிரமாண வாதம் செய்ய ஒப்புக்கொள்ளும் இருவர்களும் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் குளித்து ஒலுசெய்து தூய்மையாக ஓரிடத்தில் உட்கார்ந்து, இருவர்களும் ஒருவரை யொருவர் எதிர்நோக்கி, ஆண்டவன் ஆஜராக இருக்கிறானென்பதை உறுதிமொழி செய்து, "நான் கொண்டுள்ள மார்க்கசம்பந்தமான கொள்கையும், நடைமுறையும் உண்மையானதாகும். நான் உண்மையான மதத்திலிருக்கிறேனென்பதை பிரமாணமாகக் கூறுகிறேன். நான் உறுதி கூறுவதில் பொய்யனாயிருப்பேனேயாயின் ஒரு வருடத்துக்கிடையே (அல்லது இருவரும் குறிப்பிடும் கெடுவிற்குள்) இறந்து போகக்கடவேனாக!" என்றும் இது போன்றே மற்றவரும் பிரமாணம் செய்வதாகும்.

காதியானி மதஸ்தாபகரான காலஞ்சென்ற மிர்ஜாகுலாம் அஹ்மத்காதியானிக்கும் அமிர்தஸரஸ் மௌலானா தனுவுல்லாசாஹிப் அவர்களிடையிலும் முபாஹலா நடைபெற்றது. அதுபொழுது அவர்களிருவரும் மூன்று வருடகாலத்தைக் குறிப்பிட்டிருந்தனர். அதிற்குறிப்பிடப்பட்ட மூன்றுவருடம் பூர்த்தியடைவதற்கிடையே மிர்ஜாகுலாம் அஹ்மத் காதியானி மரித்துப்போனார். மௌலானா தனுவுல்லா சாஹிப் அவர்கள் இன்னும் ஆண்டவனருளால் ஜீவித்திருக்கிறார்கள். முபாஹலாச் செய்து குறிப்பிட்ட கெடுவிற்குள் மிர்ஜாகுலாம் அஹ்மத் காதியானி மரித்துப்போனதை அக்காலை காதியானிக்கோஷ்டிகளிலுள்ள அறிவாளிகள் பலர் உணர்ந்து அக்காதியானி மதம் தவறானதென்பதாகக்கண்டு, அதைவிட்டும் நீங்கினர். வெகுகாலம்வரை இத் தோல்வியினால் காதியானி மதத்திற்கேற்பட்ட அபகீர்த்தியும், அவநம்பிக்கையும் நீங்காமலிருந்தன.

இதையெல்லாம் அறிந்த காதியானிக்கலீபா பஷீருத்தின் மஹ்மூத் அஹ்மத் தமது பிதாவிற்கேற்பட்ட ஆபத்து தமக்குமேற்பட்டுவிடுமென்ற பயத்தினாலேயே முபாஹலாவிற்குமுன் வர அஞ்சி எவ்வாறாயினும் சூழ்ச்சிசெய்து முபாஹலா நடைபெறாமற் செய்யத் துணிவு கொண்டாரெனத்தெரிகிறது.

காதியானில் முபாஹலா நடைபெறுவதாகக் குறிப்பிட்டதேதிக்கு அஹ்ரார் சபையினரில் பல்லாயிரக்கணக்கானவர்கள் காதியானுக்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிருக்கிறார்கள் என்றும், அவர்கட்குச் சமமாக காதியானிகள் பல்லாயிரக்கணக்கான காதியானிகளைத் திரட்டிக்கொண்டிருக்கிறாரென்றும், இருசமூகத்தினரும் காதியானில் ஒன்று கூடுவதால் பெரும் கலகம் நேரிடக்கூடுமென்றும், காதியானிலுள்ள போலீஸ் அதிகாரிகள், மேலதிகாரிகட்கு ரிபோர்ட்டுகளனுப்பத் தொடங்கிவிட்டார். எனவே அஹ்ரார் சபையினரில் தலைவருட்பட எவரும் காதியானுக்கு செல்லக்கூடாதென 144 தடையுத்தரவு பிறப்பித்துவிட்டனர். காதியானிகட்கு நேரிடும் இவ்வித நெருக்கடியான சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தை உதவி புரியும்படி செய்வதற்கு வைஸிராய் நிர்வாகசபையில் அங்கம் வகித்திருக்கும் காதியானி மிர்ஜா ஜபருல்லாகான் ஒரு பக்கபலமாக இருந்து வருகிறாரென்பது நேயர்களறிந்த விஷயம். அத்தடையுத்தரவைப் புகலாகக்கொண்டு காதியானித் தலைவர் முபாஹலாவை வாபஸ் வாங்கிக்கொள்வதாக அறிவித்துவிட்டார். இது காரணமாக முபாஹலா நடைபெறாமல் தடைபட்டுப்போய் விட்டதெனினும், இதில் காதியானித் தலைவர் பெருந் தோல்வியுற்றாரென்பதை இஸ்லாம் உலகம் நன்கறிந்துகொண்டது.

காதியானில் மௌலானா அபுல் காஸிம் அவர்களின் அறிக்கை

முபாஹலாவுக்காக குறிப்பிடப்பட்டிருந்த அன்று காலை பல முஸ்லிம்கள் காதியான் சென்றிருந்து இரவு அவர்கள் அனைவர்களும் லாகூர் திரும்பி வந்தனர். அவர்கள் கூறியதாவது:—

"காதியானில் முஸ்லிம்களின் திரளான கூட்டத்தின் முன் ஷாஜஹான்பூர் மௌலானா முஹம்மத்காஸிம் அவர்கள் ஆங்கிலத்தில் ஒரு உருக்கமாக பிரசங்கம் செய்தார்கள். அதில் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"இன்று மிர்ஜாயித் அடியோடு நாசமாகி விட்டது. மிர்ஜா மஹ்மூத் மஜ்லீஸே அஹ்ரார் இஸ்லாமை முபாஹலாவுக்கு அழைத்தார்; அஹ்ரார் சபையினர் உடனே அதனை ஒப்புக்கொண்டனர்; மிர்ஜா மஹ்மூதுக்கு தாம் பொய்யாக இருப்பது நன்கு தெரியும். ஆகையாலவர் மரணத்திற்கு பயந்து விட்டார். அவரது இல்லத்தையும் தனது கம்பௌண்டையும் விட்டு வெளிவர தைரியப்பட்டாரில்லை. ஆண்டவன் பேரில் சத்தியமாக அவர் மைதானில் வெளிவந்திருப்பாரேயாயின், அவர்மீது ஆண்டவனின் கோபாக்கினியான வேதனை இறங்கியிருக்கும். மிர்ஜா மஹ்மூத் ஆங்கிலேயரிடம் அபயம் தேடினார். ஆங்கிலேயர் அவரைத் தங்களது அபயத்தில் ஏற்றுக்கொண்டு முபாஹலா நடக்காமல் 144 தடையுத்தரவு போட்டுத்தடுத்து விட்டனர்.

இது மிர்ஜாயி காதியானிகளின் கடைசி வாதமாயிருந்தது. அது முடிவில் உபயோகமற்றதாகத் தீர்ந்தது.

முபாஹலா தடுக்கப்பட்டுப்போனதன் சம்பந்தமாக அஹ்ரார்சபை உபதலைவர் ஹஜ்ரத் சாஹிப் ஜாதா ஸையத் பைஸுல் ஹஸன் சாஹிப் அவர்கள் பட்டாலாவில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்களின் கூட்டத்தின் முன் ஓர் அழுத்தமான பிரசங்கம் செய்தார்கள். அப்

பிரசங்க கர்ஜனையினது ஓசையினால் காதியானிக் கட்டடத்தின் சுவர்கள் நடுங்கிவிட்டன. அவர்கள் கூறியதாவது :—

மிர்ஜாமஹ்மூத் ஓடிவிட்டார். ஆங்கிலேயர் அவர்கட்கு அபயங் கொடுத்துக் காப்பாற்றி விட்டனர். "இன்று முஸ்லிம்களின் பஹிரங்க வெற்றிதினமாகும். ஒவ்வொரு வருடமும் இவ்வெற்றி தினம் கொண்டாடப்படும்" எனக் கூறிமுடித்தார்கள். சபையோர்களால் ஆண்டவனுக்கு ஷுக்ரியா கோஷம் செய்யப் பட்டது.

தடையுத்தரவை அஹ்ரார் தலைவர்கள் மீறினர்.

காதியானித் தலைவர் முபாஹலாவிற்கு பின் வாங்கிவிட்டாலும், காதியானிலுள்ள ஜும்ஆ மஸ்ஜிதில் ஜும்ஆத் தொழுவதற்காக வென்று தடையுத்தரவை மீறி அஹ்ரார் தலைவர்கள் போகத்துணிந்தனர். ஷை தடையுத்தரவில் காதியானைச் சார்ந்த நான்கு மைலுக்குள் அஹ்ரார்கள் நுழையக்கூடாதென்று குறிப் பிட்டிருந்தபடியால், அத்தடை யுத்தரவை மீறிச்சென்ற அமீருஷ்ஷரீஅத் புல்புல பஞ்சாப் மௌலானா ஸெய்யித் அத்தாவுல்லா ஷாஹ் சாஹிப் புகாரீ அவர்கள் கைது செய்யப் பட்டார்கள்.

ஜாமினில் விடுவதாக, அதிகாரிகள் கூறின ரெனினும் மௌலானா அவர்கள் ஜாமினில் வெளிவர மறுத்துவிட்டார்கள். அதன் பேரில் தடையுத்தரவை மீறிய குற்றத்திற்காக அவர் கட்கு 3 மாத சிறைத் தண்டனையும் 200 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

பின்னர், ஹஜ்ரத் மௌலானா முஹம்மத் காஸிம் (ஷாஜஹான்பூர்) தடையுத்தரவை மீறினர்கள். அவருக்கும் 3 மாத சிறையும் 200 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. மீரட் குலாம்நபிஜான் மீறினர். அவருக்கு 3 மாதம் சிறையும், 50 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. மௌலானா காஜி யஹ்ஸான் அஹ்மத் கதீப் (முத்தவல்லி மஸ்ஜித், ஹாஜி, ஷுஜாபாத்) மீறினர். அவருக்கும் 6 மாதம் சிறையும் 100 ரூபாய் அபராதமும் விதிக்கப் பட்டது. "முபல்லிகே இஸ்லாம்" மௌலானா ஷேக்பஷீர் அஹ்மத் சாஹிப் (இவர் முன் காதியானிப் பிரசாரகராயிருந்தவர்) மீறினர். இவருக்கு 3 மாதம் சிறையும் 200 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

வாரம் ஒருவர் சிறைசெல்ல
அஹ்ரார்கள் முடிவு

பின்னர் தடையுத்தரவைமீறி வாரம் ஒரு அஹ்ரார் தொண்டர் காதியானுக்குள் பிரவே சிப்பதென்றும் அவர் கைதி செய்யப்பட்டால் தண்டனை யடைவதென்றும் முடிவுசெய்யப் பட்டு அதன்படி செல்ல ஆரம்பித்தனர்.

144 தடை யுத்தரவு வாபஸ்

பிறகு காதியானுக்குள் அஹ்ரார்கள் நுழையக்கூடாதென்று அஹ்ரார்கட்கு விதிக்கப்பட் டிருந்த 144 தடையுத்தரவை அரசாங்கத்தினர் வாபஸ் பெற்றுக்கொண்டனர் என்று தண் டோரா மூலமறிவிக்கப்பட்டது.

இதிலிருந்து காதியானுக்குள் அஹ்ரார்கள் நுழையவும் ஜாமிஆ மஸ்ஜிதே மஹ்மூதியாவில் ஜும்ஆத் தொழுகை நிறைவேற்றவும் வழி திறந்து விடப்பட்டது. இச்சம்பவ நிகழ்ச்சி யால் காதியானிகளுக்கு பெருந்தோல்வி ஏற் பட்டுப்போயிருக்கிறது.

மைடானில் நடந்த தர்க்கத்தில்
காதியானிகளின் தோல்வி

மைடானில் (சுமட்ரா) காதியானி லாகூர் பார்ட்டி மௌல்விகளுக்கும், இவ்விடமுள்ள ஸுன்னத்து ஜமா அத்து மௌல்விகளுக்கும் சில காலமாகத் தர்க்கம் நடந்துகொண்டே இருந்தது. முடிவாக நேரில் இருதரப்பு மௌல்விகளும் விவாதிப்பதென்று முடிவு செய்யப்பட்டு லாகூர் மௌலவிகள் 12 பேர் களும் ஸுன்னத்து ஜமா அத்து மௌலவி கள் 51 பேர்களும் லாகூர் பார்ட்டியைப் பின்பற்றிய இவ்விடமுள்ள சிறு கோஷ் டியினரும், ஸுன்னத்து ஜமாஅத்து கூட்டத் தாரும் ஒன்றுகூடினர்கள். இரண்டு நாள் வரை தொடர்ந்து விவாதம் நடந்து முடிவில் காதி யானி லாகூர் பார்ட்டியினர் ஸுன்னத்து ஜமா அத்து மௌலவிகளின் கேள்விகட்குப் பதில் கூறமுடியாமல் திகைத்துத் திணறி தோல்வி யுற்று அவமானமடைந்தனர். பின்னர் காதி யானி லாகூர் பார்ட்டியினரும் அவர்களைப் பின் பற்றிய இவ்விடத்திய சிறுகோஷ்டியினரும் 'காபிர்' களெனத் தீர்மானிக்கப்பட்டது.

நடைபெற்ற தர்க்க வாதத்தின் விவரமும் விவாதித்த இருதரப்பு மௌலவிகளின் பெயர்

களும் காதியானிகள் 'காபிர்' என்ற தீர்மானமுமடங்கிய விளம்பரம் பதினாயிரக்கணக்காக அச்சிடப்பட்டு இங்குள்ள சுற்றுப் புறநாடுகளுக்கும், மற்றும் பல இடங்களுக்கும் வினியோகம் செய்யப்பட்டது என்று மைடான், லோசியூமவெ. நெ. 48, பியூகான் ட்ஜோயின்டா, ஜெனரல் மெர்ச்சண்ட் ஜனாப் எம். முஹம்மது இஸ்மாயில் சாஹிப் எழுதியதோடு ஷை விளம்பரத்தையு மனுப்பியுள்ளார். ஷை விளம்பரம் பிரஞ்சு எழுத்தாகவும், மலாய் பாஷையாகவுமிருப்பதால், அதை மொழிபெயர்க்க சென்னையில் சரியான ஆள் கிடைக்கவில்லை.

சிதம்பரத்தில் சங்கஸ்தாபனம்

சிதம்பரம் லால்கான் மஸ்ஜிதில் 25-1-36 மாலை 7-மணிக்கு ஓர் மகாநாடு நடைபெறுமென ஏற்கெனவே நாலாபக்கங்களிலும் துண்டு பிரசுரம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பே ஏராளமான முஸ்லிம்கள் வந்து குழுமியிருந்தனர்.

பேஷ் இமாம் B. அப்துல் வாஹித் சாஹிப் அவர்களால் கிராஅத் ஓதப்பட்டு சபை ஆரம்பமாயிற்று. இம்மகாநாட்டிற்கு ஆலி ஜனாப் ரிடையர்ட் தாசில்தார் M. முஹம்மத் தாஜுதீன் சாஹிப் பகதூர் அவர்களை தலைமை வகிக்கும்படி முறைப்படி பிரேரேபித்தும் ஆமோதித்தும் ஏகமனதாய் தேர்ந்தெடுக்கப்பட்டது.

பிறகு மதுரை ஜனாப் N. D. அப்துல் அஜீஸ் சாஹிப் அவர்களால் உருதுகவிகள் பாடப்பட்டது.

அக்கிராசனர் தக்பீர் முழக்கத்துக் கிடையே எழுந்து இஸ்லாத்தின் ஜெகஜ்ஜோதி நாலாபாகங்களிலும் பரவி வருவதைப்பற்றியும், தீண்டாதார் என்றழைக்கப்படுபவர்கள் டாக்டர் அம்பேத்காரின் கோரிக்கைக் கிணங்க மதமாற்றம் செய்ய நிச்சயித்து அவர்களிற் சிலர் இஸ்லாம் மதத்தைத் தழுவ தயாராயிருப்பதாயும், அதற்காக முஸ்லிம்கள் அவர்களைப் பராமரித்து ஆதரிக்கவும் அவர்களுக்கு கல்வி கற்பித்து கொடுக்க வசதி செய்து வைக்கவும், ஆங்காங்கு இதற்காக சங்கங்களை ஸ்தாபித்து ஷை காரியாதிகளை நடத்த வேண்டுமென்றும் இது சமயம் கல்வி கற்ற உலமாக்களும், வாலிபர்களும், பிரசாரகர்களும், ஐஸ்வரியம் பெற்ற தனவந்தர்களும், முன்வந்து வேலைசெய்ய த[illegible] ஏற்பட்டிருப்பதால் எல்[illegible]ரும் [illegible] வேண்டுமென்றும் முஸ்லிம்கள் நாகரிகம், மார்க்க கல்வி, லௌகீகக் கல்வி, கைத்தொழில், விவசாயம் முதலிய சகல துறைகளிலும், முன்னணியாகநின்று ஏனையோர்களுக்கு கற்பித்துக்கொடுத்ததை எவர்களாலும் மறக்கமுடியாது என்றும், பஞ்சமர்கள் தீண்டாமை ஒழியவேண்டுமானாலும் சமத்வம், சகோதரத்வம், சுதந்திரம், ஆண்டவனிடத்தில் முக்திபெறுதல், இவைகள் அடையவேண்டுமானாலும் இஸ்லாத்தைத் தழுவுவதைத் தவிர வேறுகதிமோக்ஷம் அவர்களுக்குக் கிடையாது என்றும்தெளிவாய் எடுத்துரைத்தார்கள்.

பிறகு மதுரை ஜனாப் N. D. அப்துல்அஜீஸ் சாஹிப் அவர்கள் சொற்பெருக்காற்றினார்கள்.

ஜனாப் மௌலானா மௌல்வி நூ. அப்துல் வஹ்ஹாப் சாஹிப் அவர்கள் விக்கிரவாண்டி ஆதிதிராவிடர்கள் இஸ்லாத்தைத்தழுவ இருக்கும் விஷயத்தை சபையோருக்கு எடுத்துச்சொல்லி அவர்களுக்கு உபகாரம்செய்யும் விஷயமாக குர்ஆன் ஆயத் மூலமாகவும் ஹதீஸ் மூலமாகவும் மனதில்படும்படி உருக்கமான பிரசங்கம்செய்தும் அதற்கான ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும் சிதம்பரம் சென்டிரலாயிருப்பதால் இவ்விடத்தில் ஹெட் ஆபீஸ் சங்கம் ஒன்று அமைக்கவேண்டுமென்றும் இன்னும் பல விடங்களையும்கூறி அரிய பிரசங்கமொன்று செய்தார்கள்.

இவ்விஷயத்தை யாவரும் அங்கீகரித்து சங்கம் ஸ்தாபிக்க முடிவுசெய்து அதற்கான உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்தார்கள்.

சங்கம் செய்துவரும் காரியாதிகள் விபரமாகக் கூறப்பட்டு அவைகள் சங்கத்தின் நோக்கங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டு கூட்டம் முடிவடைந்தது.

208346.

யூனனி சித்த வைத்தியசாலை:—மாயவரம் பிரபல ஹக்கீமும் டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பருமாகிய ஹக்கீம் M. A. ஷம்ஸுத்தீன் சாஹிப் அவர்களிடமிருந்து ஒரு காலண்டர் வரப்பெற்றோம். அதில் இந்தியாவிலுள்ள சிறந்த கட்டிடமாகிய தாஜ்மஹாலின் அழகிய தோற்றம் பலவர்ணங்களில் பொறிக்கப்பட்டனவாகவும் பார்ப்பதற்கு நேர்த்தியானதாகவும், மாதம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாகவும் அதற்கு பக்கத்தில் அவர்களது வைத்தியசாலையில் தயாரிக்கப்படும் பெருங்காயலேகியத்தின் குணம் மகிமை விசேஷமாக விளக்கப்பட்டிருப்பதுடன் அவ் வைத்தியசாலையில் சிறந்த லேகியங்கள், ஹல்வாக்கள், தைலங்கள் ஷர்பத்தினுசுகள் முதலியன தயாரிக்கப்படுவதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

முஸ்லிம் ஜனநாயக சபை:—காயல்பட்டணம் முஸ்லிம் ஜனநாயக சபையாரிடமிருந்து இங்கிலீஷ், அறபி, தமிழ் இம்மூன்று தேதிகளையும் ஒவ்வொரு மாதமும் ஒரே ஷீட்டில் காண்பிக்கக்கூடியதாகவும் முக்கிய விசேஷ தினங்களுக்கு பிரத்தியேக அடையாளமிடப் பட்டனவாகவும் அதன் மத்தியில் மதீனாமுனவ்வறாவின் அழகிய தோற்றம் வரைய பெற்றதாகவுமுள்ள காலண்டர் ஒன்று வரப்பெற்றோம்.

N. B. அப்துல் கபூர்:—திருச்சி பாலக்கரை ஊதுபத்தி வியாபாரியாகிய ஜனாப் N. B. அப்துல்கபூர் அவர்களிடமிருந்து மாதம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியனவும் மூன்று தேதிகளை 3 வர்ணங்களில் காட்டக்கூடியதாகவுமுள்ள காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அதில் அவர்களது வியாபாரச் சாலையில் தயாரிக்கப்படும் ஊதுவத்தி செண்டு ஆயில் இவைகளின் விபரங்களும் அவைகளினாலேற்படும் பிரயோசனங்களும், கொளும்பிலுள்ள இவர்களது பிராஞ்சு ஆபீஸின் அட்ரசும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

S. P. ஹபீபிய்யா ஜெம்ஸ் கம்பெனி:—சென்னை முத்தியால்பேட்டை, அங்கப்ப நாய்க்கன் தெரு, 222 நம்பரிலுள்ள பிரபல இரத்தனக்கற்கள் வியாபாரியாகிய எஸ். பி. ஹபீபிய்யா கம்பெனியாரிடமிருந்து மாதம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடிய காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அதில் தங்கள் வியாபார ஸ்தலத்தில் கிடைக்கும் உயர்தரமானவும், நடுத்தரமுடையனவும், மட்டமானவுமான கற்கள் சகாயமான விலைக்குக் கிடைக்குமென குறிப்பிடப்பட்டிருக்கிறது.

K. A. ஷேக் யூசுப் அண்டு கோ:—சிங்கை மார்கட் ஸ்டீரீடிலுள்ள பிரபல வியாபாரியும் கமிஷன் ஏஜண்டுமாகிய மெஸ்ஸர். K. A. ஷேக் யூசுப் அண்டு கம்பெனியாரிடமிருந்து அழகிய காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அது தினம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாகவும் அதற்கு இறபுறமும் அவர்களது வியாபார சரக்குகள் பொறிக்கப்பட்டனவாகவும் போஸ்டுபாக்ஸ் நம்பர் வரையப் பெற்றனவாகவுமிருக்கிறது.

அல்பராஹீனுற்றப் பானிய்யா பிற்றத்தி அலல்காதியானிய்யா

இந்த அரபி நூல், காதியானிக் கொள்கைகளின் கெடுதிகளை எடுத்து விளக்கி, அது சம்மந்தமாய் நம் சுத்த சத்திய இஸ்லாம் மார்க்கம் எவ்வாறான தீர்ப்பளித்திருக்கிற தென்னும் விபரத்தை குர்ஆன் ஹதீதுகளின் தக்க மேற்கோள்களுடன் அழகிய முறையில் எழுதப்பட்டிருக்கிறது. இதனை வாசிப்பது கொண்டு காதியானிகள் பிதற்றித் திரியும் சன்மார்க்க முரணானவைகள் சம்மந்தமாய் நமது சன்மார்க்கம் யாது தீர்ப்பளித்திருக்கிறதென்பது இனிது புலனாகும்.

இஃது சென்னை பிரபல முப்தீ மௌலானா மௌலவீ அல்ஹாஜ் முஹம்மது தமீம் சாஹிப் அவர்களால் எழுதப்பட்டு சென்னை, காயல்பட்டணம் முதலிய பற்பல ஊர்களின் உலமாக்களின் கையெழுத்துடனும், ஹிஸ் ஹோலினஸ் மௌலானா மௌலவீ அல்ஹாஜ் காரீ ஹாபிஸ் சுல்த்தானுல் வாயிஜ், முஹம்மது அப்துல் அலீம் சாஹிப் காதிரீ சித்தீகீமீரட்டி அவர்களின் மதிப்புரையுடனும் வெளிவந்திருக்கிறது.

இது சென்னை, புதுப்பேட்டை பிரபல வர்த்தகரும், தனவந்தருமான மெஸர்ஸ் A. P. M. செய்யித் இப்ராஹீம் சாஹிப் & பிரதர், அவர்களது பொருளுதவியைக் கொண்டு அச்சிடப்பட்டிருப்பதால் தபால் செலவுக்காக ஒரு அணா ஸ்டாம்பு அனுப்புவர்கட்கு ஒரு பிரதி அனுப்பிவைக்கப்படும்.

இச்சிறந்த 'ரிஸாலா' அறபி பாஷையி லிருப்பதால் அறபி தெரிந்தோர் இதனைபெற்று வாசித்துப் பயன் பெறுவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

ஹிபாஜத்துல் இஸ்லாம் ஏழாவதாண்டின் வாழ்த்து

காரைக்கால்

அமுர்தகவி. அ. சாயபு மரைக்காயரால் எழுதப்பட்டது

பஞ்சரத்தினக் கலிவிருத்தம்

புகழுக் குரியப் புதியவ னருளால்
நிகழும் ஏழாவ தாண்டு நிறைந்துத்
திகழும் ஹிபாஜத்துல் இஸ்லாந் தநயன்
மகிழும் படிமிசை மலர்ந்தன வம்மோ ?

வேதம் வாய்மைகள் விளக்கியே மக்கட்குப்
போதம் புரிதற்காய் பூமீதுப் பிறந்து
நீதம் வழங்கும் ஹிபாஜத்துல் இஸ்லாம்
சீதம் போல்நீ சிறந்து வாழியரோ

சுயநலக் காதியான் சூட்சிகள் யாவும்
பயனற்று பாதாளம் புக்கிடச் செய்தோய்
ஜெயவீர சிங்கம் ஹிபாஜத்துல் இஸ்லாம்
உயர்வாய் யென்றும் உலகில் வாழியரோ

சுத்தமாய் சத்திய சுருதி விதியை
இத்தரை மக்கட் கெழிலா யிசைக்கும்
வித்தகம் நிறைந்த ஹிபாஜத்துல் இஸ்லாம்
கத்தன் அருளால் தகித்து வாழியரோ

திங்கள் பிளந்த திருநபி பொருட்டால்
எங்கும் சிறந்து இறுதிநாள் வரையில்
அங்கந் திகழ ஹிபாஜத்துல் இஸ்லாம்
தங்கம் மயமாய்த் தாணில் வாழியரோ

(வஸ்ஸலாம்.)

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Sab
Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.